# நாதம்




நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலய
ஆசிரிய பயிற்சி மத்திய நிலையம்
நானுஓயா
2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தேசிய கல்வி நிறுவக ஆசிரிய பயிற்சிநெறி நிகழ்ச்சித் திட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதம்

# 2010

ஆசிரிய பயிற்சிக் கற்கைநெறி

தேசிய கல்வி நிறுவகம்

நு/ நாவலர் தமிழ் மகா வித்தியாலய

மத்திய நிலையம்

நானுஓயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மலையக வளர்ச்சிக்கு

வித்திட்டு வளர்த்திட்ட

எங்கள் கல்வி சமூகத்திற்கு

இந்நூல் சமர்ப்பணம்

ஆசிரிய பயிற்சிக் கற்கைநெறி – 2010

தேசிய கல்வி நிறுவகம்

நானுஓயா நாவலர் மத்திய நிலைய

ஆசிரிய பயிலுநர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

மலையக மக்களின் இருப்பு குறித்து சிந்திக்கின்ற வேளையில், பல்வேறு விதமான சமூக அசைவியக்கங்களின் ஊடாக அண்மைக் காலங்களில் கல்வி குறித்து ஏற்பட்ட மறுமலர்ச்சியினைக் குறிப்பிடலாம். நீண்ட கால விவாதங்கள், சர்ச்சைகளுக்குப் பின்னரான ஒரு வெற்றியாகவே பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான தமிழ் ஆசிரியர் நியமனம் 3179 ஆகும்.

எம்மவர்கள் எம்மவர்களுக்குக் கற்பிக்கும் ஒரு மாபெரும் கல்வியியல் பரிணாமமாக இதைக் கருதுகின்றேன். அதிகளவான தொழிலாளர்களுடைய பிள்ளைகள் ஆசிரியர் நியமனங்கள் பெற்றதினை ஒட்டு மொத்த சமூகத்தின் பெருமையாகக் கருதுகின்றேன். அவர்களும் தேசியக் கல்விப் பாதையில் தம் தொழில் திறனை வளர்த்துக் கொள்ளப் பல்வேறு விதமான பயிற்சி நெறிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இப் பயிற்சி நெறியினை அவர்கள் திறம்பட வெற்றிகரமாக முடித்துத் தரமான ஆசிரியர்களாக உருப்பெற என் வாழ்த்துக்கள்.

இப்பயிற்சி நெறியின் ஒரு இணைப்பாடவிதானமாக இவ்விதழ் வெளிவருவது வரவேற்கத்தக்கது. கல்வியில் மலையகக் கல்வி குறித்து இன்னும் ஆக்கபூர்வமாகத் தரமான கருத்துக்கள் வெளிவர வேண்டும்.

வாழ்த்துக்கள்.

திருமதி அனுஷியா சிவராஜா
மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணிப்பாளரின் செய்தி

ஒரு சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். நாளைய சமூகத்தின் நாயகர்களான இன்றைய மாணவர்களை நவீன சமூகத்திற்குப் பொருத்தமான தலைவர்களாக உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாக இருக்கின்றது. ஆசிரியர் என்பவர் வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியேயும் பல்வேறு பிரச்சினைகள், சவால்களை எதிர்கொள்ள வேண்டியவராக இருக்கின்றார். எனவே அவற்றை வெற்றிகரமாக எதிர்நோக்கி தேசிய கல்விக் குறிக்கோள்களை எய்தக் கூடிய வகையில் மாணவர்களை வழி நடாத்திச் செல்லும் பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்கள் திறன் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

எனவே, எமது பாடசாலைக் கட்டமைப்பில் உள்ள ஆசிரியர்கள் அனைவரையும் வகுப்பறைக்குப் பொருத்தமானவர்களாக மாற்றியமைக்கும் நோக்கில் தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்தித் துறையானது கல்வியமைச்சின் அனுசரணையுடன் 7030 ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கற்கை நெறியொன்றினை 42 பிராந்திய நிலையங்களின் ஊடாக நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் வகுப்பறைக்கு அத்தியாவசியமான வாண்மை விருத்திப் பாடங்களைக் கற்று அறிவு, திறன், மனப்பாங்கு, வாழ்க்கைப் பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொண்ட ஆசிரியர்கள் தமது ஆக்கத் திறன்களை வெளிப்படுத்துமுகமாக வெளியிடப்படுகின்ற இந்தச் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் யான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு ஆசிரியர் ஆக்கத்திறன் வாய்ந்தவராக இருக்கும்போது தான் கற்பித்தல் பூரணத்துவமடைகின்றது. "மாணவர்கள் வெற்றுப்பாத்திரங்களல்ல" அவர்கள் ஏதேனும் திறமையைக் கொண்டவர்களாகவே பாடசாலையில் காலடி எடுத்து வைக்கின்றனர். எனவே அவர்களது திறமைகள் கண்டறியப்பட்டு செப்பனிடப்பட வேண்டும் என்பது புரூனர், விகொட்ஸ்கி போன்ற கட்டுருவாக்கக் கொள்கையாளர்களின் கருத்தாகும். மாற்றமடைந்து கொண்டு செல்கின்ற மாணவர்களது தேவைகள், திறன்கள் என்பவற்றை இனங்கண்டு ஆக்கத்திறனுள்ள சமுதாயமாக அவர்களை உருவாக்குவதற்குரிய ஆற்றலும், திறனும் ஆக்கதிறனுள்ள ஆசிரியர்களாலேயே சாத்தியப்படும்.

மேலும் ஆசிரிய மாணவர்களின் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்குக் களமாய் அமைகின்றது இந்தச் சஞ்சிகை. உள்ளத்து உணர்வுகளை நேரான முறையில் வெளிப்படுத்தி தாம் பெற்ற கல்வியின் பயனை ஏனையோரும் அனுபவிக்கக் கூடிய வகையில் தரமான ஆக்கங்களை வடிவமைத்துள்ள எனது அன்பிற்கினிய ஆசிரிய மாணவர்களுக்கும், அவர்களை வழி நடாத்திய இணைப்பாளர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இக்கற்கை நெறி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட தேர்ச்சிகளுடன், நாட்டின் எதிர்காலச் செல்வங்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து நவீன உலகிற்கேற்ற வகையில் அவர்களை உருவாக்கக் கூடியவாறு பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

மேலும் இக்கன்னி முயற்சி பூரண வெற்றிபெற்று இவ்வாறான பணிகள் மென்மேலும் தொடர வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

கலாநிதி. (திருமதி) லிலானி அமரசிங்ஹ
பணிப்பாளர்
நிறுவன அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message From the Director

Teacher as the prime group in the community who have been throughout the history of Sri Lanka since the Pancha Maha Balavegaya are given pride of place with equal recognition and status with other groups of the society.

As usual we celebrated the "World Teachers Day - this year too. The theme identified for this year by the Education International is - **Recovery Begins with Teachers**. We know in the recent past many countries were subjected for conflict and natural related disasters. However 18.5 million children are in refuge status in various countries due the emergencies.This theme **Recovery Begins with Teachers** - is also significant to Sri Lanka.

In similar, as plantation sector teachers should think what could be done for the recovery of the poor children from the working class related problems and issues which serve as impediments in their achievement. Teachers like you should play a very important role in the plantation sector. Therefore, through this weekend training Programme the Ministry of Education and National Institute of Education are providing you with better Knowledge, skills and attitude in order to serve them with confidence and courage.

Ministry of Education is the process of developing and Education Act to streamline all educational activities to strengthen the provision of free and compulsory quality education to the nation. Here to more emphasis is given to empower the teachers, enhance their professional qualification and capacities to provide better services in the system so that students in schools will have access to quality learning which will result in producing high level achievements.

I take this opportunity to wish all the teachers are at the Nanu - oya Centre very best and assure that I shall commit to do every thing possible to support and assist their responsibilities to the utmost satisfaction of the entire school community.

Mr.S. Muralitharan
Director - Teacher Education Administration
Ministry of Education
ISURUPAYA
Battaramulla.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message From the Director



Teachers as the prime group in the community who have been throughout the history of Sri Lanka, so the Guru's role (Guru Ma Bala Yesa) are given a grade of [illegible], recognition and status with other groups of the society.

As usual we celebrated the "World Teachers Day" this year too. The theme identified for this year by the Education International is Recovery Begins with Teachers. We know in the recent past the world was subjected to pandemic and natural related disasters. However 463 million children are unable to learn in various countries due to the emergencies. This theme Recovery Begins with Teachers is also significant to Sri Lanka.

In future, as plantation sector teachers should think what could be done for the recovery of the pupils' life amidst the various issues related problems and issues which we have to consider in their achievement. Teachers you should play a very important role in the plantation sector. Therefore, through this week end training Programme the Ministry of Education and National Institute of Education are providing you with better Knowledge, skills and attitudes to serve them with confidence and courage.

Ministry of Education is the process of developing and Education Act to streamline. The educational activities to strengthen the provision of free and compulsory quality basic education for students. Here a more emphasis is given to empower the teachers, enhance their professional qualifications and capacities to provide better services to the students. We assure that students in schools will have a better quality learning which will result in promoting high level achievements.

Through this message I wish all the Teachers and wish them every success and assure that I shall commit to do every thing possible to support and promote [illegible] for the ultimate good of the entire school community.

Mr. S. [illegible]
Director, Teacher Education Administration
Ministry of Education
ISURUPAYA
Battaramulla.



# ஆசிச் செய்தி

இளம் ஆசிரியர்களாக மலையகப் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்களின் ஒரு தொகுதியினர் தமது முதலாவது பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறுகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. நானுஓயா பயிற்சி நிலையத்தில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நடந்த பயிற்சி இவர்களின் கற்றல் ஆளுமையை நல்ல முறையில விருத்தி செய்வதற்கு ஒரு அடித்தளத்தினை வழங்கியிருக்குமென்று எண்ணுகின்றேன்

.

உலகிலுள்ள கணிசமான சேவைகளை ஒரு சில வாரங்கள் அல்லது மாதங்களில் பெற்றுக்கொள்ளும் பயிற்சியின் பின்னர் மேற்கொள்ள முடியும். ஆனால், கற்பித்தல் அவ்வாறானதல்ல. திறமையாகக் கற்ற பின்னர் அத் திறமை பெற்றிருந்தாலும், அவ்வாறானவர்கள் யாவரும் தான் பெற்றுக்கொண்ட திறன்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் திறனும் பெற்றுள்ளார்கள் என்று கூற முடியாது. தம்மிடம் இருக்கும் திறனை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க நீண்டகாலப் பயிற்சி அவசியமாகின்றது. பயிற்றுவிக்கப்படுகின்ற மாணவர்களின் குணநலன்கள், அவர்கள் சார்ந்திருக்கும் சமூகக்கட்டமைப்பு, பாடசாலை அமைந்துள்ள சூழல் என்பவற்றைப் புரிந்து சேவையாற்றும் ஆசிரியர்களே வெற்றிகரமான ஆசிரியர்களாக உள்ளனர்.

இத்தகைய உள்நோக்கங்களுடன் உருவாக்கப்பட்ட பயிற்சியை முடித்துவிட்டதனால் மட்டும் அல்லது பயிற்றப்பட்டுவிட்டோம் என்பதனால் மட்டும் சிறந்த ஆசிரியராக இருந்துவிட முடியாது. ஆசிரியர்கள் தினமும் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டவர்கள். "வாசிக்கும் ஒருவனே படிப்பிக்கத் தகுதியானவன்" என்பதையும் யாவரும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மலையக சமூகத்தில் ஆசிரியர்களின் சேவை மிகக் கவனமாகச் செயற்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தான் மிக மிகக் கவனமான ஆசிரியர் என்பதை நிரூபிக்க வேண்டும். மேலும் சிறந்த சமூகக் கட்டமைப்பின் உருவாக்கத்திற்காகச் செயற்படுவோம் என்று வாழ்த்துவதுடன், உங்களை முன்மாதிரியாகக் கொண்ட தலை சிறந்த மலையக சமூகம் எதிர்காலத்தில் உருவாகும் என்ற நம்பிக்கையுடன் இந்நிகழ்ச்சி இனிதே நிறைவடைய வாழ்த்துகின்றேன்.

கலாநிதி A.S.சந்திரபோஸ்
BA (Hons) MA (PDN) M.Phil, Ph.D (JNV- New Delhi)
சிரேட்ட விரிவுரையாளர்
சமூக கற்கைகள் துறை
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தின் வாராந்த ஆசிரியர் பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டத்தின் 2010 - 2012 ஆம் கல்வியாண்டின் ஓராண்டுப் பூர்த்தி இப்பயிற்சி நெறியின் மத்திய நிலையமான நு/ நாவலர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நிறைவெய்தியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்பயிற்சி நெறிக் காலத்தின் போது, ஆசிரியப் பயிலுனர்கள் தம் தொழில் சார்ந்த பாடநெறிகளினூடாகப் பரந்ததோர் அறிவைப் பெற்றிருப்பார்கள் என்பது திண்ணம். இதற்காக இப்பயிற்சி நிலையத்தைச் சார்ந்த விரிவுரையாளர்கள் சிரத்தை எடுத்து ஆசிரிய மாணவர்களைப் பயிற்றுவித்திருப்பது மனங்கொள்ள வேண்டியதொன்றாகும்.

"அனுபவங்களை, அனுபவங்களால், அனுபவங்களினூடாக அளிப்பதே கல்வி" எனும் உயரிய கல்விச் சிந்தனையைக்கல்வியுலகிற்கு எடுத்துக் கூறிய கல்விச் சிந்தனையாளர் ஜோன் டூயி கூறுமாப்போல், இப்பயிற்சி நிலையம் சார்ந்த ஆசிரியப் பயிலுனர்கள் தம் தொழில் சார்ந்த பாடங்களினூடான அறிவு , தொழில் வாண்மைத்துவம் பற்றிய அறிவு மற்றும் விழுமியப் பண்புகளைப் பெற்று வெளியேறுகின்றனர்.

மேலும் இப்பயிற்சி நெறிக் காலத்தின்போது, ஆசிரிய மாணவர்கள் தமது பயிற்சி நெறி தவிர்ந்த இரண்டு முனைப்பான கைங்கரியங்களில் சிறப்புடன் ஈடுபட்டு வெளியேறுகின்றமை மனதுக்கு இதமளிப்பதாயுள்ளது.

01. கல்விச் சுற்றுலா
02. "நாதம்" மலர் வெளியீடு

ஓர் ஆசிரியர் எனப்படுபவர் சிருஸ்டிகர்த்தா ஆவார்; எதனையும் தம்முள் உள்வாங்கிக் கொண்டு, அதனூடாக நல்ல வெளிப்பாடுகளை உணர்வுபூர்வத்துடன் பிரதிபலிக்கச் செய்வோனே ஆசிரியன். அந்த வகையில் மேற்குறித்த இரண்டு கைங்கரியங்களிலும் எமது ஆசிரியப் பயிலுனர்கள் வெற்றிகரமாக ஈடுபட்டுப் பல புதிய அனுபவங்களைப் பெற்றுள்ளனர் என்பது கண்கூடு. இப்புதிய அனுபவங்களைத் தன்னகத்தே சுமந்து கொண்டு, பள்ளி செல்லும் அவர்களின் வரவை ஆவலுடன் எதிர் கொள்ளும் வாடிக்கையாளர்களான மாணவர்களுக்கு, இது போன்ற செயற்பாடுகள் இலாபம் தரும் செயலாகவே என்றுமிருக்கும் என்பது என் நம்பிக்கை.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்பயிற்சி நெறி சார்ந்த ஆசிரியப் பயிலுனர்கள் நன்கு புடம் போடப்பட்டு மீளுருவாக்கம் செய்யப்பட்ட மாணிக்கங்களாகவே வெளியேறுகின்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. இதன் வெளிப்பாடுகள் நிச்சயமாக அவரவர் பாடசாலைகளில் மாத்திரமல்லாது சமூகப் பிரக்ஞை மிக்கதாகவுமிருக்கும்.

அவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானர்கள். இத் தனித்துவங்களினூடாக அவர்கள் பாடசாலையில் பவனி வர வேண்டும். இத்தரணியில் அவர்கள் மேலும் பல கற்று, தம் வாழ்வைச் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வோராண்டுப் பயிற்சி நெறி இத்துடன் இங்கு நிறைவுற்றாலும், மேலும் அவர்கள் எதிர் கொள்ள இருக்கின்ற பாடத்துறை சார்ந்த பயிற்சி நெறியும் சிறப்பாக அமைய என்றும் என் நல்லாசிகள் அவர்களுக்கு உரித்தாகட்டும்.


வளமான வாழ்வு என்றும் அவர்களுக்குக் கிட்டுவதாகுக.

எம்.விஸ்வநாதன்
இணைப்பாளர்
வாராந்த ஆசிரியர் பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டம்
தேசிய கல்வி நிறுவகம்
நு/நாவலர் தமிழ் மகா வித்தியால்ய மத்திய நிலையம்
நானுஓயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் வாழ்த்துச்செய்தி

நானுஓயா ஆசிரியப் பயிற்சி நிலையத்தில் இருந்து 2010 ம் ஆண்டு ஆசிரியப் பயிற்சியைத் தொடரும் ஆசிரியர்களால் வெளியிடத் தீர்மானித்துள்ள "நாதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் மட்டற்ற மகிழ்சசியடைகிறேன். இவ்வாறு வெளிவரும் சஞ்சிகை காலத்தால் பேசப்படுவனவாய் இருக்க வேண்டுமேயன்றி, காலத்தைப் பேசியதாய் இருக்கக் கூடாது. அந்த வகையில் எமது "நாதம்" சஞ்சிகை காலத்தால் பேசப்படும் என்பதில் எனக்கு இருவேறு கருத்தும் கிடையாது.

2007 ம் ஆண்டு மலையகக் கல்வி வரலாற்றில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்கி வைத்த ஆண்டாகக் கருதக் காரணம் கல்விப் புலத்துடன் பெருந்தொகையான ஆசிரியர்களான 3179 பேர் ஒரேயடியாக உட்பிரவேசித்தமையாகும்.

ஏறத்தாழ 200 வருட கால வரலாற்றைக் கொண்ட மலையக மக்களின் கல்வி நிலைமையைத் தற்போது எமது தேசிய கல்வி நிலைமையோடு ஒப்பிடும் போது, ஏறக்குறைய 40 வருடங்கள் பின்னோக்கியதாகவே காணப்படுகின்றது. 1947 ஆம் ஆண்டு இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தையான C.W.C கன்னங்கரா மலையகக் கல்வியின் பொறுப்பை இந்தியாவே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறிய கூற்று இப்பின்னடைவிற்குக் கட்டியம் கூறிய கூற்றாகும். 1977 க்குப் பின் மலையகப் பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசால் சுவீகரிக்கப்பட்டது. அதன் பின்பே மலையக மாணவர்களின் கல்வி வாய்ப்புக்கள் விரிவடையத் தொடங்கியது எனலாம்.

காலத்துக்குக் காலம் ஆசிரிய நியமனங்கள் பல்வேறு வழிகளில் வழங்கப்பட்ட போதும், மலையகத்தைப் பொறுத்தமட்டில் தொகை அடிப்படையில் குறைந்த எண்ணிக்கையில் வரையறுத்து ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. இருந்த பொழுதிலும் கடந்த 2007 ஆம் ஆண்டு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரிய ஆசிரியைகளின் அறிவும் ஆற்றலும், சமூகப்பார்வையும் விசாலமான நோக்கைக் கொண்டது என்று கூறலாம்.

கல்வி அறிவின்றி ஒரு சமூக நிர்மாணத்தை முன்னெடுக்க முடியாது என்பார்கள். ஒரு சமூகத்தை அழிக்க வேண்டுமாயின், அச்சமூகத்திற்கு வழங்கப்படும் கல்வியை எடுத்து விடுங்கள்; அது தானாகவே அழிந்து விடும் என்பார்கள். இன்றைய உலகில் பல நாடுகள், புராதன மக்கள் கூட்டங்கள் தம் அடையாளங்களை இழந்துள்ளதுண்டு. அதற்குக் கல்வி வழங்கப்படாமையே காரணமாகும்.

எனவே எமது மலையக சமூகம் வரலாற்றில் வாழும் சமூகமாக இருக்க வேண்டுமெனின், அவர்களுக்கு வலுவான கல்வி வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்பதனை உறுதியாக நாம் நம்ப வேண்டும். அதற்கான கல்வி வாய்ப்புக்கள் மேலும் விரிவாக்கப்படல் வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். இதனை நாம் அனைவரும் சிரமேற் கொண்டு செய்வோம் என்ற உறுதிப்பாட்டுடன், இவ் "நாதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தலைவர்
செல்வகுமார்.
நாதம் மலர் வெளியீட்டுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரின் வாழ்த்துச்செய்தி

இரண்டு நூற்றாண்டைத் தொட எத்தனித்துக் கொண்டிருக்கும் எமது மலையக சமுதாயம் எத்தனையோ சவால்களைக் கடந்து வந்துள்ளமை வெறுமனே விறகு வெட்டச் சென்றவனுக்குப் புதையல் கிடைத்தது போல் இல்லை. எத்தனையோ போராட்டங்கள், எத்தனையோ இழப்புக்கள் என்றெல்லாம் கடந்து வரலாற்றில் சுவடுகள் பதித்துக் கொண்டிருக்கிறது எம் தாயகம்.

சுவடுகள் எழுதிய
மலையகம்
ஓய்ந்து போவதில்லை
ஏழை வீடுகளில்
கூழ் இல்லை தான் - ஆனால்
பள்ளிக்குச் சென்று
பல்கலைக்கழகம் சென்று
கொண்டிருக்கின்றோம்

இதற்காக எத்தனையோ இடங்களில் வித்திட்ட எங்கள் கௌரவத்திற்குரியவர்களை நாங்கள் மறந்துவிடப் போவதில்லை. " எங்கள் சிரம் தாழ்த்திய கௌரவங்கள் " அவர்களுக்கு உரித்தாகட்டும்.

எங்கள் மலையகக் கல்விப் பயணத்திற்கும், எங்களை உருவாக்கி இப்படியொரு ஆசிரியர் பயிற்சிக்கு அமர்த்தி வெற்றிகரமாக ஒரு வருடப் பயிற்சியைப் பூர்த்தி செய்ததோடு மட்டுமன்றி, நாதம் என்ற இச் சஞ்சிகை எம் கல்விச் சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக அமைய வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

எஸ் பி. குணசேகரன்
செயலாளர்
நாதம் மலர் வெளியீட்டுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழ் ஆசிரியரிடமிருந்து

நு/ நாவலர் தமிழ் மகா வித்தியாலயத்தின் தொடர் கல்விப் பயிற்சியை செவ்வனே நிறைவேற்றிய ஆசிரியர் பயிலுனர்களின் உள்ளத்து உணர்வுகளையும் எதிர்காலத்து எண்ணங்களையும் எழுத்துக்களினூடாக ஏந்தி எங்களது ஏடுகள் முதல் தடவையாக உங்கள் கரங்களில் தவழ்கிறது. இந்த இதழில் பயிலுனர் ஆசிரியர்கள் தந்துதவிய ஆக்கங்கள் பிரசுரமாகியிருக்கின்றது. அதாவது கல்வி உளவியல், கல்வி அளவீடும் மதிப்பீடும், கல்வி முகாமைத்துவம் போன்ற தொழில் நெறி சம்பந்தமான ஆக்கங்களும் கவிதைகள், கட்டுரைகள், சிந்தனைத் துளிகள் இன்னும் பலவும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இம்மலரை ஆக்க உதவி புரிந்த ஆலோசனை சபையினருக்கும் எழுத்தாளர் குழுவிற்கும் படம் வரைந்தோர் பரிசீலனை செய்தோர் முதலானோருக்கும் எமது நூலாக்கக் குழுவின் சார்பில் நன்றி உரித்தாகுக.

திரு. S. தாமோதரம்
இதழாசிரியர்
நாதம் மலர் வெளியீட்டுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாளரிடமிருந்து......

பிள்ளைகள் இயல்பாகவே திறமையானவர்களாக இருப்பதுடன், கற்றலுக்கு விருப்பம் காட்டுவோருமாவர். இதற்காக அவர்களிடம் ஆர்வமும் சகல ஆயத்தமும் உண்டு. அவர்களின் பெற்றோர் தமது குழந்தைகளின் முன்னேற்றம் தொடர்பாக மிக ஆர்வமும் அபிமானமும் காட்டுகின்றனர். இது"தோமஸ் ஸ்டீல்" என்னும் ஆய்வாளரின் கருத்தாகும்

இன்றைக்கு 100 வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட இந்தக்கருத்து அன்று போல் இன்றும் ஒரே மாதிரியானதாகவே காணப்படுகிறது. குழந்தைகளின் ஆற்றலை மிளிரச் செய்யும் பெற்றோரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் கல்விச் சூழலொன்றை எவ்வாறு கட்டியெழுப்பலாம்? என்ற ஐயம் இன்று எம்முன்னுள்ள சவாலாகும். அதனை வெற்றி கொள்ளக்கூடிய பாதையை நோக்கிச் செல்லுதல் கல்விப் புலத்தில் ஈடுபடும் எமது பொறுப்பாகும்.

அந்த அடிப்படையில் மொழி, ஊடகத்தின் பல்வேறு புதிய தடங்கள், புதுப்புது படைப்பு முயற்சிகளினூடே பரிணமித்து வருகின்றது. அவ்வகையில் வாராந்த ஆசிரியர் பயிற்சி நெறியில் இந்நூல் பிறப்பதையிட்டு இந்நூலின் பொருளாளர் என்ற வகையில் நான் பெருமிதமடைகிறேன். வாழ்கைக்கேற்ற கற்றல் நிலைமைகளை விருத்தி செய்து கொண்டு உயிரற்ற நிலையை உயிருள்ளதாக இந்நூலில் விதந்துரைக்கப்பட்டவற்றையும் அதற்கு மேலாக ஆசிரியர்களின் சுய நிபுணத்துவத்தையும் கொண்டு மாணவரின் கல்வித்தரத்தினை மேம்படுத்துவதில் அனைவரும் வெற்றி காண்போம்.

எங்களின் நூலுக்கு, சேவைக்கு மதிப்பளித்து நாதம் என்ற சீரிய நூலைச் செம்மையாக வெளியிட உதவிய அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். இந்நூலில் தரப்பட்டுள்ளவற்றை கற்றுணர்ந்து நன்னெறியில் நானிலம் போற்ற மாண்புடன் திகழ மாணவ சமுதாயத்தை வாழ்த்துகிறேன்.

திரு.செ.ஆம்ஸ்ட்ரோங்
பொருளாளர்
நாதம் மலர் வெளியீட்டுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பற்றிய விபரம் ..........

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நாதம் |
| இதழ் | : | முதலாவது இதழ் |
| உரிமை | : | ஆசிரியப் பயிலுனர்கள் - 2010 |
| பக்கம் | : | 102 |
| வெளியீடு | : | நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலய<br>ஆசிரியப் பயிற்சி மத்திய நிலையம் - நானுஓயா |
| முன் அட்டைப்படம் | : | A. ரிச்சர்ட் பெர்னாண்டோ |
| பொறுப்பு விரிவுரையாளர்<br>(நூல் வெளியீடு) | : | திருமதி வசந்தி சேகர் |
| அச்சுப்பதிப்பு | : | ஜெட்ரோ - பூங்கா வீதி - நுவரெலியா |
| கணினி வடிவமைப்பு | : | கணினி வள நிலையம்<br>நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலயம், நானுஓயா |

<u>**நூலாக்கக்குழு**</u>

| | | |
|---|---|---|
| தலைவர் | : | R.செல்வகுமார் |
| செயலாளர் | : | S.P. குணசேகர் |
| பொருளாளர் | : | M.S. ஆம்ஸ்ட்ரோங் |
| உபதலைவர் | : | A.யோகேந்திரன் |
| இதழாசிரியர் | : | எஸ்.தாமோதரம் |
| குழு உறுப்பினர்கள் | : | திரு.C.நிஷாந்தன்<br>திரு.K.சத்தியகுமார்<br>திரு.A.ரிச்சர்ட் பெர்னாண்டோ<br>திரு.P.நிஜாந்<br>திரு.T.சதீஸ்<br>திரு.L.விஜயசுந்தரம்<br>திரு.R.அஜித்சிங்<br>திரு.G.யோகேஸ்வரன்<br>திரு.G.பிரபாகரன்<br>திரு.K.முரளிதரன்<br>திரு.M.சசிதரன்<br>திரு.S.லவகுமார்<br>திரு.A.ஜெயகாந்த்<br>திரு.S.பிரதீபன்<br>திருமதி.E.கரோலினா<br>திருமதி.S.ஜெயந்தி<br>திருமதி.B.பவானி<br>திருமதி.V.கோமளா<br>திருமதி.G.பிரதீபா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | தமிழன்னைக்கோர் சமர்ப்பணம் | 01 |
| 02. | ஹைக்கூ கவிதைகள் | 01 |
| 02. | சாதனைகள் படைப்போம் | 02 |
| 03. | சிந்தனைத் துளிகள் | 03 |
| 04. | இலவசக்கல்வியின் தந்தை | 04 |
| 05. | கலைந்த கனவுகள் | 06 |
| 06. | ஏமாற்றம் | 08 |
| 07. | நீயும் ஒரு பச்சோந்தியே | 09 |
| 08. | நமக்கென்று | 10 |
| 09. | ஆசிரியரானவர் | 11 |
| 10. | உளவியல் சொற்கள் | 13 |
| 11. | மாற்றம் காண | 16 |
| 12. | நிம்மதி | 17 |
| 13. | ஞான சரிதர்கள் | 18 |
| 14. | மலையக மொட்டுக்கள் | 19 |
| 15. | தமிழர் பாரம்பரியத்தில் பெண்கள் கல்வி பற்றிய சிந்தனை | 20 |
| 16. | இஸ்லாமும் கல்வியும் | 22 |
| 17. | பெண்மையே மலர்க | 23 |
| 18. | எங்கள் வ(லி)ழியில் | 24 |
| 19. | குருவின் சிறப்பு | 25 |
| 20. | மரணித்த மானிடம் | 26 |
| 21. | பெண் | 27 |
| 22. | உன்னோடே இருந்த ஒருவன் | 28 |
| 23. | மறதி | 29 |
| 24. | முதுமையின் துயரம் | 30 |
| 25. | இடைநிலை வகுப்புகளில் கற்றல் கற்பித்தலை...... | 31 |
| 26. | மலையக சிறுவர் அபிவிருத்தியின் கல்விநிலை | 34 |
| 27. | வீறு கொண்டெழுங்கள் | 35 |
| 28. | நெஞ்சுக்குள் சுமந்த நினைவலைகள் | 36 |
| 29. | வகுப்பாசிரியரின் கடமைகள் | 38 |
| 30. | மலையக மக்களும் வீட்டுரிமையும் | 42 |
| 31. | ஆத்திரம் அறிவைக் கெடுக்கும் | 44 |
| 32. | நாங்களும் | 45 |
| 33. | இன்றைய மலையகக் கல்வி | 46 |
| 34. | கல்விதான் | 48 |
| 35. | அறிந்து கொள்ளுங்கள் | 49 |
| 36. | நல்லாசிரியன் | 50 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. பாடசாலை மாணவனின் குமுறல் 51
38. மலையகக் கல்வியின் பின்னடைவுக்கான காரணங்கள் 52
39. வளர்ச்சி அல்ல வீழ்ச்சி 53
40. பயிற்சியும் நட்பும் 54
41. மெய்ஞானமும் விஞ்ஞானமும் 55
42. ஆசான் 56
43. பொன்னான நேரத்தைப் பொறுப்புடன் பேணுவோம் 57
44. பாரதியின் பல்நோக்குப் பார்வைகள் 59
45. மொழி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு 62
46. அனைவருக்கும் கல்வி 63
47. அலைகள் ஓய்வதில்லை 64
48. தரம் 5 மாணவர்களின் கணித பாட அடைவு............ 65
49. சிந்தனைத் துளிகள் 66
50. ஹைக்கூ கவிதைகள் 67
51. தங்கமொழிகள் 68
52. அரசியல் தகுதி 69
53. பாடசாலைகள் மாணவர்களின் ஒன்றிணைந்த..... 70
54. அழகியல் கல்வியால் ஆரம்பக் கல்வியில் நாம்....... 73
55. இனங்காணுவோம் வழிபடுவோம் 75
56. சமுதாயப் பிரமாக்கள் 76
57. வரலாற்றிலிருந்து சில துளிகள் 79
58. எதிர்பார்ப்பு 81
59. நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களும் பயன்பாடும் 82
60. கூத்துக்களில் அருச்சுனன் தபசு ஒரு பார்வை 85
61. கல்வி 87
62. வி(ச)தியா 89
63. கற்றல் கற்பித்தல் மாதிரிகள் 91
64. நற்சிந்தனைகள் 95
65. அன்பின் ஊற்று! இறைவனே 96
66. காலத்தின் கண்ணாடி 98
67. பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் முக்கியத்துவம் 100
68. புறப்படுவோம் 102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராந்த ஆசிரியர் பயிற்சிநெறி இணைப்பாளரும் விரிவுரையாளர் குழாமும்



திரு எம். விஸ்வநாதன்
(நிலைய இணைப்பாளர்)



திரு எம். கணபதி
(விரிவுரையாளர்)



திரு எம். ரெங்கசாமி
(விரிவுரையாளர்)



திரு எஸ் ஸ்ரீதரன்
(விரிவுரையாளர்)



திரு பி.கே. சிவஞானம்
(விரிவுரையாளர்)



திரு எம். முவேந்தன்
(விரிவுரையாளர்)



திருமதி எஸ் வசந்தி
(விரிவுரையாளர்)



திருமதி என் பத்மநாதன்
(விரிவுரையாளர்)



திருமதி ஜே பாலகிருஸ்ணன்
(விரிவுரையாளர்)



செல்வி எஸ் விக்னேஸ்வரி
(நிலைய உதவியாளர்)

படத்தில் இல்லாத விரிவுரையாளர் :-

திரு. எம். கிருஸ்ணகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழு - A



## குழு - B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழு - C



## குழு - D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழு - E



## குழு - F



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராக்கக் குழு



# உறுப்பினர்கள்

இடமிருந்து வலமாக :-

திருமதி. V. கோமலா, திரு. G. யோகேஸ்வரன், திரு. G. பிரபாகரன், திரு. A. ஜெயகாந்த், திரு. R. அஜித்சிங், திரு. P. நிஜாந், திரு. S. லவகுமார், திரு. T. சதீஸ் திரு. C. நிஷாந்தன், திரு. R. செல்வகுமார் (தலைவர்) திரு. S.P. குணசேகரன்(செயலாளர்), திரு. N. அமிர்தசெல்வன் (உபசெயலாளர்)திரு. M. சசிதரன், திரு. L. விஜயசுந்தரம், திரு. S. ஆம்ஸ்ட்ரோங் (பொருளாளர்) திரு. K. முரளிதரன், திரு. S. தாமோதரம் (இதழாசிரியர்) , திருமதி. G. பிரதீபா

படத்தில் இல்லாதோர் :-

திரு. K. சத்தியகுமார், திரு. A. ரிச்சர்ட் பெர்ணான்டோ,
திரு. A. யோகேந்திரன் (உபதலைவர்)
திருமதி. E. கரோலினா திருமதி. S. ஜெயந்தி, திருமதி. B. பவானி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்ச் செல்வி செழுந்தமிழ் நாயகி
அங்கயற் கண்ணி அருந்தமிழ் புதல்விக்கு
தீந் தமிழ் வளர்த்த பழந்தமிழ் புதல்வர்கள்
அன்னையின் மேனிக்கு மெருகூட்ட

அவளின் கமுகுக் கழுத்திற்கு ஒரு வைர - சிந்தாமணி
சுளகுக் காதுகளுக்கு ஒரு பவள - குண்டலகேசி
காந்தல் கைகளுக்கு இரத்தின - வளையாபதி
அவளின் கொடியிடைக்கு வைடூரிய - மணிமேகலை
பொற் பாதங்களுக்கு முத்து - சிலப்பதிகாரம் என
ஆபரணங்கள் அணிவித்து முத்தமிழ் வளர்த்தனர்.

பசுமையின் குளிர்ச்சியாம் நுவரெலியாவில்
நானு ஓயா என்ற இடத்தில் சிகரமாக - விளங்கும்
நாவலர் தமிழ் மகா வித்தியாலய
ஆசிரிய மாணவர்களாகிய நாங்கள்
வளர் பிறையாகக் கொண்டு வளர் தமிழ் - செய்வித்து
" நாதம் " எனும் கலைக் கமலத்தை
நற்றமிழ் நங்கைக்கு சமர்ப்பிக்கின்றோம்.

செல்வி. செல்வநாதன் பிரபா
நு/ ஒலிபன்ட் த .வி
நுவரெலியா.

## ஹைக்கூ கவிதைகள்

**தாய்மை**
பெண்மைக்கு
கிடைத்த
ஒஸ்கார் விருது.

**மின்னல்**
கிரக விளிம்பில்
கிறுக்கப்பட்ட
கிறுக்கல் சித்திரம்.

**மின்மினி பூச்சி**
விடியலுக்கு முன்
விண்ணில் பூத்த
அழகான மல்லிகை

செல்வி. சி.சுபாசினி
நு/மௌண்ட் வேர்ணன் த.வி
பத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகள் படைப்போம்

அனைத்து உயிரினங்களும் தமது நிலையில் உரிமையுடனும், சுதந்திரமாகவும் வாழப் பிறந்தவைகளாகின்றன. மனிதர்களைப் பொறுத்தவரையில் தமது விருப்பத்திற்கேற்ற முறையிலேயே வாழ விரும்புகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் தான் எடுத்துக் கொள்கின்ற ஒவ்வொரு காரியங்களிலும் வெற்றி பெற வேண்டுமென்றே விரும்புகிறான். வெறுமனே விருப்பத்திற்கு ஏற்ற முறையில் மட்டும் வாழாமல் வாழும் போது விடா முயற்சியுடனும் கடுமையான உழைப்புடனும் வெற்றி மேல் வெற்றி பெற்று சாதனை படைப்பவர்களாக வாழ வேண்டும்.

இவ்வாறு வையத்தில் வாழ்கின்ற முறைப்படி வாழ்கின்றவர்கள் வானுலகில் உறையும் தெய்வமாகக் கருதப்படுவார்கள். இதையே வள்ளுவப் பெருந்தகை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்கிறார்

நல்லவராகவும், வல்லவராகவும் வாழ்வதற்குக் கல்வி மட்டும் போதுமானது அல்ல. கல்வியுடன் நேர்மை, நன்னடத்தை, கடமையுணர்வு, பொறுமை, அயராத உழைப்பு, பணிவு, பெரியோரை மதிக்கும் பண்பு, சிறந்த அணுகுமுறை என்பவற்றை மனதில் கொண்டு செயற்பட வேண்டும். நாம் மேற்கொள்ளும் காரியங்களில் மனதில் உறுதியுடன் இறைமொழியில் உரையாடி நல்லெண்ணத்துடன் ஈடுபடுவோமாயின், நாம் மேற்கொள்ளும் காரியங்கள் நிச்சயம் கைகூடும்.

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்படல் வேண்டும்"

என்ற புரட்சிக்கவி பாரதியின் பாடலை மனதில் கொண்டு, மனதில் உறுதியுடன் இனிமையுடன் உறவாடி நல்லெண்ணத்துடன் செயற்பட்டு அடைய விரும்பும் செயலில் வெற்றி பெற வேண்டும்; நாம் விரும்பும் இலக்கை அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் வெற்றியை மாத்திரம் மனதில் கொண்டு செயற்படுவோமாயின், நாம் இலக்கைச் சென்றடையலாம்.

"நம்பினார் கெடுவதில்லை
நம்பிக்கையென்றும் வீண்போவதில்லை"

ஆம் இலங்கைத் திருநாட்டின் பெருமையை உலகறியச் செய்த இலங்கை கிரிக்கட் வீரர் முத்தையா முரளிதரன் தான் சாதனை படைக்க வேண்டுமென்று சிறு வயதில் எண்ணியதைக் கடுமையாகப் போராடி உலகக் கிரிக்கட் அரங்கில் டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கட்டுகள் என்ற எவராலும் எட்டமுடியாத சாதனையைப் புரிந்தவராகத் திகழ்கிறார்.. இதன் மூலம் அவரது உழைப்பும், விடா முயற்சியும் வெளிக்காட்டப்படுகிறது. இவ்விலக்கை அடைய அவர் பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டியிருந்தது.

இந்தியாவில் சாதாரண மனிதராக வாழ்க்கையை ஆரம்பித்த அம்பாணி அவர்கள் தான் ஒரு தொழிலதிபராக வேண்டுமென்று ஆசைப்பட்டார்; நம்பிக்கையுடன் செயற்பட்டார்; வெற்றியும் கண்டார்; இந்தியாவின் சாதாரண கிராமமொன்றில் ஆன்மீகத் தந்தையின் மகனாகப் பிறந்த அப்துல் கலாம் புளியங்கொட்டைகளையும், பத்திரிகைகளையும் விற்றே கல்வி கற்றார். பிற்காலத்தில் உலகின் தலைசிறந்த விஞ்ஞானியாகியதுடன், பாரத தேசத்தின் ஜனாதிபதியாகவும் பதவி வகித்தார். இது அவரது விடா முயற்சிக்கும், உழைப்புக்கும் கிடைத்த மிகப் பெரிய ஊதியமாகும்.

அதேபோன்று சாதாரண குடும்பத்தில் பிறந்த ஆர்.பிரேமதாச அவர்கள் இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்ததுடன், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகவும் நாட்டை ஆட்சி செய்தார்.

இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்கள் இறந்த பின்பு அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் தன்னம்பிக்கையினாலும், உழைப்பினாலும் உலகின் முதலாவது பெண் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். எனவே நம்பிக்கையுடனும், உறுதியுடனும் செயல்படும் பட்சத்தில் நிச்சயம் வெற்றி கிட்டும்; சாதனை படைக்கவும் முடியும்.

C.W.W கன்னங்கரா அவர்களால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி எமக்குக் கிடைத்துள்ள பெறும் அதிர்ஷ்டமாகும். இதன் மூலம் தேவையான கல்வியைப் பெற்று ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக நாட்டின் நற்பிரஜையாக வாழ முயற்சிக்க வேண்டும்.

க.நிஷாந்தன்
நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலயம்
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

01. புரிந்து படிப்பவனுக்கு ஐந்து நிமிடம்
புரியாமல் படிப்பவனுக்கு ஐம்பது நிமிடம்.

02. வாழத் தெரிந்தவனுக்கு வரும் சோதனைகள்
எல்லாம் வேதனைகள் அல்ல; அது இலட்சியப் பாதையின் விடிவிளக்குகள்.

03. பத்துப் பெரியவர் மத்தியில் அமைதியாய் இரு;
அப்போது நீ பதினோராவது பெரிய மனிதன்.

04. ஆழ்ந்த பொறுமையில் தான் அமைதி கிடைக்கின்றது.

05. வரட்டுக் கௌரவம் வாழ்க்கைக்கு உதவாது.
முரட்டுப் பிடிவாதம் முன்னேற உதவாது.

06. விடாமுயற்சியும், குறிக்கோளும் வெற்றிப்
பாதையில் முன்னேற இரு சக்கரங்கள்.

07. பணம் இல்லா விட்டால் உன்னை யாருக்கும்
தெரியாது; பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது.

08. இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில்
துடுப்பில்லாத படகைப் போன்றது.

09. அறிவை, அறிவால் அறியும் அறிவே அறிவு.

10. வெற்றி கற்றுக் கொடுப்பதை விடத், தோல்வி
மிகுதியாகக் கற்றுத் தருகின்றது.

11. காலம் உன்னைத் தேடி வரும் எனக் காத்திருக்காதே; நீ காத்திருக்கும் ஒவ்வொரு
நொடியும் காலம் உன்னை விட்டுத் தூரம் செல்கிறது; எனவே, நீ காலத்தை
வெல்வதற்கு இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

12. வழியில் ஆசனம் இருக்கின்றது என்று அமர்ந்து விடாதே! உனது இலக்கு
சிம்மாசனமாக இருக்கட்டும்.

13. ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது
பெருமையல்ல; விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

14. சிகரத்தை அடைய வேண்டுமானால் சிந்தனையாளராக இரு.

15. வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் அழிவில்லாத
வாழ்க்கையைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு.

ஆக்கம்
ஜோ. அல்போன்ஷா
நு/எபற்ஸ்போட் த. வி
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வியின் தந்தை

C.W.W கன்னங்கரா கிறிஸ்தவக் குடும்பமொன்றில் பிறந்தவர். இவர் காலியிலுள்ள றிச்மண்ட் கல்லூரியில் பயில்வதற்கான புலமைப் பரிசில் ஒன்றைப் பெற்றார். இக்கல்லூரி மிகவும் புகழ் பெற்ற ஆங்கிலமொழி இடைநிலைக் கல்லூரியாகும். கணித பாடத்தில் இவர் சிறந்து விளங்கினார். இவர் பாடசாலையில் இருந்து விலகிய பின்னர் காலியில் வழக்கறிஞராகப் பணி புரிந்தார். தமது ஓய்வு நேரத்தில் பெரும் பகுதியைப் பௌத்தத்தையும், சிங்களமொழியையும் கற்பதில் ஈடுபாடு காட்டினார். அக்காலத்தில் வழமைக்கு மாறாகப் பௌத்த மதத்திற்கு மாறினார். இவர் தென் மாகாணத்தில் மது ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டதுடன், படிப்படியாக அரசியலில் முக்கியத்துவம் பெற்று 1923 இல் சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1931 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் அரசாங்க சபையின் கல்வியமைச்சராகப் பதவியேற்று அப்பதவியில் 1947 வரையில் இருந்தார். பொதுவாக இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படும் இவர் இலங்கை சுதந்திரம் பெறும் தருவாயில் கல்விக் கொள்கையை நெறிப்படுத்தினார். இவர் ஆசியப் பிரதேசத்தில் இலங்கையின் கல்வி நிலையை தனித்துவமாக்கிய அரசியல்வாதியென மதிக்கப்படுகின்றார். (ஜெயவீர 1989:1)

கன்னங்கராவின் 1939 ஆம் ஆண்டின் முதலாவது கல்விக்கட்டளைச் சட்டமானது, கல்விச்சபையின் பொறுப்பில் இருந்த கொள்கை மற்றும் கல்வி ஒழுங்கு விதிகள் ஆகியவற்றை 1931 இல் புதிய அரசியல் அமைப்பு ஒழுங்குகளின் கீழ் உருவாக்கப்பட்ட கல்வி நிறைவேற்றுக் குழுவுக்கு மாற்றுவதாக அமைந்தது. இக் கல்விச்சபை முக்கியமாகக் கிறிஸ்தவர்களைக் கொண்டிருந்தது. அதன் தலைவராகக் கல்விப் பணிப்பாளர் விளங்கினார். ஆனால் கல்வி நிறைவேற்றுக் குழுவின் தலைவராகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வியமைச்சரே விளங்குவார்.

1940களின் நடுப்பகுதியில் கன்னங்கரா ஆங்கில மொழிப் பாடசாலைகளில் கல்விவாய்ப்பு, படிப்படியாக இலவச கல்வியை அறிமுகப்படுத்துதல் போன்ற முக்கிய விடயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டார். ஏற்கனவே உள்ளூர் மொழிகளில் வழங்கப்பட்ட கல்வியானது, கல்விக் கட்டணமின்றி இருந்தாலும், ஆங்கில மொழி மூலம் வழங்கப்பட்ட கல்வியிலும் பார்க்க உள்ளூர்க் கல்வி தரத்தில் குறைந்தது என்று கருதப்பட்டது. மிகத்திறமை வாய்ந்த ஒரு பிள்ளை கூட உள்ளூர்க் கல்வியின் மூலம் உள்ளூர் மொழி ஆசிரியராக, ஆயுர்வேத மருத்துவராக அல்லது சான்று அலுவலராக வர முடிந்தது. (ஜெயசூரிய 1979) ஆங்கில மொழிப் பாடசாலைகளில் சிறந்த தொழில் வாய்ப்புக்களை அதுவும் கட்டணம் செலுத்தி அங்கு சென்றவர்களுக்கு மட்டுமே வழங்கிய போது, எல்லோருக்கும் சம சந்தர்ப்பமானது உண்மையில் வழங்கப்பட வேண்டுமாயின் மேல் நிலைப் பாடசாலைக்கல்வி இலவசமாகவும் எல்லோருக்கும் கிடைக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டுமெனக் கன்னங்கரா குழு வாதிட்டது.

1945 இல் இலவசக் கல்விச்சட்டம் அரசாங்க சபையினால் நிறைவேற்றப்பட்ட போது, இச்சட்டம் கல்வியை "செல்வந்தரின் மூதாதையர் வழிச்சொத்து" என்பதில் இருந்து ஏழைகளின் மரபுரிமையாக மாற்ற முனைந்தது. ஆங்கிலக் கல்வி கற்ற குழாம் பௌத்த பிக்குமார் மத்தியில் இருந்து தோன்றிய தேசிய வாதிகள், சோஷலிசவாதிகள், ஆயுர்வேத மருத்துவர்கள், உள்ளூர்மொழி ஆசிரியர்கள், உள்ளூர் மொழியில் கற்ற உயர் குழாத்தினர் ஆகியோரும் இக்கொள்கைக்கு அரசியல் ரீதியான ஆதரவு வழங்கினர். இக்கொள்கையை விமர்சித்த பலர் இதனை விலை மதிக்க முடியாத முத்து என்றனர். அண்மையில் வாக்குரிமை பெற்ற மக்களுக்கு இது பெருங் கவர்ச்சியாக இருந்தமையால், இலவசக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக் கொள்கையை வெளிப்படையாக எதிரப்பது என்பது அரசியல் வாதிகள் எவருக்கும் தற்கொலைக்கு ஒப்பானதாகவே அமைந்திருக்கும். இத்திட்டத்திற்கான நிதியின் ஒரு பகுதியை இலாபமீட்டத் தொடங்குகின்ற பெருந்தோட்டத் துறையில் இருந்து அரசாங்கம் பெற்ற வருமானம் மூலம் வழங்க வேண்டியிருந்தது.

இலவசக்கல்விச் சட்டத்தின் உடனடி விளைவாக, வசதி படைத்தவர்கள் தொடர்ந்து தமது பிள்ளைகளை, நல்ல அரசாங்க மற்றும் அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளுக்குக் கட்டணம் எதுவுமின்றி அனுப்பிவைத்தனர். அதேவேளையில் பொதுமக்கள் எப்பொழுதும் இலவசமாகக் கிடைத்த தரத்தில் குறைந்த கல்வியைப் பெற்றனர். (ஜெயசூரிய 1979:475) இங்கு நிலவிய சமத்துவம் அற்ற நிலை ஓரளவுக்கு ஆங்கில மொழிமூல மத்தியப் பாடசாலைகளில் சூழ்ந்துள்ள கிராமப் புறப் பிள்ளைகளுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்ட புலமைப்பரிசில் முறையினால் நீக்கப்பட்டது. கிராமப்புறங்களிலிருந்து ஆங்கில மத்தியப் பாடசாலைகளுக்குச் செல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் காரணமாக, உயர்ந்த அந்தஸ்துடைய தொழில்களைப் பெறும் சந்தர்ப்பங்கள் அதிகரித்தன எனப் பொதுமக்கள் நம்பினர். ஆகவே இக்கல்விக்கான தேவை விசேடமாக இடைநிலை மற்றும் பல்கலைக்கழகக் கல்விக்கான தேவை தூண்டப்பட்டது. இலவசக்கல்விச் சட்டத்தின் நீண்டகால விளைவானது, கல்வித்துறையில் ஒருமைப்படுத்தப்பட்ட முறைமையொன்று ஏற்படுத்தப்பட்டமையும் முன்பிருந்த வேறுபடுத்தப்பட்ட முறைமை அகற்றப்பட்டதுமாகும்.

சுதந்திரமடைந்த காலத்திலே பாடசாலைப் பரீட்சை முறையும் திருத்தி அமைக்கப்பட்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது இங்கிலாந்தில் இருந்து பரீட்சை வினாத்தாள்களை இலங்கைக்கு கொண்டு வருவதில் ஏற்பட்ட சிரமங்களால், இத்தகைய மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1942 இல் கேம்பிரிட்ஜ் பரீட்சைகளும், 1947 இல் இலண்டன் பல்கலைக்கழக மெற்றிக்குலேஷன் பரீட்சைகளும் கைவிடப்பட்டன. இதற்குப் பின்னர் சகல பாடசாலைப் பரீட்சைகளும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் என அவ்வவ் மொழிகளில் இலங்கையிலேயே தயாரிக்கப்பெற்று, நடாத்திப் புள்ளியிடப்பட்டன.

தொகுப்பு:- திருமதி யோகினி சுரேஸ்
நு/வ/ரிலாமுல்ல த.ம.வி
கந்தப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த கனவுகள்

பொழுது புலர்ந்து பொன்நிற சூரியன் கீழ்வானம் நோக்கி நகரத்_தொடங்கும் நேரத்திலேயே கோரைப் பசுந்தரைக்கு பஞ்சமில்லாத ஆத்தூர் கிராமத்திலும் வழமையான பரபரப்பும் ஆரம்பிக்கின்றது. அதிகாலையிலேயே எழுந்து மேமலைக்குச் செல்லக் காத்துக் கொண்டிருந்த செட்டியும், சோமுவும் வீட்டை விட்டு வேகமாக நடக்கத் தொடங்க "ஏன்டா செட்டி இன்னைக்காவது நேரத்தோட மலைக்கு போகலாமுனு பாத்தா முடியாம போச்சே; கோவில் பட்டி சனமெல்லாம் வந்திருக்கும்" சரி பரவாயில்லை போனக்கிழமை வெட்டின சயிட்ல இன்னைக்கு வெட்டலாம் என கூறிமுடிக்கவே சற்றுத் தூரத்தே தென்பட்ட மேமலைக் கோரைகளும், கோரை வெட்டிக்கொண்டிருக்கும் சிலரும். அதா பாருய்யா ... சொன்ன மாதிரியே நடக்குது என்ற படியே முண்டாசை இறுக்கி முடித்தான் செட்டி. இவ்வாறு இருவரும் பேசியவாறே மலைக்குள் நுழைய......... "இன்னைக்கு ஏன் இவ்வளவு சுனக்கம்...?" எனப் புல்லுக்கட்டை தலையில் வைத்தவாறே வினவினான் தலைவர் தங்கத்துரை.

இல்ல தலைவரே... நேத்து டவுனுக்கு கூடைகள விக்க கொண்டு போயிருந்தோம்; அதுதான் சொனக்கம் என்றான் செட்டி. வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே "சரி சரி நானும் இன்னைக்கு தொரய சந்திக்கனும்" என்றவாறே நடக்கத் தொடங்கினான் தங்கத்துரை.

"அண்ணே இன்னைக்கு ஒரு கட்டோட சரி, மறுக்கட்டுக்கு திரும்ப வர மாட்டேன்" என கோரைகளை அடியோடு வெட்டத் தொடங்கிய சோமுவை நோக்கி.....என்ன விஷேசம்..? என புன்னகை பூத்தான் செட்டி.

ஒன்னும் இல்ல அண்ணே, பயலுக்கு பள்ளிக் கூடத்துல ஏதோ சோதனை இருக்காம் அதுக்காக டவுன்ல சாமான் வித்த காச வாங்கி அதுல அவனுக்கு அதுகல வாங்கிக் கொடுக்கனும்" அதோட உடுப்பும் தைக்கனும். சரி சரி ஏதோ இந்த கோரப்புல்லு இருக்கிறது நால..நம்ம பொழப்பு ஓடுது." எனப் பதிலலித்தான் செட்டி.

நடுவானில் சூரியன் சஞ்சரிக்க..

மணி பன்னிரெண்டைத் தாண்டியாச்சி; சீக்கிரம் போகலாம்" எனப் புல்லுகளுடன்
புறப்பட்டனர் இருவரும்.. வீடுநோக்கி

அதோ வந்தாச்சு.. என சந்தோஷமான விடயத்தைத் தன் கணவரிடம் கூறுவதற்காக மடை திறந்த வெள்ளமாய் செட்டியை நோக்கி ஓடிவந்த பர்வதம் "ஏங்க.. ஏங்க நம்ம பொன்னி பெரிய புள்ள ஆயிட்டா" என்ற இன்ப அதிர்ச்சியை கூறிக்கொண்டே செட்டியின் தலையில் இருந்த புல்லுக்கட்டை இறக்கி வைக்க ஒத்துழைத்தாள்.

முண்டாசை உதறிவிட்டு திண்ணையில் அமர்ந்தபடி பர்வதம் கொடுத்த தேநீரை அருந்த,
பொன்னியின் நீராட்டு விழா கனவினை தொடங்குகின்றாள் பர்வதம். ஊர்ல எல்லாத்துக்கும் சொல்லி .. கெடாவெட்டி சடங்க பெருசா பண்ணனும், அதோட புதுசா வந்த பட்டு சாரியும், சின்னதா ஒரு செயினும் வாங்கனும் என ஆசையினை அடுக்கியவாறே இருந்த அவளிடம்.."அட இதெல்லா நீ சொல்லுற மாதிரியே பண்ணலாம்.

வர்ர தை மாசம் நெரய கூடைகளும், பாய்களும் வித்து காச தேடலாம் எல்லாம் அந்த ஆத்தாவோட மகிமை எனக் கோரைப்புல் உற்பத்திகளை மனதில் வைத்துக்கொண்டு கூறினான் செட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி இவர்கள் மட்டுமல்ல, முழு ஆத்தூரின் இருபது குடும்பங்களின் வாழ்க்கையும் மேமலை கோரைகளின் கைவினைப் பொருட்களிலும், பசும் பால் உற்பத்தியிலுமே தங்கியுள்ளன. நேரமும் கரைபுரண்டோடச் சற்றுத் தூரத்தில் வந்து கொண்டிருந்தது பேராபத்து செட்டியின் குடிலை நோக்கி தங்கத்துரை வடிவில்.

"அட தலைவரு.... இந்த பக்கம்..... என்றபடியே வடித்தட்டுக்களை கயிற்றில் தொங்கவிட்ட பா்வதத்தின் குரல் ஓய முன்பே,"

அட தலைவர் வாங்க... வாங்க ... ஏபுள்ள! புட்டுவத்த எடுத்துப்போடு.. என்ற செட்டி "நீ வேற உட்கார்ந்து பேச முடியாத தலை போற விஷயம்" நீ வேற.. என்ற தலைவரின் தொணி செட்டியின் அடி மனதில் பரபரப்பை ஏற்படுத்தத் தொடங்கவே..

"அப்படி என்ன தலை போற சேதி..." வினவியது செட்டியின் குரல்.

நம்ம மேமலைய சுத்தி ஓடுகிற ஆத்துல இருந்து கரண்ட் எடுக்கப் போறாங்களாம்; அதுனால, மேமலையும் அதோட இருக்கிற நம்ம ஆத்தூரையும் அரசாங்கம் எடுக்கப் போகுதாம் என்றான் தங்கத்துரை.

இதயத்தில் ஈட்டி பாய்வது போல இச்செய்தி செட்டியின் மனதைத் துளைக்க .. அப்ப நமக்கென்ன வழி என்ற செட்டிக்கு..

நமக்கெல்லாம் புதுசா வீடுகள் கட்டித்தர வேற இடமும் முடிவு செஞ்சிட்டாங்களாம். அதோட அவுங்களே வீட்ட கட்டித்தருவாங்கனு நம்ம தொரவேற சொன்னாரு. கூடவே ஒரு அதிகாரியும் இருந்தாரு என்றான் தங்கத்துரை.

கடவுளே இது என்ன கொடுமை...? என்றபடியே திண்ணைத் தூணுடன் ஐக்கியமானாள் பா்வதம். ஐயோ என்ன தலைவரே இத்தன வர்சமா நாம இத நம்பித்தானே பொழப்பு நடத்தி வர்றோம்.

இனிமே.. எப்படி ..? என்ன பன்னுறது..? நம்ம புள்ளைகளோட நிலைமை என்ற பல கேள்விககளை கேட்கவும் வீட்டினுள் இருந்து பொன்னியின் அழுகுரல் பா்வதத்தின் கனவுகளை ஞாபகப்படுத்தவும்... தம்முடைய கனவினைப் போன்றே ஆத்தூர் வாசிகளின் அனைத்துக் கனவுகளும் கல்லெறிபட்ட கண்ணாடிக் கோபுரமாய் சிதற, தலைவரின் தோள் சாய்ந்தான் செட்டி.

ஆக்கம்
ஆ. ஜெயகாந்
புனித லெனாட்ஸ் த.ம.வி
ஹல்கரனோயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

கொழுந்துக் கூடைதான்
எங்கள் காசுப்பை
எத்தனைக் கொழுந்துகளோ
அத்தனையும் சில்லறைகள்

கூலிசனம் என்பது
குத்தப்பட்ட முத்திரை
கூலிமக்கள் வாழ்வதோ
எட்டடி மாளிகை

அடுப்பை மூட்டி மூட்டி
அணைக்கிறாளே அம்மா
அரிசிக்காக சென்ற அப்பனோ
பாதையிலே தூக்கம் போதையிலே

பொருளாதாரத்தின் முதுகெலும்பாய்
நாம் நாட்டினிலே
வாழ்வாதாரத்திலோ சுள்ளிக் குச்சிகள்
எம் வீட்டினிலே

நாளுக்கு நாளாய்
நாம் வளர
நாலுக்கு நாலாய்
வறுமையும் வளர்க்கப்பட்டது

தந்தையின் வியர்வை
போதைக்கும்
சம்பளம் சாராயத்துக்குமாய்
சமப்பட்டுப் போனது

எமது சங்கங்கள் எத்தனையோ
ஆள் பார்த்துப் புரள்கின்றன
பணம் பதவியென்று படம்
எடுத்தாடுகின்றன

கண்ணீர் கங்கையில்
நாங்கள் காகித ஓடம்
எங்கள் கனவுகள்
காலாவதியானாலும்
ஏமாற்றம் எங்களை
ஏமாற்றுவதில்லை.

ஆர். வனிதா ரோகினி
நு/வ/ புறூக்சைட் த.வி
ஹல்கரனோயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் ஒரு பச்சோந்தியே ?

ஓ பேனையே ! நீ
மாணவரிடம் செல்லும் போது
பாடமாகின்றாய்
ஆசானிடம் செல்லும் போது
கற்பித்தலாகின்றாய்
கவிஞரிடம் செல்லும் போது
கவிதையாய் பாடலாய்
மாறுகின்றாய்
அறிஞரிடம் செல்லும் போது
நற் கருத்தாகின்றாய்
காவலரிடம் செல்லும் போது
சட்டமாகின்றாய்
சட்டத்தரணியிடம் செல்லும் போது
விவாதமாகின்றாய்
நீதிபதியிடம் செல்லும் போது
தீர்ப்பாகின்றாய்
நல்லவரிடம் செல்லும் போது
பொன்மொழியாகின்றாய்
கெட்டவரிடம் செல்லும் போது
இழி சொல்லாய் மாறுகின்றாய்
காதலிடம் செல்லும் போது
அன்புக் கடிதமாகின்றாய்
கைதியிடம் செல்லும் போது
ஆறுதல் வார்த்தையாகின்றாய்
இப்படி
இடத்திற்கு ஏற்ப தம் செயலை
மாற்றும் பேனையே
நீயும் ஒரு பச்சோந்தியே

ஆக்கம்
ச. செபஸ்டியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கென்று!

சூரியன் திசைமாறலாம்
வானம் பூமியெல்லாம்
அழிந்து போகலாம்
நீ மட்டும்
உன் கொள்கையில் வாழ் என்று
கூறுவதை விட...!
அவையெல்லாம்
எப்பொழுதும்
நீதியுடன் தான் சுழல்கின்றன!

உனக்கென்ன நியதி
உனக்கென்ன கொள்கை
என்பதுதான் அர்த்தமுள்ள கேள்வி!
உன் சுகமான
உறவுகளும்
பசுமையான வாழ்க்கையும்
பறிக்கப்பட்டதையெண்ணி
மனம் தளர்ந்து
மடிந்து போகும்போதுதான்
இவ்வுலகம் அழிந்து போகும்!
ஏய் சகோதரனே
உண்மைக்கும்
உரிமைக்கும் நீ
உறுதியுடன் போராடு!
உனக்கென்று...
இல்லை .. இல்லை
நமக்கென்று
என்றும் இருக்கும்
இந்தப் பூமி...

Y. ருக்மனி
நு/நட்போன். த. வி
டயகம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரானவர்

அறிவினதும் சிந்தனையினதும் ஊற்றுக்கண்ணாகவும், மனிதரின் மேதாவிலாசத்தைத் தீர்மானிக்கின்ற திசைகாட்டியாகவும் திகழ்கின்ற ஆசிரியக் குழாத்தின் மகிமை பற்றியும், ஆசிரியரானவர் செயற்படவேண்டிய தன்மை பற்றியும் நோக்குவோம்.

"தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்பர். ஒவ்வொருவருக்கும் வாய்க்கின்ற ஆசிரியரே அவரைத் தீட்டும் ஓவியரும், அவரைச் செதுக்கும் சிற்பியுமாவார். தனது ஆசிரியரின் பிரதி பிம்பமாகவே ஒவ்வொருவரும் அமைகின்றார். ஆசிரியர்கள் மனித இனத்தின் உயிர் நாடிகள் மட்டுமன்றி, அதன் ஜீவ ஊற்றுமாவார். ஆசிரியர்கள் எந்தளவுக்கு ஆரோக்கியமானவர்களாக இருக்கிறார்களோ, அந்தளவிற்கு மனித குலமும் ஆரோக்கியமானதாக இருக்கும்.

நாம் இன்று விரைவான மாற்றங்களுக்கு உட்படுகின்ற சிக்கல் நிறைந்த சமூகத்தில் வாழ்கின்றோம். இந்நாட்டில் வாழ்வதற்கான பல்லாயிரக்கணக்கான தொழில்வாய்ப்புக்கள் உள்ளதுடன், தொழிநுட்ப முன்னேற்றத்தில் மேலும் பல தொழில்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. ஆனால், இவற்றுக்கெல்லாம் அத்திவாரம் இடும் உன்னதமான தொழிலாக ஆசிரிய சேவைத் தொழில் விளங்குகின்றது. ஓர் ஆசிரியரானவர், குழந்தைகளின் விருப்பு வெறுப்புக்களை உணர்ந்து அவரவர் ஆற்றலுக்கு ஏற்பவும், வளர்ச்சிக்கு ஏற்பவும், சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்பவும் வழிகாட்டி, குழந்தைகளின் அறிவாற்றல், திறன், மனப்பாங்கு ஆகியவைகளை உருவாக்குதல் வேண்டும்.

தற்காலத்தில் நடை முறையில் உள்ள கல்வி மாணவர் மையக் கல்வியாகும். மாணவர்கள் மனனம் செய்யும் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், விளங்கிக்கொள்ளும் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இவற்றையும் மாணவர்களது வயது, அறிவு, திறன்கள், மனவெழுச்சிப் பண்புகளுக்கு ஏற்ப செயற்பாடுகளை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். இவற்றை ஆசிரியர் திறம்பட முன்னெடுத்துச் செல்ல, ஆசிரியர் பாட அறிவோடு மாணவரையும் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். ஆங்கில நாட்டுக் கல்வியியலாளரான சேர். ஜோன் அடம்ஸ் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஜோனுக்கு லத்தீன் கற்பிப்பதற்கு, ஆசிரியர் லத்தீன் மொழியை மாத்திரம் தெரிந்தவராக இருந்தால் போதாது. ஜோனையும் பற்றி நன்றாக அறிந்து இருத்தல் வேண்டும்" என்கிறார்.

ஆசிரியரானவர் உடற் சிரமத்திலும் பார்க்க உள்ளத்தையும், நுண்ணறிவையும் பயன்படுத்த வேண்டும். ஆசிரியரானவர் மாணவரைப் புரிந்து கொள்ளுதல், வகுப்பறை ஒழுங்கமைப்பு, வகுப்பறை நிர்வாகம், கற்பித்தல் தொழிநுட்பங்கள் என்பவற்றை ஆசிரிய தலைமைத்துவம் உள்ளடக்கும். மேலும் அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தினால், ஆசிரியர்களின் நற்பண்புகள் தொடர்பாக நடாத்தப்பட்ட ஆய்வில் M.T. டானியல் என்பவர் நல்லாசிரியர் எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமெனத் "தலைசிறந்த ஆசிரியர்" என்ற நூலில் கூறியுள்ளார்.

மேலும் ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்களைப்பற்றி எம்.எஸ்.என். மக்ஜாலன்ட் என்பவர் "அறிவியல் சார் கற்பித்தல்" என்பதில் அமுல்படுத்தியுள்ளார். இதற்கமைய ஆசிரியரானவர் செயற்பட்டால், எல்லோரது மதிப்பினையும், அன்பினையும் பெற்ற ஆசிரியர்கள் ஆவார். மேலும் பாடசாலையுடன் மாத்திரம் அல்லாமல் அப்பாடசாலை அமைந்த சமூகத்தையும் மறந்து விடக் கூடாது. ஆகவே சமூகத்துடனும் தமது தொடர்புகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும். அமைப்புகள், சமூக சேவைத் தாபனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய உறவைப் பேண வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அமைந்துள்ள சமூகத்தில் காணப்படுகின்ற நிர்வாக, சமூக சேவைத் தாபனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய உறவைப் பேண வேண்டும்.

மேலும் ஆசிரியரானவர் எப்பொழுதும் சுய கட்டுப்பாடுடையோராகவும், நல்லொழுக்கமுடையோராகவும் இருப்பதுடன், தொழில்சார் தொடர்புகளையும், அறிந்திருத்தல் வேண்டும். அத்துடன் முக்கியமாக நமது நாட்டின் கலாச்சாரத்துக்கு ஏற்ப அமைக்கப்பட்ட ஒழுக்கக் கோவையின் படி செயற்படுவது ஒரு ஆசிரியரின் கடமையாகும். மாணவனின் வளர்ச்சியில் ஆசிரியரானவர் ஏணிப்படியாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு படியாக உயர்த்தி உயர்ந்த அந்தஸ்துக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது. தன்னம்பிக்கையோடு திட்டமிட்டு, விடாமுயற்சியோடு செயல்வடிவம் கொடுக்க வேண்டும். வெற்றி பெற்றவர்கள் அனைவரும் மற்றவர்கள் உறங்கிக்கொண்டிருக்கும் போது, தாங்கள் மட்டும் விழித்திருந்து உழைத்தவர்களே. சலிப்புக்கு இடம் கொடுக்காமல் கடும் உழைப்பை உணவாக உட்கொண்டவர்கள்.

ஒளி படைத்த நெஞ்சம், களிப்படைந்த மொழி, உறுதிகொண்ட நெஞ்சம், கடுமை கொண்ட தோள், தெளிவு என்றெல்லாம் முகமன் கூறிய பாரதியின் வார்த்தைகளை மெய்ப்பித்துப் புதியதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது ஆசிரிய சமூகத்தின் பொறுப்பாகும்.

Y. கமலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் சொற்கள்

| தமிழ் | ஆங்கிலம் |
|---|---|
| 1.அக அமைதி | - Inner Peace |
| 2.அகவயக்காரணி | - Internal Factor |
| 3.அகக்காட்சி | - Inner Vision |
| 4.அடக்குமுறை | - Oppression |
| 5.அணுகுமுறை | - Approach |
| 6.அதி ஒத்துணர்வு | - Advanced Empathy |
| 7.அதிகாரம் | - Authority |
| 8.அதீத செயற்பாட்டுநிலை | - Hyperactivity |
| 9.அந்தரங்கு உலகு | - Inner World |
| 10.அபிவிருத்தி | - Development |
| 11.அமர்வு | - Session |
| 12.அரவணைப்பு | - Support |
| 13.அவதானிப்பு | - observations |
| 14.அழுத்தம் | - Stress |
| 15.அறிகுறிகள் | - Symptoms |
| 16.அறிவு | - Knowledge |
| 17.அறிவுறுத்தல்கள் | - instructions |
| 18.அறிகை | - Cognitive |
| 19.அறிவாற்றல் | - Cognition |
| 20.அனர்த்தங்கள் | - Disaster |
| 21.ஆக்கத்திறன் | - Creative |
| 22.ஆக்கவியற் செயற்பாடுகள் | - Creative activities |
| 23.ஆக்ரோஷம் | - Aggressive |
| 24.ஆத்மா | - Soul |
| 25.ஆதரவு | - Support |
| 26.ஆர்வம் | - Interest |
| 27.ஆராய்வூக்கம் | - Curiosity |
| 28.ஆளுமை | - Personality |
| 29.ஆரோக்கியம் | - Healthy |
| 30.ஆற்றல்கள் | - Ability |
| 31.இடம் பெயர் | - Displacement |
| 32.இடைநிறுத்தல் | - Interrupt |
| 33.இணக்கம் | - Agreement |
| .34.இயக்கம் | - Dynamics |
| 35.இயல்பாக்கம் | - Adaptive |
| 36.இரத்த உறவுகள் | - Kiship |
| 37.இலட்சிய உலகம் | - Ideal World |
| 38.இழப்பு | - Grief |
| 39.உடலியக்கத்திறன் | - Motor skill |
| 40.உடனிருத்தல் | - Attending |
| 41.உணர்ச்சி வெளிப்பாடு | - Emotional Expressions |
| 42.உந்தல் | - Drive |
| 43.உயிரியற் சூழல் | - Biological Environment |
| 44.உலகமயமாதல் | - Globalization |
| .45.உள்வாங்குதல் | - Internalize |
| .46.உளநலம் | - Mental health |
| .47.உளவிருத்தி நிலைகள் | - Development Stages |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.48.உள ஆற்றல் - Mental ability
49..உள வயது - Mental age
50.உறுதியான - Firm
51.ஊக்கல் - Motivation
52.எண்ணக்கரு - concept
53.ஒத்துணர்வு - Empathy
54.ஒதுக்குதல் - Withdrawal
55.ஒழுக்கம் - Behavior
56.ஒளிக்கதிர் - Rays of Light
.57.ஒற்றுமை - Unity
.58.கட்டமைப்பு - Structure
.59.கதை கூறல் - Story telling
60.கருத்தேற்றம் - Suggestions
.61.கவன ஈர்ப்பு - Attention seeking
.62.கற்றல் அடைவு - Learning Performance
.63.கற்றல் செயற்பாடுகள் - Learning Process
64.கற்றல் இடர்ப்பாடுகள் - Difficulties in learning
.65.கற்றலுக்கான களம் - Learning environment
.66.கற்றல் நிபந்தனை - Learning condition
.67.கற்றல் முறைகள் - Learning Methods
.68.கற்றல் வெளிப்பாடு - Learning outcomes
69.கற்பித்தல் உபகரணம் - Teaching Aids
70.கற்பனை - Fantasy
71.சடங்கு - Ritual
72.குவியம் - Focus
73.குறுங்கால ஞாபகம் - Short term memory
74.கூட்டுக்குடும்பம் - Extended family
75.கையாளுதல் - Manage
.76.கெடுதல் - Deteriorate
77.கோபம் - Anger
.78.சகபாடி - Peer
79.சமத்துவம் - Equality
80.சமூக விளைவு - Social Effect
81.சமூக இயைபாக்கம் - Social Adaptation
82.சமூக மயமாக்கல் - Social Changes
84.சமூகத்திறன் - Social Skill
85.சமூக நியமம் - Social norm
86.சமூக விரோத செயற்பாடு - Anti social activity
87.சமூக வளங்கள் - Community resource
88.சிந்தனை - Thought
89.சிறுவர் காப்பகங்கள் - Orphanages
90.சுகாதார பழக்கவழக்கம் - Health habit
91.சுபாவம் - Character
92.சுயமதிப்பீடு - Self Evaluation
93.செல்வாக்கு - Influence
94.தகவல் - Information
95.தலைமைத்துவம் - Leadership
96.தற்கொலை - Suicide
97.தன்னம்பிக்கை - Self Confident
98.தனித்துவம் - Unique
99.தாழ்வு மனப்பான்மை - Inferiority Complex



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 100.திணிப்பு | - | Impose |
| 101.திருப்தி | - | Satisfaction |
| 102.துக்கம் | - | Sadness |
| 103.துலங்கல் | - | Response |
| 104.துஷ்பிரயோகம் | - | Abuse |
| 105.தூண்டிகள் | - | Stimulus |
| 106.நடத்தை | - | Behavior |
| 107.நடிபாகம் | - | Role play |
| 108.நவீனமயமாக்கல் | - | Modernization |
| 109.நுண்ணறிவு | - | Intelligence |
| 110.நுண்கலைகள் | - | Fine Arts |
| 111.நுண்திறன்கள் | - | Micro Skill |
| 112.நெருக்கடி | - | Crisis |
| 113.நேராக | - | Positive |
| 114.பண்பு | - | Quality |
| 115.பண்பாடு | - | Culture |
| 116.பதற்றம் | - | Anxiety |
| 117.பயிலுநர் | - | Trainee |
| 118.பயிற்றுனர் | - | Trainer |
| 119.பரம்பரை | - | Hereditary |
| 120.பரிமாணம் | - | Dimension |
| 121.பாராட்டு | - | Appreciation |
| 122.புலக்காட்சி | - | Perception |
| 123.புலன்கள் | - | Senses |
| 124.புனர்வாழ்வு | - | Rehabilitation |
| 125.பொதுமைப்படுத்தல் | - | Generalization |
| 126.மனப்பாங்கு | - | Attitude |
| 127.மீத்திறன் பிள்ளை | - | Gifted child |
| 128.முரண்பாடு | - | Conflict |
| 129.மெய்ப்பாடு | - | Somatization |
| 130.வன்மமடைதல் | - | Brutalization |
| 131.வாழ்வின் அர்த்தம் | - | Meaning in life |
| 132.விசேட தேவை | - | Child with Special needs |
| 134.விரக்தி | - | Frustration |
| 135.விழிப்புணர்ச்சி | - | Awareness |
| 136.விழுமியம் | - | Value |
| 137.வினைத்திறன் | - | Efficiency |
| 138.விஷவட்டம் | - | Vicious circle |
| 139.வெளிப்படுத்தல் | - | Ventilate Express |

தங்கராஜா சதீஸ்
மமா/நு/ஹெதர்செட் தமிழ் வித்தியாலயம்
கந்தபொல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவரும் ஞாலத்தில்
மாற்றம் ஒன்று தேவை
மலையகத்தில் !
மாடி வீடும் மதுபான சாலையும்
கூடி வந்தால் ஓடி விடும்
முன்னேற்றம்!

ஒரு தடவை யோசிக்க
உங்கள் மூளைக்குக் கொஞ்சம்
வேலை கொடுங்கள்!
கல்விக்குள் கால் பதித்து
கஷ்டப்பட்டு தான் கற்றும்
தம் மக்கள் நிலை
கண்டு மனமிரங்காதோ ?
எம் கையில்

எத்தனையோ மின்மினிகள்...?
அத்தனையும் ஒளிரத்தான்
கல் சிறகு படைத்த - பல்
கலைகளுக்கு உயிர் கொடுத்து
பறக்க விடுவோம் அவனியிலே !
சிட்டுக்கள் பின் பறந்து வரும்
மொட்டுக்கள் விரிந்து வரும்- எம்
மலையகமும் உயர்ந்து விடும்!
ஏற்ற மொன்று கண்டு விடும்.

சாள்ஸ்தொம்சன் ஆசிர்வாதம்
நு/அக்கரப்பத்தனை த. ம. வி
அக்கரப்பத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதி

நினைத்தாலே வெடிக்குது
நெஞ்சு
நிம்மதியற்ற வாழ்வை
எண்ணி
தாழ்த்தப்பட் மக்களை
தவிக்க விட்டு
வீடு வாசல் இல்லாமல்
அநாதையாக்கி
சின்னஞ் சிறு
சிறுமிகளை
கொடுமைப்படுத்தி
எதிர்கால நிம்மதியை
தேடுகிறேன்
இறைவா.

அனைவரும் ஒன்றாகச் சேர வேண்டும்
நம்மை அடிமைப்படுத்தும் வர்க்கத்தை மாற்ற வேண்டும்
எல்லோரையும் மாற்ற வேண்டும்
நம் எல்லோருக்கும் எல்லாமே கிடைக்க வேண்டும்.

திருமதி. சற்குனேஸ்வரி பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான சரிதர்கள்

பாறைக்குள் வேரைப் போன்று
பல துறைகளில் ஊடுருவி
அறியாமை என்ற இதழினைக்
கிழித்தெறிந்த கதிர்களானவர்கள்.

தத்துவத்தின் பாதையில் எத்தனையோ தந்தையர்கள்
தண்ட வாளங்களை விரித்து விட்டுச் சென்றனர்
அதில் புகையிரதங்களாய் பயணிக்கின்றோம்
இன்று நாங்கள் புதுமைகளைக் காண்பதற்காக.

வாழ்க்கை என்ற வண்ணச் சோலை தனில்
வாழத் தெரிந்த மகான்களே இவர்கள்
பட்ட மரங்களில் பூக்கொடிகளைப் படர விட்டு
பசுமையாக உருப்பெறச் செய்த ஆசிரியர்களே இவர்கள்

காலத்தின் கருவறையான கல்வியை அடைவதற்கு
அறியாமை என்ற பூட்டைத் திறந்து
எத்தனையோ மெய்யுணர்வுகளை விதைத்த
சிந்தனைச் சிற்பிகளே இவர்கள்.

தொகுப்பு - சி. சத்தியரேக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மொட்டுக்களே நீங்கள்
மிகப் பெரிய சொத்துக்களே
மாறிவரும் உலகில் - மாறா
மாணிக்கக் கற்பாறைகளே
உங்கள் இனிய புன்னகை
எங்கள் வாழ்நாள் வேதமே
ஆசான் என்ற இன்பம்- நாம்
வாழ்வில் பெற்ற செல்வம்
உங்கள் வரவில் மகிழும் - எம்
மனமே என்றும் அழியா வளமே
அன்பான தாயாய் மாறி- பின்பு
அறிவான தந்தையாய் என்றும்
அரவணைத்து கல்வி வழங்கி
சுடர் ஒளியாய் ஒளிக்கச் செய்து
நல்ல பாதையிலே இட்டுச் செல்லும்
ஏழை என்றால் கல்வி தானே
கரை சேர்க்கும்- இந்தக்
கரையைச் சேர்ந்து பிறையாய்
வாழ்ந்து நற் பெயரைப் பெற
கற்றுக் கொள்ளு பாடமொன்றை
திருடிச் செல்லும் செல்வமல்ல கல்வி -அதில்
திறனை வளர்த்தே கற்க வேண்டும்
கல்வி என்று வருபவனை- நாளும்
அள்ளித் தந்து வாழ வைக்க -யாவும்
கற்றுத் தெரிந்து வைத்துக் கொள்ளும்
என்றும் மலையக மொட்டுக்களே

திருமதி. வீ வனிதாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பாரம்பரியத்தில் பெண்கள் கல்வி பற்றிய சிந்தனை

## (சங்க இலக்கியங்களில் ஒரு கண்ணோட்டம்)

தமிழர் பாரம்பரியத்தில் கல்வி கற்பதற்கான சம சந்தர்ப்பம் முழுமையாகப் பெண்களுக்கு வாய்க்காத போதும், ஏதோ ஒரு வகையில் கற்றுயர்ந்துள்ளனர். சங்க இலக்கியங்கள் மூலம் எமது ஆரம்ப கால இலக்கிய வாழ்வியல் கோலங்களை ஓரளவு அறியக்கூடியதாக உள்ளது. பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களின் ஊடாக நோக்கும் போது, பெண் வீட்டிற்குரியவளாகவும், ஆணுக்குப் பணிவிடை செய்பவளாகவும் காட்டப்படுகின்றாள். கல்வி, தொழில், போர் ஒழுக்கம் போன்றன ஆணுக்குரியவையாக இருந்தன.

"வினையே ஆடவர்க்குயிரே மனையுறை
மகளிர்க்கு ஆடவர் உயிரென...."
(குறுந்தொகை135.1-2)

இற்பினிள் வழாஅ நற்பல உதவி
பெற்றோற் பெட்கும் பிணையை அகென......
(அகம் 8,6:13-14)

போன்ற சங்கச் செய்யுள்களில் இருந்து பெண்கள், கணவன் விரும்பத்தக்கவளாகவும் சிறந்த கற்பொழுக்கம் உடையவளாகவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளாள். குழந்தைகள் பெற்றுக் கொடுப்பது தாயின் கடமை என்றும், குழந்தைகளைச் சான்றோர் ஆக்குதல் தந்தையின் கடமை என்றும் கூறப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் பெண்கள் வீட்டிற்குரியவர்களாகக் கூறப்பட்டாலும், அரசவையில் பல பெண் புலவர்கள் அக்காலத்தில் வாழ்ந்துள்ளனர். சுமார் 29 பெண்பாற் புலவர்கள் இங்கு இருந்ததாக அறிய முடிகிறது. ஔவையார், பாரிமகளிர், காவற்பெண்டு, காக்கை பாடினியார் போன்றவர்களைச் சான்றாகக் கூறலாம்.

ஆரம்ப காலங்களில் இலக்கியப் படைப்பில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவில் இருந்த போதும், தொகுத்தோன் தொகுப்பித்தோனது அலட்சியப் போக்கினால், அவர்களது படைப்புக்களும் பெயர்களும் கூட இடம்பெறாமல் போயிருக்கக் கூடும். ஏனெனில், சங்க இலக்கியங்களில் அனைத்தும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என எந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டன, என்பதில் இன்னமும் தெளிவு இல்லை. அகம், புறம் என்ற பிரிப்பு கூட சில இடங்களில் பொருந்தி வராமையினை அவதானிக்கலாம்.

வரம்பற்ற புணர்ச்சியும், நாடோடி வாழ்வுடனும் இருந்த மக்கள் காலப் போக்கில் நிலையான ஒரு இடத்தில் தம் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய விழைகின்றனர். இங்கு ஏற்படக்கூடிய சொத்துப் பிணக்கினை நீக்க, குடும்பம் என்ற அடித்தளம் இடப்படுகிறது. அத்துடன் இங்கு கற்புக் கோட்பாட்டினை அவதானிக்க முடிகிறது

இதில் இருந்தே பெண் இல்லத்திற்குரியவளாக்கப்படுகிறாள். இதனைச் சங்ககாலக் குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம், ஆகிய நிலப்பிரிவுகளினுள் இருக்கும் படிமுறை வளர்ச்சி மூலம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்பது இங்கு வெறுமனே ஏட்டுக் கல்வியாகவன்றி, தொழில் முறைகள் கற்கையினையும் அவதானிக்கலாம். உதாரணமாகக் குறிஞ்சி நிலத்தில் பெண்கள் திணைப்புனம் காத்தல்; முல்லை நிலத்தில் பால், தயிர் போன்றவற்றை விற்றல்;

"ஆய்மகள் அளைவிளை உணவிற்கிளைவுடன்
அருந்தி நெய் விலைக்கட்டிப் பசும் பொன் கொள்ளாள்.
எருமை நல்லாள் கரு நாகு பெறு உம்
மடிவாய் கோவலர் குடி.........(பெரும்பாண் 162-160)

எனும் பாடல் மூலம் முல்லை நில ஆயர் மகளிர், தயிர், நெய், மோர் முதலியவற்றைக் குறிஞ்சி போன்ற நிலங்களுக்குக் கொண்டு சென்று பண்டமாற்றாக நெல்லைப் பெற்றுள்ளனர். ஆதன் மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு தமக்கு வேண்டிய அணிகலன்கள் வாங்காது பசு, எருமை முதலியவற்றை வாங்கித் தமது குடியை ஒப்பிய சிறப்பை உணர முடிகிறது.

இவ்வாறாக ஏனைய நிலப்பகுதிகளிலும் ஆண்களுக்குத் துணையாக அவர்களின் தொழில் முறையில் பெண்களும் பங்கு எடுத்துள்ளனர்.

பெண் வீட்டிற்குரியவளாகப் பேசப்பட்டாளும், அனைத்தையும் கடந்து எமது பாம்பரியத்தில் பெண்கள் தற்றுணிவுடன் வாழ்ந்துள்ளனர். வாழ்க்கைக்கான.. வாழ்தலுக்கான அனுபவங்களும், அணுகு முறைகளும் கூட இன்று கல்வி முறையாக ஏற்க வேண்டியுள்ளது.

எஸ்.அருள்நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் கல்வியும்

அருள்மறையாம் திருமறை அருளிய அல்லாஹ் அதன் முதல் வசனமாக "ஓதுவீராக" என்பதையே குறிப்பிட்டுள்ளார். ஒரு மாரக்கத்தின் பால் அல்லது வேதத்தின் பால் மக்களை வழிப்படுத்த நாடிய இறைவன் அல்லாஹ், தனது மறையின் முதல் வசனமாகத் தொழுவீராக (வணங்குவீராக) போன்ற வார்த்தைகளைப் பிரயோகிக்காது அவன் அருளிய முதல் வசனம் ஓதுவீராக என்பதாகும். இதிலிருந்து கல்வியின் மூலம் மனிதன் தனது சகல விடயங்களுக்கான விமோசனத்தைப் பெற முடியும் என இறைவன் கட்டளையிடுகின்றான்.

மேலும் இறைவன் தனது திருமறையில் பிறிதொரு இடத்தில் கற்றவரும், கல்லாதவர்களும் சமமாவார்களா? எனக் கேட்கின்றான். இவ்வாறாக ஒரு மனிதன் முழுமை பெற அவன் கட்டாயமாகக் கல்வியில் நாட்டம் கொள்ள வேண்டும். கல்வி கற்க வேண்டும் என இறைவன் பணிக்கின்றான்.

அண்ணல் நபி முகம்மத் (ஸல்) அவர்கள் கூட கல்வி கற்பதை ஊக்குவித்துள்ளார்கள். நபியவர்கள் கல்வியைப் பற்றிக் குறிப்பிடும்போது, யார் ஒருவர் அறிவைத் தேடிப் பயணிக்கிறாரோ, அவர் சுவக்கத்தை நோக்கதி தமது பயணத்தைத் தொடர்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது கல்வியைத் தேடிப் பயணிக்கும் பயணம் சுவர்க்கத்தை நோக்கிய பயணத்துக்குச் சமனாகக் கொள்ளப்படுகிறது.

மேலும் இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாத்தின் எழுச்சிக்காக முஸ்லீம்கள் தமது எதிரிகளுடன் மக்காவில் (பத்ர்) எனும் இடத்தில் தமது முதலாவது யுத்தத்தை நடாத்தி வெற்றி கண்டனர். இதன் போது பிடிபட்ட எதிரிகளை விடுதலை செய்யும் ஒரு நிபந்தனையாக முகம்மது நபி "ஸல்" அவர்கள் கற்றறிந்த எதிரிகள் ஒவ்வொருவரும் தமது குழந்தைகள் மூவருக்கும் சில விடயங்களைக் கற்பிக்க வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளார்கள். எனவே, பொருளாதார வசதியற்ற கைதிகள் தமது கல்வியைப் பயன்படுத்தித் தம்மை விடுவித்துக் கொண்டனர். இது அண்ணலார் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் கற்பவனாக இரு அல்லது கற்பிப்பவனாக இரு அல்லது கற்பவனுக்கு உதவுபவனாக இரு, நான்காமானவனாக இருந்து விடாதே என்பது நபி (ஸல்) அவர்களின் பொன்மொழியாகும். கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காகச் சமுதாயத்தைத் தூண்டிய நபி (ஸல்) அவர்கள், மனிதன் தனது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அறிவுடன் தொடர்புற்றவனாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

அறிவைக் கற்பது, இறைவனை நெருங்குவதற்கான வணக்கமெனவும், இறையச்சமிக்க ஒரு செயலாகவும் அமைகின்றது. அவ்வாறே, அதனைக் கற்றுக் கொடுப்பது உயர்ந்த தர்மமாகவும் உள்ளது.

கல்விக்கும் அதனைக் கற்றவர்களுக்கும் அதனைப் போதிப்பவர்களுக்கும் இஸ்லாம் உயர்ந்த கண்ணியத்தை வழங்குகின்றது. அவர்களது ஒவ்வொரு முயற்சியையும் பாராட்டுகின்றது. அவர்களுக்கு உலகில் சிறப்பான அந்தஸ்தையும், மறுமையில் நற்கூலியையும் வழங்குகின்றது. அறிவில் காட்டும் அசிரத்தை, அதில் செய்யும் மோசடி என்பவற்றைக் கண்டிக்கின்றது. தண்டனைக்குரிய குற்றமாகச் சுட்டிக்காட்டுகின்றது.

நாமும் ஆர்வத்தோடு வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கல்வி கற்று, அதன்படி ஒழுகி அதனைப் போதித்து வாழ்வில் வெற்றியடைவோம்.

S.H சாளிகா பேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையே மலர்க..

மானுடம் இறந்து விட்டது
மனிதம் மரணித்து விட்டது
உலகம் அழிகின்றது
உருவம் குலைகின்றது- எனினும்
உருவாகிக் கொண்டிருக்கிறது உணர்வு!
வளர வேண்டும் என்ற உணர்வு!

நிமிர்ந்த நன்னடையும்
நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யாருக்கும் அஞ்சா நெஞ்சமென
பாரதி கண்ட புதுமைப் பெண்- இன்று பாரினை வெல்கிறது!
காத்திருந்த காலங்கள்
கை கொடுக்கக் காரிகையின்
கனவு பலிதமாகின்றது!

எத்தனைப் போராட்டம்?!
அத்தனையும் இன்று
விண்ணிலும் மண்ணிலும்
விளையாட்டிலும் விந்தையிலும்
சாகசம் புரியும் சதாவதானி!
சலனங்கள் பல வந்தாலும்
சயனங் கொள்ளாது சத்தமின்றி
சதாவும் சாதனைகள் ஏட்டுச் சுவடுகளில்
பதித்துச் செல்ல..
தடைக்கற்களையும் தகர்த்தெறியும்
தன்னம்பிக்கை தையலிவளுக்கு!

அடுப்பங் கரையை ஆட்சி செய்த
அரிவையர்...!
ஆசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்யும்
ஆற்றலது பாராய்!
ஏட்டிலே பெண் பெயர் தான் ஏறி நிற்க
சகத்தினில் சரித்திரம் படைத்து
சாத்திரத்தை ஒழித்து இங்கு சமத்துவம் கண்டிட்ட
சரித்திரத் தாரகையே!
உன் தெளிவுதனைக் கண்டு
தெருவோர விளக்கும்- தன் ஒளியைத்
தெரித்துப் படரச் செய்யட்டும்!
அகத்தினில் ஆன்மீக நோக்கும்
சிந்தையில் செம்மையுணர்வும்
சோரமற்ற பார்வையோடும்
சேர்ந்த உன் சேவைக்கு
வந்தனங்கள் கோடி! கோடி!
பெண்மையே மலர்க!

கே. எஸ் சுபாசினி
இராகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் சிறப்பு

குரு என்று கூறும்பொழுது "கு" என்றால் இருட்டு "ரு" என்றால் நீக்குபவர் என்றும் பொருள் கொள்ளலாம். "குரு" என்ற வார்த்தைக்கு அஞ்ஞானம் அல்லது அறியாமை என்ற இருட்டை நீக்குபவர் என்றும் கூறலாம். ஆன்மாவை இறை நினைவிலிருந்து நீக்கி பிறப்பு, இறப்பு என்னும் துன்பங்களுக்கு ஆளாக்குவது மும்மலங்கலாகும். அஞ்ஞானம் அகன்றால் தான் பிறவிப்பிணி நீங்கும்.

அஞ்ஞானம் அகலுவதற்குத் துணை நிற்பவரும், வழி காட்டுபவரும் குருவேயாதலால், குருவின் பெருமை சொல்லில் அடங்காததாகும். இறையருளால் நல்ல குரு கிடைக்கப் பெற்றவர்கள் வாழ்வின் இலட்சியத்தை எளிதில் அடைவர். இறைவனே குருவாகத் தோன்றிய வரலாறுகள் ஏராளமாக உண்டு.

"தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

என்னும் திருமந்திரப் பாடல் குருவின் பெருமையை விளக்குகின்றது. ஆதி சங்கரருக்குக் கோவிந்தபாதரும், சத்ரபதி சிவாஜிக்கு சமர்த்த ராமதாஸ் சுவாமிகளும், சுவாமி விவேகானந்தருக்குப் பகவான் இராமகிருஸ்ண பரமஹம்சரும் சிறந்த குருவின் மான்பினைக் காட்டும் உதாரணங்கள் ஆகும். அருணகிரிநாதருக்கும் வள்ளலாருக்கும், முருகனே தோன்றினார். அவ்வண்ணம் மணிவாசகப் பெருமானுக்கு சிவனே உபதேசம் அளித்தார்.

நல்ல குரு அமையாதவர்கள் துன்பத்திற்குள்ளாவர். கலியுகத்தில் நல்ல குரு வாய்க்கப் பெறுவது அரிது. முற்காலத்தில் தந்தை தமது மகனைத் தகுந்த குருவிடம் சேர்ப்பர். குரு அவனை இவ்வுலகிற்கும், அவ்வுலகிற்கும் தகுதியுடையவனாகவும், வீரனாகவும் பயிற்றுவித்துத் தந்தையிடம் மீளச் சேர்ப்பார். மனிதன் பூரணத்துவம் அடைய "குரு" இன்றியமையாதவராவார். குருவிடம் பக்தி செலுத்துவது மாணவனின் கடமையாகும்

ஆக்கம்.
ச. திலோகசுந்தரி
நு/வ/ டலோஸ் த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்த மானிடம்

ஜனனித்த ஜாதகம்
சரியில்லை நம்
சந்ததி உயர்ந்திட
வழியுமில்லை !

நரகத்தில் நசுங்கிய
நடைப்பிணம் - நம்
நாட்டினில் எங்கு
நடமாட !

சேற்றினில் தடம் பதித்த
பாதங்கள்
என்று - மேட்டினில்
மேலோங்க வழிகிடைக்கும்!

உணர்வுகள் முடக்கப்பட்டு
ஊன்றப்பட்ட மரங்கள் - நாம்
விரும்பினால்
வெட்டப்படுவோம்.
வெறுத்தால் வேருடன்
சாய்க்கப்படுவோம்!

நிலையற்ற மரங்களால்
உருவெடுத்தோம்
இன்று ஊனமுற்று
ஊயிரிழந்து வாழ்கிறோம்

இனி நிழல் கொடுக்க
வேண்டுமென்று நினைக்கிறோம்
கிளையிழந்த மரங்களாய்
கிடந்தாலும்

பலருக்குப் பலன் கொடுக்க
பிறந்திருந்தோம் இன்று
பற்றற்றுப் பாரினில் படுத்து
விட்டோம்!
உறக்கம் எம்மை நெருங்க வில்லை
என்றாலும் எழுந்து விட
சக்தி இல்லை!

எழுதி வைத்த சொத்தென்றால்
அது எமக்கு மட்டும்
ஒரு சேற்று நிலம்!

கனவாவது கண்டு விடலாம்
என்றால் கண்ணுறங்க
வழியுமில்லை
வாழ்ந்து விட்டோம் இன்று
வார்த்தையற்ற மரமானிடராய்!

ஆர். சசிகலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

பெண்ணுக்கு விடுதலையாம்
பெண்மைக்கு அல்ல
பெண் என்றால் பேயும் இரங்குமாம் - என்று
மூத்தோன் வகுத்திட்ட வசைமொழியை - பெண்
திரண்டால் பூமி சிறக்கும் என்று
சிறகடித்துப் பறந்திடு
சிறுமை தனை - உடைத்திடு.

அன்றொரு காலம் கள்ளிப்பாலூட்டி
கருவிலேயே கலைக்கப்பட்டாய்
ஓரின வர்க்கத்தின் அடிமையானாய்
வன் முறையால் வதைக்கப்பட்டாய்
காடையரின் காமவெறியில் சிக்குண்டாய்
எழுந்து வா பெண்ணே விரைந்து வா

புதுமைப் பெண்ணாக நீ மாறிடவே
பூஜித்தான் ஓர் கவி
அவன் கண்ட கனவு நனவாக
உன் மீது விதைக்கப்பட்ட தடைகளை - தகர்த்தெறி
பெண்ணின் பெருமைதனை நிலைநாட்டு
அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு - எனும்
வெறும் பேச்சை - அறிவைக் கொண்டு தகர்த்தெறி

குறுக்கே இருப்பவற்றை
குழிதோண்டிப் புதைத்திடு
முணு முணுப்பையும்
முத்தாய்ப்பாய் ஏற்றுக்கொள்
புது யுகம் காண - புயலாய்
எழுந்திடு
நாளைய உலகம் உன் கையில்
சிந்தித்துச் செயல்படு
சிறப்பாய் வாழ்ந்திடு.......

திருமதி . கோமலா உதயகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னோடே இருந்த ஒருவன்

சிறுவனே!
உன்னோடே இருக்கும்
அந்த ஒருவனையும்
ஒரு முறையாவது
அழைத்து வா....
உறவாடி விட்டுப் போகட்டும்
உன்னோடே!......

அந்தத் தாயும்
அந்தத் தந்தையும்
என்ன செய்தார்கள்
பாடசாலைத் தெருவுக்குக் கூட
அவனை அழைத்து வரவில்லை...
பாவம்!....

அந்த
சிறுவனால்
அந்த அவலங்களை
ஏற்றுக்கொள்ள முடியவில்லை
புறப்பட்டே போனான்
கொழும்பு நோக்கி!
நிம்மதியாய்
வேலை கூட
செய்ய முடியவில்லை
அவனால்,
ஏனெனில்
பள்ளி மாணவர்கள்.......

சகித்துக் கொள்ள
முடியவில்லை இருந்தும்
என்ன பயன்
தாயும், தந்தையும்
பட்டினி கிடப்பார்களே!

முடிவுகள்
இவனுக்குக்
கசப்பாய் இருந்தாலும்
முதலாளி தரும்
அந்த
ஆயிரம் ரூபாய் நோட்டு
அவனை
அடிக்கடி அலங்கரித்துப் போயிற்று.....

காலங்கள்
கடந்தன
அந்த சிறுவனுக்கும்
வயதோ !
பதினைந்தாயிற்று

கொழும்பிலே ஓர்
அவலக்குரல்
"சாக்கடையில் சிறுவனின் பிணமாம்"
அது வேறு யாருமில்லை
அந்தத் தாயினதும்
அந்தத் தந்தையினதும்
பிள்ளைதான்

அந்தச் சிறுவனின்
இறுதிக் கிரியைகள்
இனிதே!
நிறைவுற்றன

பெற்ற தாயின் மனம்
கதறிக்கொண்டே தான்
இருக்கிறது
இன்னமும்!......

இருந்தும் என்ன பயன்
அந்தச் சிறுவன்
கடவுளுக்குக் கூலியாளனாய்
சென்றுவிட்டானே!

அன்பார்ந்த
அன்பர்களே!
இனியாவது
அவனைப் போன்ற
சிறுவர்களை
அழைத்து வருவோம்
நம்
எதிர்கால
சவால்களுக்காக மட்டும்

செ. ஆனந்த்
திம்புள்ள த.ம.வி
பத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதி

இன்றைய நவீன உலகிலே வாழும் ஒவ்வொரு மனிதனும் விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக்கட்டத்தின் மத்தியில் பல்வேறு உடல் உள ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறான் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் சிறியோர், பெரியோர், கற்றோர், கல்லாதவர் என அனைவரையும் பாதித்துக் கொண்டிருக்கும் ஒரு நோய்தான் இந்த மறதி.

இந்த மறதியால் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்களாகிய நாமும் எமது மாணவர்களுமே ஏனையவர்களை விடவும் மிகவும் பாதிக்கப்படுகிறோம் என்றால் மிகையாகாது. இந்த மறதியானது எமது பாடசாலை மாணவர்களிடையே எவ்வாறான தாக்கத்தைச் செலுத்துகின்றது? இதற்கான காரணிகள் யாவை என சுருக்கமாக நோக்குவோம்.

பள்ளியில் கற்றதையோ அல்லது வெளியில் பார்த்ததையோ சில காலம் கழித்து நம் நினைவுக்கு மீட்டிக் கொண்டுவரச் சிரமப்படுகின்றோம். இதுவே "மறத்தல்" எனப்படும். நினைவுகூர்தலின் எதிர்ச்சொல் மறத்தல். சில சமயங்களில் மனந்திருத்தப்பட்ட ஒன்று நம் நினைவுக்கு வராமல் போகலாம். அதற்குப் பல காரணங்களும் இருக்கலாம். எனவே மீட்டுக்கொணர்தல் முடியாமல் போனால், அதை முழுமையாக மறதி என்று கூற முடியாது. மீண்டும் படித்தும் அதில் முன்னேற்றமில்லை என்றால் அது மறதியே! சுருக்கமாகச் சொன்னால், மீட்டுக் கொணர்தலில் ஏற்படும் தோல்வி பகுதியளவு, தற்காலிக மறதி என்றால் மனந்திருந்தலில் ஏற்படும் தோல்வி முழுமையான நிரந்தர மறதியாகும்.

ஒன்றை நாம் நினைவில் வைத்திருக்க முக்கிய காரணிகள் நம் கவனமும், பயிற்சியும், நமது மனநிலையும் ஆகும். கவனத்தோடு கற்பது மறக்காது; தொடர்ந்து பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் ஒரு செயல் மறக்காது; மகிழ்ச்சியான மனநிலையில் நிகழ்வது மறக்காது; துக்கம், அவமானம், போன்றவற்றை மறக்கவே விரும்புகிறோம்.

**மறத்தலுக்கான காரணிகள்**

1. மறத்தலுக்கான முதல் காரணி காலம் ஆகும். காலம் செல்லச் செல்ல மறதியின் வேகம் அதிகமாகின்றது. ஒரு நாள் அறிமுகமான நபர் தொடர்ந்து பார்க்காமல் விட்டால் அவரது முகம் நினைவிலிருந்து நழுவி விடுகிறது. கற்ற ஒரு விடயம் தொடர்ந்து பயிற்சி செய்யப்படாமல் விட்டால் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கப்படுகிறது.

.2.மனநிலையும் மறத்தலுக்கான ஒரு காரணம். நன்கு ஆயத்தம் செய்யப்பட்டு மகிழ்ச்சியான சூழலில் கற்றவை மறந்து போகாது. சரியான ஆயத்தம் இன்றி, வெறுப்புடனோ, அச்சத்துடனோ கற்பவை மனதில் பதிவதில்லை.

3. பின்னோக்கத் தடை (Retroactive inhibition), முன்னோக்கத் தடை, (Productive inhibition) ஆகியவற்றால் மறதி ஏற்படும். காலத்தில் பின்னே கற்றவற்றால் அதற்கும் முன்னர் கற்றவை பாதிக்கப்படலாம். இதுவே பின்னோக்கத்தடை எனப்படும். இவ்வாறே காலத்தில் முன்னே கற்றவை, அடுத்ததாகக் கற்றவற்றின் மனத்திருத்தலின் குறுக்கிட்டு அவை மறக்குமாறு செய்யலாம். இதுவே முன்னோக்கத் தடை எனப்படும்.

4. குற்ற உணர்ச்சி, தன்மானத்தைப் பாதிக்கும் நிகழ்ச்சி ஆகியவை நம் நனவிலி நிலைக்கு ஒடுக்கப்படுவதால் மறப்பதற்கு ஏதுவாகின்றன, என்று பிராய்ட் கருதுகின்றார்.

5. முழுமையாகச் செய்து முடிக்கப்பட்ட செயல்களை விட ஒருவனால், ஆர்வமாகத் தொடங்கப்பட்டு முடிக்க முடியாமல் தடைப்பட்டவை மறக்கப்படுவதில்லை. இது ஸ்காரனிக் விளைவு எனப்படும்.

மறதி என்பது முழுமையும் கெடுதல் தரக்கூடியதல்ல. கற்கும் அனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மற்றும் நமக்குத் துன்பமும், அவமானமும் தரும் நிகழ்வுகளையும் சில வேண்டாத எண்ணங்களையும் மறப்பதே நம் மன அமைதிக்கு நல்லது.

நம்மால் நினைவுக்குக் கொண்டு வர முடியாத அனைத்தும் மறந்துவிட்டதாகக் கொள்ள முடியாது. இவை நம் அடி மனதில் புதையுண்டு இருக்கும் மனவசிய நிலை, கனவுநிலை. போதைப்பொருள்களுக்காட்பட்ட நிலை, மிகுந்த கிளர்ச்சியூட்டப்பட்ட நிலைகளில் நாம் முழுமையாக மறந்துவிட்டோமென்று நினைத்த நிகழ்வுகள் தெளிவாகத் தோன்றும்.

திருமதி. சு.கவிதாசுமுதினி.
நு/வ/இறப்பானொக் த.வி
உடப்புசலாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையின் துயரம்

நீ மனமுவந்து பெற்ற
உன் மழலைகள்
உந்தன் மணம்
நுகர மறுப்பதென்ன....

உன்னை அரவணைக்க
மறுக்கும் உன் மைந்தர்கள்
நாட்டுக்கும் வீட்டுக்கும்
பொருந்தாத
காலக் கடத்திகள்.....

மரக்கறித் தோட்டத்திலே
தினம் மரணிக்கும்
உந்தன் ஜீவன்...
நீ முதுமை என்பதை
மறந்தார்களா?
உன் முட்டாள் புத்திரர்கள்
ஓய்வு வாழ்க்கையிலும்
ஓயாது...
கொழுந்து பறித்து உன்னில்
நா சுவைக்க - நீ
கம்பெனிக் காரர்களின்
பங்குதாரியா?
தாயே

வரண்ட உன் தோல்கள்
தள்ளாடும் கால்கள்
சுருங்கிய உன் தசைகள்
செல் இழந்த
உந்தன் உணர்வலைகள்
புரிய வில்லையோ !
உந்தன் உறவுகளுக்கு
அல்லது...
புரிந்தும் புரியாத
புனிதர்களா ?

உரம் போல் நீ
இருந்து.....உதிரத்தைப்
பாலாய்க் கொடுத்தும்
உந்தன் வாழ்வு
பாலாய்ப்
பரிணமிப்பதுவா?

மாற்றங்கள் பல கண்டும்
மாறாத மைந்தர்களை
மலையகம் மாற்றிடுமா?
என்னை ஈன்றவளும்
ஒரு தாயே....

P.நிஜாந்
நு/வ/அனிக் த வி
உடபுஸ்ஸல்லாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலை வகுப்புகளில் கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கான ஆசிரியர்கள் அதிபர்களுக்கான தொடர்பாடல் செயன்முறைகள்.

தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்படும் கல்வி முகாமைத்துவப் பட்டப்பின் கற்கைச் சான்றிதழின் பகுதித் தேவையினைப் பூர்த்தி செய்யுமுகமாக 1999 - 2000 இல் ஆய்வறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தேன்.

அவ்வாய்வறிக்கையானது அட்டன் வலய 1சி பாடசாலைகளை ஆய்வு மாதிரிகளாகக் கருதித் தகவல் பெறப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகளும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டன. அவ்வாய்வானது பின்வரும் நான்கு தலைப்புகளில் முடிவுகளும், விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டன. அவையாவன,

1. பாடசாலை அதிபர்கள், கற்றல் கற்பித்தல் தகவல்களை ஆசிரியர்களுக்கு அனுப்பும் முறைகள்.
2. ஆசிரியர்கள், அதிபர்களுக்குக் கற்றல் கற்பித்தல் தகவல்கள் அனுப்பும் முறைகள்
3. கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான ஆசிரியர், அதிபர்களுக்கிடையிலான தொடர்பாடல் தடைகள்
4. ஆசிரியர்கள், அதிபரது தொடர்பாடல் தடைகளை நீக்குவதற்கு அதிபரது நடவடிக்கைகள்.

மேற்படி பிரதான தலைப்புக்களில் மூன்றாவதாகக் கூறப்பட்ட கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான ஆசிரியர், அதிபர்களுக்கிடையிலான தொடர்பாடல் தடைகள் பற்றிய ஒரு மீள் நோக்கை இவ்வெளியீட்டின் மூலம் முன்வைக்கிறேன். கடந்த 10 வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட எனது ஆய்வின் முடிவுகளும், விதப்புரைகளும் இன்று எந்த நிலையில் உள்ளது அவை தொடர்கின்றனவா? அவை மீண்டும் ஆய்வுக்குட்பட வேண்டுமா? என்பது பற்றி தற்போதைய ஆசிரியர்கள், அதிபர்களின் சிந்தனைக்காக முன்வைக்கிறேன்.

## கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான ஆசிரியர் அதிபர்களுக்கு இடையிலான தொடர்பாடல் தடைகளுக்கான காரணிகள்

இத்தலைப்பானது பின்வரும் உபதலைப்புகளின் கீழ் முடிவுகளும் விதப்புரைகளும் செய்யப்படுகின்றது.

1. அதிபர்களது சுற்றறிக்கை
2. நேரடிக் கலந்துரையாடல்
3. தகவல்கள் ஆசிரியர்களைச் சென்றடைதல்
4. வேலைப்பளு
5. ஆசிரியர்கள்
6. பாடசாலை நிர்வாகம்
7. ஆசிரியர்கள் கருத்துக்களுக்கான அதிபர்களின் துலக்கம்.

முடிவுகள்:

1. பாடசாலையில் பொதுவாக எழுத்து மூலமான ஆவணமாக சுற்றறிக்கை கற்றல் கற்பித்தல் தகவலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இருந்த போதிலும் சுற்றறிக்கையைப் பார்த்த உடன் ஒரே முறையில் ஆசிரியர்களுக்குத் தெளிவு ஏற்படுவதில்லை என்பது தெளிவாகின்றது. இதற்கு ஆசிரியர், அதிபர்களின் மொழிக் குறைப்பாடு ஒருகாரணமாக விளங்குகின்றது. இதனால் கற்றல் கற்பித்தல் தகவல் தெளிவின்மை, நேரம் தவறுதல், பூரணத்துவம் இன்மை, போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நேரடிக் கலந்துரையாடலுக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு நேரம் ஒரு தடையாக அமைகின்றது. மாணவர் தொகை, ஆசிரியர் தொகை அதிகமாக உள்ளமையால் கற்றல் கற்பித்தல் சம்பந்தமாக அதிபர் ஆசிரியர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. 60% ஆன ஆசிரியர்கள் நேரம் ஒரு தடையாக இருப்பதாகக் கூறியுள்ளனர்.

3. அதிபர் - ஆசிரியர்களின் சீரற்ற உறவு, ஆசிரியர்கள், அதிபர்களின் அதிகார ரீதியான பயம், பாடப்புல அறிவின்மை என்பன கற்றல் கற்பித்தல் தகவல்கள் பரிமாறிக் கொள்வதற்குத் தடையாக அமைகின்றன.

4. ஆசிரியர்களது தொழில், சேவை மனப்பான்மையின்மை, ஆசிரியர்களது தொழில் ரீதியான சட்டதிட்டங்கள் வலுவின்மை, இடைநிலை முகாமையாளர்கள் மூலம் அனுப்பப்படும் தகவல்கள் திரிபடைதல் என்பன ஆசிரியர் - அதிபர் கற்றல் கற்பித்தல் தகவல் பரிமாற்றத்திற்குத் தடையாக அமைகின்றன.

5. பாடசாலை ஒரு சமூக மத்திய நிலையமாகத் தொழிற்படல், கற்றல் கற்பித்தல் தகவல் பரிமாற்றத்திற்குத் தடையாக அமைகின்றது. பாடசாலை அதிபர்களை நேர்முகங்காணலின் போது, ஒரு நாளில் கிடைக்கும் தகவல்கள் 30 எனவும் அதில் 25க்கு மேற்பட்டவை பாடசாலையின் சமூக செயற்பாடாகும் எனவும் கூறினர். எனவே அதிபர்களின் வேலைப்பளு கற்றல் கற்பித்தல் தகவல் பரிமாற்றத்திற்குத் தடையாக அமைகின்றது.

6. ஆசிரியர்கள் அதிபர்களது பாடப்புல அறிவின்மை, கலைத்திட்ட அமுலாக்கத்தில் கல்வித் திணைக்களத்தின் ஆர்வமின்மை போன்ற காரணிகள் கற்றல் கற்பித்தல் பரிமாற்றத்திற்குத் தடையாக அமைகின்றன. இதிலிருந்து தகவல் வழங்குபவர்களுக்கும், தகவல் பெறுபவர்களுக்கும் இடையில் கருத்துத் தெளிவின்மையானது தொடர்பாடலுக்குத் தடையாக அமைவதாக உள்ளது.

7. கருத்து முரண்பாடு, அதிபர்களது தாழ்மையுணர்வு, முகாமைத்துவ ஆற்றல் குறைந்த அதிபர்கள் போன்றன தகவல் வழங்குதல், பெறுதலில் தடையை ஏற்படுத்துகின்றது.

பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் தகவலை ஒழுங்கமைத்து வழங்குவதற்குரிய கலைத்திட்டம் பற்றிய அறிவு தெளிவற்றதாகவுள்ளது. அதே போல் ஆசிரியர்களும் தகவல் பரிமாறக் கலைத்திட்டம் பற்றி தெளிவற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும் ஆசிரியர்களுக்கிடையில் கருத்தொற்றுமை, தொழில் சேவை மனப்பாங்கின்மை போன்ற காரணிகள்
கற்றல் கற்பித்தல் தகவல் தொடர்பாடல் தடைகளாக அமைகின்றன. தகவல் வழங்குபவர்க்கோ, பெறுபவர்க்கோ விடயம் பற்றிய தெளிவற்ற நிலைமை, தொடர்பு கொள்ளும் ஆற்றலின்மை, அதிபர்களின் சமூகத்தொடர்பு என்பவை தொடர்பு கொள்வதில் இடையூறுகளை ஏற்படுத்துகின்றன. நேர முகாமைத்துவம் பற்றிய அறிவு ஆசியர்களுக்கோ, அதிபர்களுக்கோ கிடையாது.

## விதப்புரைகள் :-

1. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மொழி ஆற்றலை விருத்தி செய்து கொள்ள வேண்டும். மொழி ஆற்றல் சிறப்பாகக் காணப்படும் போது எழுத்து மூல, வாய்மொழி மூலத் தொடர்பாடல் குறைபாடுகளை நீக்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

2. நேரவள முகாமைத்துவம் பற்றிய அறிவை ஆசிரியர்கள், அதிபர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். விஷேடமாக அதிபர்கள் எத்தகைய நேரத்தை எத்தகைய செயற்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய போதிய அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆசிரியர்களால் தொழில் மகத்துவம் உணரப்பட வேண்டும். ஆசிரிய தொழில் ஒரு சேவை எனக் கருத வேண்டும்.

4. அதிபர்கள் - ஆசிரியர்கள், ஆசிரியர்கள் - ஆசிரியர்கள், அதிபர்கள் - இடைநிலை முகாமையாளர்கள், ஆசிரியர்கள் என்போர்களுக்கிடையிலான கருத்து முரண்பாடு நீக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

5. பாடசாலை சமூக மத்திய நிலையமாகத் தொழிற்படுவதற்கு நேரக்கட்டுப்பாடு வரையறுக்கப்பட வேண்டும். அதற்காக அதிபர், பிரதி அதிபர்களுக்கு உரிய ஊக்குவிப்புக்கள் வழங்கி அவர்களை உற்சாகப்படுத்துவதோடு, பாடசாலை கற்றல் கற்பித்தலுக்கு இடையூறு ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

6. ஆசிரியர், அதிபர்கள் கற்றல் கற்பித்தல் தகவல் பரிமாற்றத்திற்குப் பாடசாலைக்கு வெளியேயுள்ள கல்வி சார் நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முயல வேண்டும். கருத்துத் தெளிவு ஏற்படுவதற்கு இவை பெரிதும் உதவக் கூடியன.

பெ. ரெங்கசாமி
கோட்டம்/111
உதவி கல்விப் பணிப்பாளர்,
வலய கல்விப் பணிமனை,
அட்டன்
விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சி நெறி.
நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சிறுவர் அபிவிருத்தியில் கல்வி நிலை

சிறுவர்களின் அபிவிருத்திக்கான உரிமைகளில் கல்வியானது பிரதான இடம் பெறுகின்றது. இலங்கையின் தேசிய கல்வி முறைமைக்குப் பாரியளவிலான இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையின் தேசிய இனங்களுள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக மலையக சமூகம் காணப்படுவதை அவதானிக்கலாம்.

சுதந்திரத்திற்கு முன்னரான இலங்கையின் கல்வி மீதான விஷேட ஆணைக் குழுவினால் இலங்கையின் கல்வி தொடர்பான அறிக்கை பிற்பட்ட கால கல்வி முறைமையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இதில் தோட்டப் பாடசாலைகள் குறித்து ஒரு வார்த்தையேனும் இல்லை. திரு C.W.W கன்னங்கரா அவர்கள் இச்சட்டத்தில் தோட்டப்புறக் கல்வி இந்திய முகவரது பொறுப்பாகும் எனக் கூறியதோடு, இப்போதைக்கு தோட்டப் பாடசாலைகள் விடயம் கைவிடப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

1940 களைத் தொடர்ந்த கல்வி ரீதியான தனிமைப்படுத்தல் 1970 வரை நீடித்தது. பெருந்தோட்டத் துறையினால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு இந்நாட்டின் பிள்ளைகளுக்கு இலவசக்கல்வி வசதிகள் செய்யப்பட்ட போதும், அவ்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள மலையகப் பிள்ளைகள் 1970 வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

மலையகக் கல்வியின் பின்தங்கிய நிலை குறித்து அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பொதுவாகக் கவனத்திற் கொள்ளவே இல்லை. 1970 - 1977 வரையான காலப்பகுதியில் கூட 24 தோட்டப் பாடசாலைகள் மாத்திரமே அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. 1977 - 1994 வரையிலான காலப்பகுதியில் ஓரிரு பாடசாலைகள் தவிர ஏனைய சகல பாடசாலைகளும் பொறுப்பேற்கப்பட்டு தேசிய கல்வி முறைமைக்குள் கொண்டு வரப்பட்டன.

ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட கல்வி சார் தனிமைப் படுத்தல் ஒரு முடிவுக்கு வந்த போதிலும், இதன் தாக்கமே இன்றும் மலையகக் கல்வி பின்தங்கியமைக்கான பிரதான காரணமாகும். மலையகக் கல்வியை மேம்படுத்தல் தொடர்பாகத் திட்டமிடப்பட்ட முயற்சிகள் 1985ல் பல்வேறு நிறுவனங்களும் முகவர்களும் மேற்கொண்ட ஆய்வின்படி மலையகத்தில் 1986 வரையான காலம் முக்கியமான காலமாகும். இக் காலகட்டத்தில் பின்வரும் பிரச்சினைகள் இனங் காணப்பட்டன. பலவீனமான உட்கட்டமைப்பு, ஆசிரியர் பற்றாக்குறை, இடைநிலைக் கல்விக்கான வசதியின்மை, குறைந்தளவு எழுத்தறிவு வீதம் பிள்ளைகளின் போசாக்கின்மை, பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை போன்றனவாகும்.

அண்மைக்காலத் தகவல்களின்படி பாடசாலை சென்று பயிலாதவர்களில் இந்தியத் தமிழர் 21.3%, சிங்களவர் 4.2%, இலங்கைத் தமிழர் 7.5%, முஸ்லிம்கள் 3.6%, எனக் காணப்படுகின்றனர். இலங்கை மக்களின் கல்வி மட்டம் தொடர்பான சகல குறிகாட்டிகளும் இந்தியத்தமிழராகிய மலையகத்தவரின் பின் தங்கிய நிலையினை எடுத்துக் காட்டுகின்றன என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

மேலும் மலையகப் பாடசாலைகளில் மாணவர் வரவு வீதம் கணிசமாகக் குறைந்துள்ளதென்றும், இடைவிலகல் வீதம் அதிகரித்துள்ளதெனவும் கூறப்படுகின்றது. இன்னும் பத்தாண்டு காலப்பகுதியில் பெருந்தோட்டங்களில் மாணவர் தொகை 40,000 இனால் வீழ்ச்சி அடையும் எனக் "கல்வித் திணைக்கள அறிக்கை" கூறுகின்றது. இதற்கான காரணமாகத் தோட்டப்பகுதிகளின் வறுமை, கல்விக்கெனப் போதிய வளங்கள் இல்லாமை, பெற்றோர் வெளிநாடு செல்லல், அறியாமை, அக்கறையின்மை என்பனவாகும்.

இவ்வாறான நிகழ்வுகளால் மலையகச் சிறுவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. வளர்ந்து வரும் சூழலுக்கு ஏற்ற வகையில் இவர்களால் போட்டி போட முடியாத நிலை உருவாகின்றது. எனவே, சிறுவர்களது அபிவிருத்தியில் கல்வி உரிமையானது மலையகச் சிறுவர்களை உரிய முறையில் சென்றடையவில்லை எனலாம்.

தொகுப்பு :- S. சிவரூபி - நு/பிரஸ்டன் த.வி
அக்கரபத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீறு கொண்டெழுங்கள்

இது,
முடிவுரை அல்ல
முகவுரை.
புதிய ஆரம்பத்தின்
முதல் அத்தியாயம்
எங்களது,

வறுமையைச் சொல்லிச், சொல்லி
வாடிப்போனோம்.
ஏழ்மையைச் சொல்லிச், சொல்லி
ஏங்கிப்போனோம்.
இனி,
சற்று மாற்றி யோசிப்போம்.

எங்களை, நாங்களே யாசிப்போம்.
புதியதாய் சிந்திப்போம்
எங்களது சுமைகள்
உங்களது தோள்களில்.
இச்சமூகத்தின் விடிவுக்காய்
அணி திரளுங்கள்.
நாங்கள்
ஓய்வுக்காய், சற்று
ஒதுங்குகிறோம்
இள இரத்தம் பாய்ச்சும்
இனிய முயற்சி
நல்ல செய்தி.
நம் செவி எட்டும்
நம்பிக்கை!
நாளைய பொழுது
நல்லதாய் விடியும்.

நீங்கள்,
வீரியமிக்க வித்துக்கள்,
வீறுகொண்டெழுங்கள்.

P.K.சிவஞானம்.
(விரிவுரையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுக்குள் சுமந்த நினைவலைகள்

சூரியனையும் தீக்குச்சியினால் சுட்டெரிக்க நினைக்கும் இவளின் விவேகம், சுறுசுறுப்பு, சுகமான வாழ்க்கை எல்லாமே புன்னகைத்தபடி பூங்காவைக் கண்டு பூரிப்படைகிறது. பூங்காவும் இவளை வாவென்று வரவழைத்துக் கொள்கிறது. தன்னை உயர்த்திக் கொண்ட இவள் தன் வாழ்வின் நினைவுச் சுவடுகளை இப்படி நினைத்துப் பார்க்கின்றாள்.

நீந்திக் கடந்த நீச்சல் தடாகமானாலும் நினைவுக்குள் இருப்பவை தானே நினைவலைகள்; அத்தனை நினைவலைகளையும், அந்தக் கொடூரமான வாழ்க்கையையும் நினைத்துப் பார்ப்பதிலே எனக்குள் ஒரு வேதனை இருக்கத்தான் செய்கிறது. எப்படி அதனை மறப்பது? அப்படியே நெஞ்சுக்குள் உள்ள வழி வெளியேறும் போது எப்படி அதனை மறப்பது? அப்படியே நெஞ்சுக்குள் உள்ள வழி வெளியேறும்போது எப்படியும் நெஞ்சு வெடிக்கும் போல இருக்கு என்று நினைத்த மதுமதி தன் கண்ணீர் வெள்ளம் போல் வெளியேற மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்க்கிறாள்.

அப்போது, அங்கே பார்த்தவுடன் பார்வைகள் அத்தனையும் தன் பக்கம் ஈர்த்துக் கொள்ளக் கூடியளவான மெல்லிய இடையும், மெல்லிய சிரிப்பும் மற்றவரை அப்படியே தன்வயப்படுத்திக் கொள்ளும் அவளின் கற்பித்தல் முறையும், மாணவர்களிடம் அன்பாகப் பழகுவதிலும் ஆலோசனை வழங்குவதிலும் மிகவும் கண்டிப்பான ஆசிரியையான வசந்தா, இவளுக்கும் அமலாவிற்கும் இடையிலான நெருக்கமான உறவு என்றுமே அடிமனதில் ஆழமாகப் பதிந்தது. இருப்பினும், இளவயதிலேயே அமலாவிற்குத் திருமணமாகிவிட்டது. கணவனின் கொடூரமான நடத்தைக்கு ஆளாகிய இவள், அவளின் குடும்பச்சுமை காரணமாக வெளிநாடு செல்கிறாள் என்பதை உணர்ந்த வசந்தா மதுமதியைப் பார்த்து ஒருமுறை ஞாபகப்படுத்திக் கொண்டு அருகே வருகின்றாள்.

என்னம்மா கண்ணு கலங்கியிருக்கு; அதுவா? ஒன்னு இல்லம்மா, என்று வசந்தாவின் மடியில் படுத்த மதுமதியின் நெஞ்சுக்குள் அத்தனை நினைவுகளும் திரைபோல் ஓடியது. தன் சம்பந்தன் அயல் வீட்டு அக்கா பாப்பாத்தியை சம்பந்தம் பேசி முடித்துக் கொண்ட பிறகு, தீக்கட்டையால் சுடுவதும், தான் துடிதுடிப்பதும் இன்னும் அவளால் மறக்க முடியாது. இவள் ஒருநாள் அம்மா என்னை அடிக்காதே, ஐயையோ! வலிக்கிறதே என்று உள்ளம் துடிக்கையில் யாரடி நீ சனியனே உன் அம்மா? வெளியே போடி மூதேவியே என்று முடியைப் பிடித்து வெளியே போடி மூதேவியே என்று பிடித்து வெளியே தள்ளிவிட்டாள். வந்தவளின் வம்பு புடித்திருக்க என ஊர் பேச "மது" சம்பந்தன் காலில் மயங்கி விழுந்தாள். பின்னர் மயக்கம் தெளிந்து பார்க்கையில் பார்வதி கடுகடுப்பாய் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். ஊர் சுற்றி வேடிக்கை பார்த்தது. இவ்வளவு வேதனைகளையும் தாங்க முடியாத மதுமதி, தன் தாய் அமலாவிற்கு இப்படி ஒரு மடல் எழுதுகின்றாள்.

கடல் கடந்த அன்னையே,

கண்ணீரால் உனக்கொரு கடிதம்; நானறிந்த வகையில் நீ நலமாய் இருப்பதாக நினைக்கிறேன். நான் இங்கு நாசமாகிக் கொண்டிருக்கிறேன். எனக்கு எழுத முடியவில்லை. இந்த ஏடுகளும் கண்ணீர் வடிக்கின்றது. ஏனென்றால் எம் சுமைகளை எழுத ஏடுகளும் போதாதென்று நீ போனாய். எம்மை நிம்மதியாய் வாழவைப்பேன் என்று, நீ போன பிறகு நிம்மதிகள் சீர்குலைந்தன. நித்தம் வயிற்றுப்பசி தீர்க்க வழிதேடி அலைகிறேன். உன் மூத்த பிள்ளை வசந்தன் மதுவையும் மாதுவையும் விலை கொடுத்து வாங்கி விட்டான். எனதன்பின் வாசு வாழ்க்கைக்கு விடைகொடுத்து வானுலகை அடைந்துவிட்டான்; இப்படி ஒரு வாழ்க்கை.

ஏனென்று தெரிய வில்லை; வந்துவிடுவேன் என்று நீ சொன்ன போது எனக்குப் புத்துயிர் கிடைத்ததம்மா, பூமியில் பூக்கள் எல்லாம் மலர்ந்ததம்மா; ஆனால் நீயும் அங்கே மறுவாழ்வைத் தேடிவிட்டேன் என்று என்னை மறந்து போனாயே? இதுவோ உன்மகிமை, வாழப்பிறந்த நான் வாழ்வதா? சாவதா? வருத்தத்தோடு என் மடலை நிறைவு செய்து உன் மடலை எதிர் பார்க்கிறேன்

என்றும் பிரியமுடன்
மகள் மதுமதி

என எழுதி அனுப்பிவிட்டு தன் இருப்பிடத்திற்கு விடைகொடுக்கின்றாள். மதுமதி திக்குத் தெரியாத திசைகளெல்லாம் அலைந்து திரிந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்கையில், மகளே யார் அங்கே? என்ன செய்யப் போறீங்க? என்று அன்பாக ஒரு குரல்; திரும்பிப்பார்த்தவள் திடுக்கிட்டாள். "வசந்தா" டீச்சர் என அறிந்து கொண்டு டீச்சர் டீச்சர் வசந்தாவின் கரங்களைப் பிடித்துக் கதறுகின்றாள், கத்துகின்றாள் மதுமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகமே அழிந்து போனது போல அவளுக்குள் ஒரு நினைப்பு ஆழமாகப் பதிந்திருப்பதை அறிந்த ஆசிரியை "என்னம்மா! நான் வந்துவிட்டேன், உன் டீச்சர் நான் வந்துவிட்டேன் இனி நீ அழக் கூடாது; என்ன நடந்தது உனக்கு? நீ வகுப்பில் எப்போதும் முதல் மாணவி தானே; என்றுமே நீ எனக்கு முதல் மாணவியே சொல் மகளே சொல்" என வினாவ மதுமதி நெஞ்சுக்குள் சுமந்த சுமைகளை டீச்சரிடம் மெதுவாக இறக்கி வைத்தாள். டீச்சர், தன்னை அம்மா மது நானே உன் தாய், தந்தை, சொந்தபந்தம் எல்லாம். நான் உயிரோடு இருக்கும் வரை என் மது அம்மாவை யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன். வாமா கண்ணே வீட்டுக்குப் போவோம் எனக் கூறி அவளை அணைத்தபடி வீட்டிற்குக் கூட்டிச் செல்கின்றாள். தான் திருமணமாகி 07 வருடங்களாகப் பிள்ளை இல்லை என்ற கவலையை நீக்கிக் கொண்ட டீச்சர் இனிமேல் என் செல்லப்பிள்ளை நீதான்; நீ நல்லாப் படித்து உலகத்திற்கு முன்மாதிரியாய் வரணும்; அதுக்கு உதவி செய்ய அம்மா நானிருக்கிறேன் என மெதுவாகத் தலையைத் தடவுகிறாள். மதுவின் உள்ளம் குளிரப் பல வார்த்தைகள் வழங்குகின்றாள். மதுவுக்குப் புது நம்பிக்கை கிடைக்கின்றது; புத்துயிர் பிறக்கிறது.

மது இழந்ததை மறக்கின்றாள், இருப்பவையை இழக்காது ஏற்றுக்கொள்கின்றாள். பக்கத்துப் பள்ளிக்குத் தரம் எட்டுக்குச் சென்றவள் மூன்று வருடங்களின் பின் 11 ஆம் தரத்தில் 9A சித்தி பெற்று அகில இலங்கையில் முதலிடம் பெற்றுக் கொள்கின்றாள். பின் தான் உயர் தரத்தில் விஞ்ஞானத் துறையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்தில் MBBS பட்டப்படிப்பினை முடித்து வைத்தியராகிவிடுகிறாள். இவளைப் பைத்தியம் எனப் புறம் தள்ளியவர்கள் இன்று இவளிடம் வைத்தியம் பார்க்கச் செல்வதையிட்டு மகிழ்ச்சி கொண்ட வசந்தா டீச்சர், மெதுவாகத் தன் படுக்கை அறைக்குச் செல்கின்றாள். தான் கண்மலர அன்னையோடு, இவளும் இணைந்து தன் நெஞ்சுக்குள் சுமந்த நினைவலைகளை மறந்து தன் கண்களுக்கு ஓய்வு கொடுக்கின்றாள். நிம்மதியாய் நித்திரை செய்கின்றாள்; பிறருக்கு முன் உதாரணமாய் மாறுகின்றாள்; புது வசந்தம் பிறக்கிறது; புது வாழ்வு கிடைக்கிறது...!!!

கோ.யோகேஸ்வரன்
நு/டயகம மேற்கு இல-02 த.ம.வி
டயகம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பாசிரியரின் கடமைகள்

வகுப்பறையின் நடுநாயகம் ஆசிரியன். மாணவரது கல்வி சம்பந்தமான உணர்ச்சிகள், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்திற்கும் ஆசிரியரே
பொறுப்பு. எனவேதான், ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் சரியாகவும், தெளிவாகவும் தெரிந்திருத்தல் அவசியமாகும்.

ஆசிரியர்கள் மாணவர்க்கு நண்பர்கள், வழிகாட்டிகள், ஆலோசகர்கள்; அத்தனைக்கும் மேலாக அவர்கள் பார்த்துப் பழகும் உதாரண புருஷர்கள்; நேரம் தவறாது கருமமாற்றுவதில் அவர்கள் மாணவர்களுக்கு முன்னோடிகள்; மாணவருடனும், சக ஆசிரியர்களுடனும், பெற்றோர்களுடனும் மேலதிகாரிகளுடனும் ஆசிரியர்கள் அன்னியோன்னியமான உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சாதாரண ஒரு ஆசிரியனிலும் பார்க்க, வகுப்பாசிரியனது கடமைகளும் பொறுப்புகளும் சிக்கலானவை. வகுப்பாசிரியர் தாம் கற்பிக்கும் பாடங்களுடன் தமது வகுப்பில் கற்பிக்கப்படும் பாடங்கள் அனைத்தையுமே பார்க்க வேண்டிய கடமைப்பாடுடையவராகின்றார். வகுப்பாசிரியரின் கடமைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1.தனது வகுப்பிற்குத் தேவையான தளபாடங்கள், ஆசிரியர் கைந்நூல்கள், கற்பித்தல் துணைச் சாதனங்கள், ஏனைய உபகரணங்கள் அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

2.மாணவர் வரவுப் பதிவேடு, பாடப்பதிவேடு என்பவற்றை அதிபரிடமிருந்து பெற்று அவற்றைத் தயாரித்தல்.

3. வகுப்பிற்கான பெயர்ப் பலகையைக் காட்சிப்படுத்தல்.

4. வகுப்புக்குரிய நேர அட்டவணையைப் பெற்று வகுப்பறையில் காட்சிப்படுத்தல்.

5. வகுப்பறையைக் கற்றல் கற்பித்தலுக்கேற்ற இடமாக ஒழுங்குபடுத்தல்.

6.வகுப்பறையை எந்நேரமும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் காட்சியளிப்பதை உறுதிப்படுத்தல்.

7.வகுப்பறையிலுள்ள தளபாடங்களைப் பராமரித்தல், கணக்கு வைத்திருத்தல், பாதுகாத்தல்.

8.வகுப்பறைக்குத் தேவைப்படும் பொருட்களை அவ்வப்போது பெற்றுக்கொள்ளல்.

9.தனது வகுப்பு மாணவர் பற்றிய சகல தகவல்களையும் சேகரித்து வைத்திருத்தல்.

10. தனது வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான இலவசப் பாடநூல்கள், இலவச சீருடைகள் என்பவற்றைப் பெற்று அதிபரிடம் ஒப்படைத்தல்.

11. வருட முடிவில் மாணவர்களிடமிருந்து இலவசப் பாடநூல்களைப் பெற்று அதிபரிடம் ஒப்படைத்தல்.

12. தனது வகுப்பிற்குரிய மாணவர் வரவுப் பதிவேடு, பாடப்பதிவேடு, வெண்கட்டிகள் பதிவேடு என்பவற்றை நாளின் ஆரம்பத்தில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளல்.

13.ஒவ்வொரு நாளும் மாணவர் வரவினைப் பதிவு செய்தல்.

14. முந்திய நாள் வருகை தராத மாணவர்களை விசாரித்து ஆவன செய்தல்.

15.தனது வகுப்பு மாணவர்கள் பொதுப்போட்டிகளில் பங்குபற்றலை ஊக்குவித்தல்.

16.தனது வகுப்பு மாணவர்கள் கற்றலைப் புறக்கணித்து விட்டு வேறு வேலைகளில் ஈடுபடாதிருப்பதை உறுதிப்படுத்தல்.

17.தனது வகுப்பில் முதலுதவிப் பெட்டி ஒன்றை தயார்நிலையில் வைத்திருத்தல்.

18.தனது வகுப்பு மாணவர்கள் பாடசாலை நூலகத்தைப் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. வகுப்பறை மட்ட நூலகம் ஒன்றை அமைத்து நடாத்துதல்.

20.தவணைப்பரீட்சைகளின் பெறுபேறுகளை மாணவர் தேர்ச்சி அறிக்கைகளில் பதிதலும், பாடசாலைப் பொதுப்புள்ளி அட்டவணையில் பதிதலும்.

21.தனது வகுப்பு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை ஆய்வுசெய்து அவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் வகையில் ஆவன செய்தல்.

22.வகுப்பேற்றப்பரீட்சையில் தனது வகுப்பு மாணவர்களின் அடைவை மதிப்பிட்டு வகுப்பேற்றம் குறித்துத் தீர்மானித்தல்.

23.பரீட்சையின் பின் திருத்தப்பட்ட விடைத்தாள்களைப் பாடவாரியாகச் சேகரித்து அதிபரிடம் ஒப்படைத்தல்.

24.தனது வகுப்பு மாணவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாயிருத்தல்.

25.தனது வகுப்பு மாணவர்கள் அனைவரினதும் ஆளுமை வளர்ச்சிக்கு வழி செய்தல்.

26.தனது வகுப்பைச் சிறந்த நிலைக்கு உயர்த்த நடவடிக்கை எடுத்தல்.

27.ஏனைய வகுப்புகளிலும் பார்க்க, தனித்துவமான சிறப்பான செயற்பாடுகள் தனது வகுப்பில் இடம்பெறச் செய்தல்

28.பாடசாலைக் காணியில் தனது வகுப்புக்கென ஒதுக்கப்பட்ட பரப்பை அழகுபடுத்திப் பாடசாலையை அழகுபடுத்துவதில் அதிபருக்கு உதவுதல்.

29.தனது வகுப்பு மாணவர்கள் மத்தியில் நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்தல்.

30.பாடசாலைக் கலாச்சாரம் தமது வகுப்பறையில் மிகவும் சிறப்பாகப் பேணுவதற்கு உகந்த அனைத்தையும் செய்தல்.

31.தனது வகுப்பு தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் பொறுப்புக் கூறவும், வகை கூறுதலையும் ஏற்றல்.

32.தனது வகுப்பில் ஒவ்வொரு நாளும் சகல பாடவேளைகளிலும் திருப்திகரமான வேலை நடைபெறுவதற்கு ஆவன செய்தல்.

33.பாடசாலை முகாமைத்துவத்தின் ஒரு கூறான வகுப்பறை முகாமைத்துவம், தனது வகுப்பறையில் சிறப்பாக ஆற்றப்படுவதை உறுதிசெய்தல்.

34.வகுப்பறையில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.

35.வகுப்பறையில் ஏற்படும் பிரச்சினைகளையும், குறைபாடுகளையும் பகுதித் தலைவர், உப அதிபர், அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வருதல்.

36.வகுப்பு மாணவர் தொகையையும், அன்றைய நாளுக்குரிய வரவையும் காட்சிப்படுத்தல்.

37.வகுப்பறையில் மாணவர் சுகாதார அறிக்கையைக் காட்சிப்படுத்துதல்.

38.தனது வகுப்பில் ஒவ்வொரு பாடத்திலும் கற்பிக்கப்பட்டிருக்கும் பாட அலகுகளின் விபரங்களைக் காட்டும் முன்னேற்ற அறிக்கைளைக் காட்சிப்படுத்தல்.

39.வகுப்பறையில் பாட சம்பந்தமான அட்டவணைகள், கோட்டுப்படங்கள் , வரைபுகள் என்பவற்றைக் காட்சிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40.வகுப்பறையில் பொருத்தமான ஏனைய விளக்கப்படங்களையும் காட்சிப்படுத்தல்.

41.தனது வகுப்பில் பற்றாக்குறையாக உள்ள தளபாடங்களை அதிபரிடமிருந்து பெறுதலும், மேலதிகமாகவுள்ள தளபாடங்களை அதிபரிடம் ஒப்படைத்தலும்.

42.தனது வகுப்பில் நீண்டநாள் வருகை தராத இடையில் விலகிய மாணவர் பற்றி ஆய்வுசெய்து அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

43.ஒவ்வொரு மாணவர்கள் பற்றியும் தனியாள் ஆய்வுசெய்து அறிக்கை வைத்திருத்தல்.

44.விசேட உதவி தேவைப்படும் மாணவர்கள் பற்றி ஆய்வு செய்து ஆவணம் செய்தல்.

45.தனது வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களினதும் உடல்நல நிலைபற்றி அறிந்து வைத்திருத்தல்.

46.தனது வகுப்பு மாணவர்கள் லீவு கோரும்போது அதிபருக்குச் சிபாரிசு செய்தல்.

47.தனது வகுப்பு மாணவர்களின் பெற்றோரைச் சந்தித்து, அவர்களின் கல்வி முன்னேற்றம் பற்றி கலந்துரையாடுதல்.

48.தனது வகுப்பு மாணவர்களின் சீருடையினை அவதானித்து ஆவன செய்தல்.

49.தனது வகுப்பு மாணவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்துக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.

50.தனது வகுப்பு மாணவர்கள் தொழில்நுட்பம், அழகியல் போன்ற பாடத்துறைகளில் தமக்குரிய பாடத்தைத் தெரிவுசெய்வதில் இடர்ப்படும்போது தேவையான ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு உதவுதல்.

51.பொதுப் பரீட்சைகளுக்குத் தேவையான அடையாள அட்டைகளைப் பெறுவதில் தமது வகுப்பு மாணவர்களுக்கு உதவுதல்.

52.தனது வகுப்பு மாணவர்களின் முன்னேற்றம் பற்றி பாட ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்.

53.தனது வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்.

54.பாடசாலைக் கண்காட்சியில் தனது வகுப்பு மாணவர்களின் பங்களிப்பு இடம்பெறுவதை உறுதிப் படுத்தல்.

55.மாணவர் மன்றச் செயற்பாடுகளில் தனது வகுப்பு மாணவர்களின் பங்களிப்பை அதிகரித்தல், அவர்களை ஊக்குவித்தல்.

56.மாணவர் வரவுப்பதிவேட்டில் வாராந்த, மாதாந்த, வருடாந்த சுருக்கத்தை நிறைவு செய்தல்.

57.முதலாம் பாட முடிவில் ஆளடையாளமிடப்பட்ட மாணவர் வரவுப்பதிவேடுகளை அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுவதை உறுதிசெய்தல்.

58.நாளின் இறுதியில் தனது வகுப்பிற்குரிய பாடப்பதிவேட்டைப் பரிசீலனை செய்து, பகுதித் தலைவரிடம் ஒப்படைக்கப்படுவதையும் உறுதிசெய்தல்.

59.தனது வகுப்பிற்குரிய ஆவணங்கள் அனைத்தையும் நேர்த்தியாகப் பேணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.வகுப்புத் தலைவர்களுக்கும், பாடத் தலைவர்களுக்கும் கடமைகளைப் பகிர்ந்தளித்தல்.

61.ஆசிரியர்கள் லீவில் செல்லும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக ஒவ்வொரு பாட ஆசிரியரிடமிருந்தும் தேவையான அளவு ஒப்படை அட்டைகளைப் பெற்று வைத்திருத்தல்.

62.வகுப்பறையை நாளாந்தம் சுத்தப்படுத்துவதற்கான அட்டவணையைத் தயாரித்து காட்சிப்படுத்தல், வகுப்பிற்குரிய தளபாட விபரங்களைக் காட்சிப்படுத்தல்.

63.பாடசாலை வசதிக்கட்டணம் சேகரிப்பதில் அதிபருக்கு உதவுதல்.

64.தான் விடுமுறையில் செல்லும் போது பொருத்தமான ஒருவரிடம் தனது பொறுப்புக்களை ஒப்படைத்தல்.

65.ஆண்டுதோறும் பட்டோலையை நிரப்புவதில் அதிபருக்கு உதவுதல்.

66.அதிபரால், உபஅதிபரால், பகுதித்தலைவரால் அவ்வப்போது வழங்கப்படும் வேலைகளைச் செவ்வனே செய்து பாடசாலை சீறாக இயங்குவதற்கு வழிவகுத்தல்.

67.தமது வகுப்பில் பாடவிதானம் திருப்திகரமாக அமுல்செய்யப்படுவதை உறுதிசெய்தல்.

கா. செல்வகுமார்
நு/ மவுஸாஎல் த.வி
லிந்துல.ஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களும் வீட்டுரிமையும்

இன்று மலையக மக்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக வீட்டுரிமை தொடர்பான பிரச்சினை காணப்படுகின்றது. இது தொடர்பாக இலங்கை அரசாங்கமும், மலையகத் தலைவர்களும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தனர் எனக் கூறினாலும், அவை அனைத்தும் பேச்சளவிலேயே நின்று விட்டன எனலாம். ஏனெனில் நடைமுறையில் இவை பாரிய மாற்றங்கள் எதனையும் புரிந்ததாகத் தெரியவில்லை. இவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை நாம் நோக்கும் போது அவ் உண்மை நிலை எமக்குப் புலனாகும்.

இன்னும் மாற்றம் காணாத லயன் முறைகள் மக்கள் வாழ்வுடன் விலக மறுக்கின்றது. இவ் முறையிலான வீடுகளிற்கு உதாரணமாகத் தலவாக்கலை போகும் வழியில் கொட்டக்கலை ரொசிட்டா நகர ஓரத்தில் உள்ள லயத்தினைக் கூறலாம். இதைக் குறிப்பிட்டுக் கூறக் காரணம் கொட்டக்கலை ரொசிட்டா நகரம் எத்தனையோ மாற்றம் கண்டும் அவ் லயன் அமைப்பு மட்டும் மாறவேயில்லை. புனரமைப்பும் செய்யப்படவில்லை என்பதைக் காட்டுவதற்கேயாகும். 1956 ஆம் ஆண்டிலிருந்த அரசாங்கம் பெருந்தோட்டத் துறை மேட்டு நிலக் குடியேற்றத் திட்டத்தை சிங்கள விவசாயிகளுக்காக உருவாக்கியது. இத்திட்டம் 1956 தொடக்கம் 1965 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் நோக்கம் பெரும்பான்மை மக்களைப் பெருந்தோட்ட நிலங்களில் குடியமர்த்துவதற்கேயாகும். 1997 ஆம் ஆண்டு வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டத்தை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்ததுடன், இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில் தேசிய வீடமைப்பு அதிகார சபை என்ற ஒன்றை உருவாக்கியது. இதனைத் தொடர்ந்து 1972, 1975 இல் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட பின் 1978 ஆம் ஆண்டு முதல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இரு இணை வீடமைப்புத் திட்டங்களை அரசாங்கம் சில தோட்டங்களில் மேற்கொண்டது.

1978 - 1980 க்கு இடையில் 9749 இரு இணை வீடுகள் தொகுதி கட்டி முடிந்தது. 1982 முதல் 500 வீடுகளைக் கட்டி முடிக்கும் திட்டத்தினை அரசாங்கம் மேற்கொண்டது. இவ்வாறு தோட்டத்துறையில் கட்டப்பட்ட வீடுகள் தோட்ட முகாமைத்துவத்துக்கும் சொந்தமாக்கப்பட்டன. ஆனால் ஏனைய கிராமப்புறங்களில் கட்டப்பட்ட வீடுகள் இங்கு வாழும் மக்களுக்கே சொந்தமாக்கப்பட்டன. 1972 ஆம் ஆண்டு தோட்டங்களைத் தனியார் மயமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவேளையில் தொழிற் சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுரிமையை ஒரு கோரிக்கையாக முன்வைத்தன. மறுபுறம் தோட்ட முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்க முன்வந்த தனியார்க் கம்பனிகள் தோட்டக்குடியிருப்பு பராமரிப்புகளையும் சமூக நலச் சேவைகளையும் பொறுப்பேற்க முன் வரவில்லை.

அதன் பின்னர் பெருந்தோட்டத்துறை வீடு மற்றும் சமூக நல நிதியத்தை உருவாக்கியது. அதேவேளை தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு காணி வழங்குவதுடன் இவை இணையுரிமையைக் கொண்டிருக்கும் எனவும் அரசாங்கம் உத்தரவாதம் அளித்தது. நாட்டின் ஏனைய பிரஜைகளுக்குக் காணி சொந்தமாக வழங்குகையில் தோட்டத்தொழிலாளர்களுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்படி 6 வருடங்களுக்குள் 483 தோட்டங்களில் கிராம அமைப்பினைக் கொண்ட குடியிருப்புகளை உருவாக்கியது இதன் பிரதான குறிக்கோளாகும். ஆனால் இத்திட்டம் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2003ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீட்டுத்திட்டங்கள் மலையக மக்களுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வாறு காலத்துக்குக் காலம் பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள் பொண்டுவரப்பட்ட போதும், அவை பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்களைச் சென்றடையவில்லை. உதாரணமாக நகர்ப்புறங்களை எடுத்துக் கொண்டால், இவ்வாறான திட்டங்கள் கொண்டுவரப்படும் போது வீட்டுக்கான கடனை முழுமையாகச் செலுத்திய பின் வீட்டுக்கான முழு உரிமையும் அவர்களுக்குக் கிடைக்கப்படுகின்றது. ஆனால் மலையக மக்கள் இதற்காகத் தமது ஊழியர் நம்பிக்கை நிதியைப் பிணையாக வைத்தே வீட்டுக்கான கடனைப் பெற்றாலும் கூட, அவர்கள் தமது வீட்டுரிமையினைப் பெறுவது என்பது மிகமிக அரிதான ஒன்றாகவே காணப்படுகின்றது.

மலையக மக்களின் வீடமைப்பு முறையினை நாம் எடுத்து நோக்கினால், 1924, 1930 களில் கட்டப்பட்ட "லயன்" வீடுகளிலேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவை எவ்விதத் திருத்த வேலைப்பாடுகளும் செய்யப்படாமல், மழைக் காலத்தில் கூரைகளில் தண்ணீர் வீட்டிற்குள் வருமளவிற்குக் காணப்படுவதுடன், அறைகள் சிறிதாகவும் மலசலகூட வசதியற்றதாகவும் போக்குவரத்து வசதியற்றததாகவும் சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்ள முடியாமலும் காணப்படுகின்றனர். இத்தகைய அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்படும் இந்த லயன் வீடுகள் கூட அவர்களுக்குச் சொந்தமானதல்ல.

இதனைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது, மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று சொந்த வீட்டினைப் பெறுவதாகும். இதற்குக் கூட வசதியில்லாதவர்களாகவே எம் மலையக மக்கள் காணப்படுவதானது வேதனைக்குரிய விடயமாகவே இருக்கிறது எனலாம். இவ்வாறான நிலைமைகளில் வீட்டுரிமை கிடைக்காததன் காரணமாகப் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

வீட்டுரிமை தொடர்பாக ஆய்வு செய்த பேராசிரியர் மா.செ.மூக்கையா (1995) லயன் வீடுகளின் கூரை 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதன் பின்னர் மாற்றப்படாமல் மழைக் காலங்களில் வீடு முழுவதும் மழை நீர் கொட்டுவதால் குடியிருப்பாளர்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர் எனக் கூறியுள்ளமை இதற்கான எடுத்துக்காட்டாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வீட்டுப் பிரச்சினையினை எடுத்து நோக்கினால், அவை 10 X 12 அளவு அறையைக் கொண்டதாகவும் முன் பகுதி வராந்தாவாகவும், சமையலறையாகவும் பாவிக்கப்படுகின்றது. இதன்படி ஒரு வீட்டில் அதிகமாக ஐந்து பேரே வாழலாம், ஆனால் வீட்டு வசதி இன்மையால் எட்டு ஒன்பது பேர் ஒரு கொட்டிலில் அடைக்கப்பட்ட அடிமைகள் போல் வாழ்கின்றனர். இதனால் இவர்கள் தமது அந்தரங்கங்களைப் பேணுவதில் மிகவும் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர். தேசியரீதியில் சராசரியாகத் தனியொருவருக்குச் சுமார் 100 சதுர அடி வாழிட வசதியாகக் காணப்படுகின்றது. ஆனால் தோட்டப்புறங்களில் வாழ்வோருக்கு 46 சதுர அடி வாழ்விட வசதியே காணப்படுகின்றமையானது, இவர்களின் இன்னல் மிக்க வாழ்வினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

இவ்வாறான வாழ்விடங்களைக் கொண்ட எம் மக்களின் வீட்டின் அமைவிடத்தைக் கொண்டு பார்க்கும் போது, இவர்கள் மருத்துவ வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை, பாதுகாப்பின்மை மற்றும் சமுதாயப் புறக்கணிப்பு போன்ற துன்பங்களை அனுபவிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்

மருத்துவ வசதியினை எடுத்துக் கொண்டால், ஒரு சிறிய வைத்தியசாலையையும் ஒரு வைத்திய அதிகாரியையும் கொண்டு காணப்படுவதுடன், குறிப்பிட்ட சில நேரங்களில் மாத்திரமே நோயாளிகளைப் பார்ப்பவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர். அத்துடன் அவ் வைத்தியசாலையும் மிகத் தொலைவிலேயே அமைக்கப்பட்டிருக்கும். இதனால் எம்மக்கள் முறையாகவும் உடனடியாகவும் மருத்துவ வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மேலும் 6 க்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் சிறிய அறையில் வசிக்கும் நிலையுள்ளது. அத்தோடு ஒவ்வொரு அறைக்குமான இடைவெளி, குடும்பங்களுக்குமான இடைவெளி சிறிதும் இல்லாததினால் நோய்ப் பரவுகையைத் தடுத்தல், நோயாளர்களைப் பாதுகாத்தல், சுகாதார முறைகளைக் கையாளுதல் என்பன இயலாதுள்ளது.

இவர்கள் வாழ்விடங்கள் போக்குவரத்து வசதியற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. பாதைகள் திருத்தப்படாமலும், அதில் பயணிக்க முடியாத சூழ்நிலையுமே காணப்படுகின்றது. மேலும் இம்மக்கள் எதிர் நோக்கும் மற்றொரு பிரச்சினையாகப் பாதுகாப்புப் பிரச்சினை காணப்படுகின்றது. மழைக் காலங்களிலும், கடும் புயல் வீசும் நேரத்திலும் மரங்கள் சாய்ந்து வீடுகளில் விழுந்து விடும் என்றும், வெள்ளப்பெருக்கு மண்சரிவுகளினால் பாரிய ஆபத்துக்கள் ஏற்பட்டு விடும் என்ற அச்சத்திலேயே இம்மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் 10 X 12 அளவு அறையைக் கொண்ட தொடராகவே லயன் வீடுகள் காணப்படுவதனால் மின்சாரத்தாக்குதல் ஏற்பட்டால் ஒரு வீடு மட்டுமன்றி லயன் வீடுகள் அனைத்தும் சேதமாகிவிடும் நிலைமையே காணப்படுகின்றது.

மலும் 8 பேர் வாழ்கின்ற ஒரு வீட்டினில் மூன்றுக்குக் குறையாத கணவன் மனைவிமார் கொண்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இங்கு இவர்களினால் அவர்களுடைய அந்நியொன்யம் மற்றும் அந்தரங்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே அதிகளவான துஷ்பிரயோகங்கள் நடைபெறுகின்றன, உதாரணமாக சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

வீட்டின் அமைப்பு சரியான முறையில் காணப்படாததன் காரணமாக இவர்கள் தமது கல்வி நிலையிலும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். காரணம் ஒரு வீட்டில் 8 பேர் வசிக்கும் போது அதில் பிள்ளைகள் படிப்பதற்கான சூழல் இல்லாது போகின்றது. தொடர் வீடமைப்புகளைக் கொண்டு காணப்படுவதினால், ஏனைய வீடுகளில் இருந்து வரும் இரைச்சல்கள் மாணவர்களின் கல்வி நிலையினைப் பாதிப்பதாக அமைகின்றது.

லயன் வீடுகளில் வாழ்வதினால் இம்மக்கள் சமுதாயப் புறக்கணிப்பிற்கும் உட்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இவர்கள் லயன் வீடுகளில் இருப்பதனால் இம் மக்கள் உயர் கல்வி நிலையங்களுக்கு அல்லது தொழிலுக்குச் செல்லும் போது தரக்குறைவானவர்களாகவும் மதிக்கப்படுகின்றமையானது இவர்கள் தமது அடிப்படை உரிமைகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறாக மலையக மக்களின் வீட்டுரிமை மீறலானது இல்லாதொழிக்கப்படுவதற்கு மலையகத் தலைவர்களின் பொறுப்பு மட்டுமன்றி எதிர்காலச் சமுதாயத்தினது விழிப்புணர்வும், முன்னேற்றமான முயற்சிகளும் அவசியமாகின்றது.

தொகுப்பு:
V.R சிவக்குமார்
நு/பாமஸ்டன் த.வி
தலவாக்கலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திரம் அறிவைக் கெடுக்கும்.

ஓர் அரசன் வேட்டையாடக் காட்டுக்குப் போனான். ஒரு முயலைப் பிடிக்க வேண்டும். என்பதற்காகத் தன்னுடன் ஒரு வல்லூறையும் உடன் கொண்டு சென்றான். காட்டை அடைந்ததும், ஒரு முயல் ஓடுவதைக் கண்டு தன் கையில் உள்ள வல்லூறை அவிழ்த்துப் பறக்க விட்டு குதிரையில் பின் தொடர்ந்தான்.

வல்லூறு முயலைப்பிடித்து விட்டது. முயலை எடுத்துக் கொண்டான். மன்னன் முயலுக்காக அலைந்த அலைச்சலால் மன்னனுக்குத் தாகம் எடுத்தது. ஒரு குன்றின் சரிவினை அடைந்தான். அங்கு ஓழுகியவாறே விழுந்து கொண்டிருந்த நீரை ஒரு கிண்ணத்தை வைத்து ஒரு கையில் பிடித்தான். சிறிது நேரத்தில் கிண்ணம் நிரம்பியது. வாயருகே குடிப்பதற்கு எடுத்துக் கொண்டு போன போது, அடுத்த கையில் இருந்த வல்லூறு தன் சிறகுகளால் அக்கிண்ணத்தைக் கவிழ்த்து விட்டது.

மன்னன் மறுபடியும் கிண்ணத்தில் நீர் பிடித்துக் குடிக்க முயன்றான். அம்முறையும் வல்லூறு கிண்ணத்தைக் கவிழ்த்து விட்டது. மறுமுறையும் இதே செயல் நடந்தது. மன்னனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. உடனே வல்லூறைத் தாக்கி அடித்துக் கொன்று விட்டான். பிரிந்து சென்றிருந்த மன்னனின் ஆட்கள் வந்தனர். அவர்களுள் ஒருவன் அக்கிண்ணத்துடன் நீருக்காகக் குன்றின் மேல் ஓடினான். சென்றவன் விரைந்து திரும்பி வந்து ஒரு செய்தியைச் சொன்னான். அரசே! இத் தண்ணீரைப் பருகினால் தாங்கள் மாண்டு விடுவீர்கள். இந்த ஊற்றின் ஒரு ஊற்றில் ஒரு பாம்பு தங்கி விஷத்தைக் கக்கி உள்ளது ” என்றான்.

செய்தி கேட்ட மன்னன் மனங்கலங்கினான். வல்லூறு தனக்குச் செய்த பேருதவியை நினைத்துப் பார்த்தான். “அந்தோ! வல்லூறு என் உயிரைக் காத்ததே! அதைப் புரிந்து கொள்ளாமல் அதைக் கொன்று விட்டேனே” ! என்று அழுது புலம்பினான். தான் தவறு செய்ததை எண்ணிக் காலமெலாம் வருந்தினான்.

எந்தச் செயலிலும் ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு முடிவெடுத்து விடக் கூடாது. எதனையும் தீர யோசித்துச் செய்ய வேண்டும். அதுவே சிறந்தது.

தொகுப்பு :-
செல்வி ஜெயகுமாரி கருப்பண்ணன்
நு/ கிளன் ஈகள்ஸ் த வி
லிந்துல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்களும்...!

மலைக்காற்றை
ஏதோ
உள்ளிழுக்கும் சனங்கள்....
பனி படர்ந்த பச்சை மலைகள்
பச்சை மலைகளில் மட்டும்தான்
எங்களை
மலையகத்தார் என்பார்
எங்கள் மேல் அகம் இறங்க
மலைத்து நிற்பதனால் தான்
என்னவோ தெரியவில்லை
மலையகம் என்கின்றனர் !

எல்லாவற்றிலும்
நாங்களும் மலைத்துத்தான்
போயிருக்கிறோம்......
அரசியலிலும் கல்வியிலும்
பொருளாதாரத்திலும்

பற்றைக் காடுகளை
பசுமையுறச் செய்தோம்
பாதைகள் பண்ணினோம்
படிகள் வெட்டினோம்
ஆலைகள் கட்டினோம்
அடிக்கல்லாய் ஆனோம்
ஆணிவேராய் தாங்கி நிற்கின்றோம்

ஆனால்... !
அமர இடமில்லை
அள்ளி சொருக வேறு உடையில்லை
ஒண்டிட ஓர் இடமில்லை
ஓடு இடிக்கிறது தலையில்
தின்றிட உணவு இல்லை
அதிகாரமும் இல்லை
அதனால்
அதிக ஆகாரமும் இல்லை
எங்கள் மழலைகளின் வாய்களில்
மார்க் காம்புகள்.
ஒட்டி உலர்ந்து போய்

பொருளாதாரம்.
எங்கள் குமர, குமரிகளை
கல்வியில் இடைவிலக்கி
இடையில் படங்கையும்
சுரண்டலின் சின்னமாகச் சுரண்டியையும்
கொடுத்திருக்கிறது

கேடுஇல் செல்வத்திற்காக
இத்தனைக் கேட்டிலும்
முண்டாசு கட்டிய
எங்கள் தகப்பன்கள்
முழு நீளக் காற்சட்டை
உடுத்திவிடப் பார்க்கின்றனர்

ஆனால்...!
எங்கள் தகப்பன்களின்
முண்டாசை விடப்
பெரிய தடைகள் !

பள்ளியில் பட்ட மரத்தின் நிழல்கள்
உட்கார்ந்து கொண்டு
புதிதாக யோசிப்பவர்கள் மத்தியில்
நாங்கள் உட்கார்ந்து கொள்வது
எப்படியென்று யோசிக்கிறோம்
வளங்கள் வார்த்தைகளில்
வழங்கலில் இல்லை

முண்டியடிக்கும் எங்கள் முயற்சிகளை
உரக்கச் சொல்ல
சீவியம் இல்லை
உயர்த்திச் சொல்ல
பாரதியும் இல்லை

எங்கள் சோகங்கள்
சுவாரஸ்யமாக இருக்கும்
ஆனால்
சுகம் விசாரிப்பார் யாரும் இல்லை
ஆம்
எங்கள் மேல்
அகம் இறங்க
எல்லோரும் மலைத்துத்தான்
போய் நிற்கின்றனர்.

N.அமிர்தசெல்வன்
நு/ரதல்ல தமிழ் வித்தியாலயம்,
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மலையகக் கல்வி

கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள். அகிலத்திலே புதிய புதிய கண்டுபிடிப்புகளும், புதிய பெறுமதியான பொருட்களும் தோன்றினாலும் மங்காத பெரிய வளம் யாதெனில் அது கல்வி வளமேயாகும். உலகிலேயே கல்வி கற்றவர் வரிசையில் 90% என்ற இடத்தைப் பெற்று எமது இலங்கைத்தாய் நாடு வீறு நடை போடுகின்றது. ஆசியாவில் முதலிடத்தில் உள்ளது. கல்வியின் முக்கியத்துவம் அறிந்து சுதந்திரத்தின் பின் C.W.W. கன்னங்கரவினால் தோற்றுவிக்கப்பட்ட இலவசக்கல்வியே இதன் அத்திவாரம் இச்செழுமை கொண்ட எம்நாட்டில் வாழும் மலையகத்தவர்கள் இதனையிட்டு பெருமை கொள்ள முடியாது. காரணம் நாம் இன்னும் 90% எழுத்தறிவு வீதத்தை அடையவில்லை. சராசரியாக 55% - 60% இடையிலேயே எமது சமூகம் கல்வியில் முன்னேறியுள்ளது. இதற்கான காரண காரியங்களையே இக்கட்டுரை ஆராய்கின்றது.

மலையகக் கல்வியைப் பார்க்கும் போது நாம் திருப்தி கொள்ளும் நிலையில் அதன் வளர்ச்சி இல்லை. பல காரணங்களால் இன்னும் ஆமை வேகத்திலேயே அதன் போக்கு சென்ற வண்ணம் இருக்கின்றது. அதற்கான காரணங்களாக நான் பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றேன். பெற்றோரின் அறிவு, அக்கறை, சிறுவர் வேலை, மாணவர் போஷாக்கு, வழிகாட்டிகள், சினிமா, தொலைக்காட்சி, போதைப்பொருட் பாவனை, சூழல், பாடசாலை கட்டமைப்பு, வளப்பகிர்வு, பிறமாவட்ட மாணவர்களின் ஆக்கிரமிப்பு, அரசியல் தலையீடு என்று பல விடயங்களை நாம் காண முடியும்.

பெற்றோரின் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வை நாம் அவதானிக்கும் போது இன்னும் 100% கல்வியின் முக்கியத்துவத்தினை அவர்கள் உணரவே இல்லை வெறுமனே பாடசாலைக்கு அனுப்புகின்றார்களே அன்றி இவர்கள் கல்வியின் பெறுமதியினை உணர்கின்றார்கள் இல்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயம். அத்தோடு பெற்றோர் பலர் இன்று வெளிநாடுகளுக்குப் பண உழைப்பிற்காகச் செல்கின்றார்கள். இதனால் உரிய பராமரிப்பு இன்றி பிள்ளைகள் வீணே காலங்கழிக்கின்றார்கள். சரியான இலக்கு இன்றி கல்விப்பயணத்தில் இணைந்துள்ளார்கள் இவர்கள். பெரும்பாலான மலையக வீடுகளில் பெற்றோரின் குடும்பச்சூழல் ஆரோக்கியமானதாக இல்லை. இதுவும் எம்பிள்ளைகள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டத் தடையாகவுள்ளது.

சிறுவர்கள் வேலைக்குச் செல்லும் நிலைமை மலையகத்தில் இன்னும் மாறாத நிலைமையாக உள்ளது. மலையகத்தில் உள்ளவர்களே தமது பிள்ளைகளை வருமானத்திற்காகக் கடைகளுக்கும், வீடுகளுக்கும், மரக்கறித் தோட்டங்களுக்கும் வேலைக்கு அனுப்புகின்றார்கள். சிறுவர்களும் பணத்தாசை கண்டவுடன் படிக்கும் ஆர்வம் அற்றுப்போய் வேலையில் காட்டும் ஆர்வம் அதிகரிக்கின்றது. என்னதான் சட்டங்கள் அமுலில் இருந்தாலும் மலையகத்தில் இன்னும் நிலைமை மாறவில்லை. எமது பிள்ளைகளின் போஷாக்கு பற்றி நாம் பார்த்தால் இதுவும் அறியாமையா? அல்லது கொடுமையா என்று தெரியவில்லை.

ஆனால் மலையக மாணவர்களின் போஷாக்குப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகவே உள்ளது. பெரும்பாலானவர்கள் உணவில்லாமலேயே பாடசாலை வருகின்றார்கள். வயதுக்கேற்ற வளர்ச்சியில்லை. சிறு வயதிலேயே பலப்பல நோய்கள். இதன் காரணமாகக் கற்கும் ஆர்வம் நிறையவே மங்கிக் காணப்படுகின்றது. இம்மாணவர்களுக்குச் சரியான வழிகாட்டிகள் வீட்டிலும், தோட்டங்களிலும் இல்லை. இதனாலும் இம்மாணவர்கள் பாவத்திற்குரியவர்கள். இந்நிலை கல்வியில் நிறையவே தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

இன்று மலையகத்தில் தொலைக்காட்சி, டிஸ் எண்டனாக்கள் இல்லாத வீடுகளே இல்லையெனலாம். அவ்வளவுக்கவ்வளவு விரைவான வளர்ச்சி. இது ஆரோக்கியமானதாக இல்லை. ஒரு சில பெற்றோர்கள் தமது விவசாயக் காணிகளை விற்று டிஸ் எண்டனாக்களை வாங்கும் அளவிற்கு மோகம் அதிகரித்துள்ளது. இதனால் பள்ளி செல்லும் மாணவர்கள் சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்ற போதை அரக்கனால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளார்கள். இது கல்விக்குப் பெரும் தடையாக மாறியுள்ளது. மாணவர்களின் கல்வியில் மாத்திரமல்ல கலாசார சீரழிவிற்கும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுச்சென்றுள்ளது. எம்மவரின் கல்வி வீழ்ச்சிக்கும் இது காரணமாகின்றது. எம்மவரின் கல்வி வீழ்ச்சிக்கும் இது பாரிய சூறாவளியாக மாறியுள்ளது.ஒரு காலத்தில் பெரியோரே மது பாவனையில் ஈடுபட்டார்கள். இன்று பாடசாலை மாணவர்கள் இதற்கு அடிமையாகியுள்ளார்கள். பெரும்பாலான இடங்களில் மாணவர்கள் போதைப்பொருட் பாவனைக்கு ஆளாகியுள்ளனர். பாக்கு, மதுசாரம், புகைத்தல் என்பவற்றை மாணவர்கள் பாவிக்கின்றார்கள்.அதனால் பிஞ்சிலே பழுத்த தகாத பழக்கங்களைப் பழகி மொட்டிலே கருகும் நிலை மலையகத்தில் வளர்ந்து வருகின்றது. இது மலையகக் கல்வி வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கின்றது.

எமது மலையகத் தோட்டங்களின் சூழல் 200 வருட காலமாக இன்னும் 90% வீதமானவை லயன் அறைகள் தான். இது கல்விக்குப் பெரும் தடையாக உள்ளது. சூழல் சிறப்பாக அமையாவிட்டால் அபிவிருத்தி தடைப்படும். அதுபோல் கல்வியில் தாக்கத்தினை இந்த லயன் அறைகளும் ஏற்படுத்திய வண்ணமேதான் உள்ளன. எமது பாடசாலைக் கட்டமைப்பும் இன்னும் மாணவர்களைக் கவரும் வண்ணம் பெரும்பாலும் அமையவில்லை. இதுவும் மாணவர்கள் பள்ளிக்கூட வருகையைத் தீர்மானிக்கின்றது. அத்தோடு நவீன காலத்தில் சரியான வளப்பகிர்வு எல்லா மலையகப் பாடசாலைகளுக்கும் கிடைக்காமை மாணவர்களின் கல்வியின் நாட்டத்தினைக் குறைக்கின்றது. இதுவும் எமது மலையகக் கல்வி வளர்ச்சிக்குப் பாரிய விளைவை ஏற்படுத்தி வருகின்றது.

இன்று மலையக மாணவர் நலன் கருதி நுவரெலியா மாவட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் விஷேட சலுகையினைத் தாமும் பெறும் நோக்கில் பிற மாவட்ட மாணவர்கள் நவரெலியா மாவட்டப் பாடசாலைகளை ஆக்கிரமிப்பு செய்வதினாலும் எமது மாணவர்களின் கல்வி வாய்ப்பு பாதிக்கப்படுகின்றது. இதனால் பல்கலைக்கழகத் தெரிவுகளின்போது மலையகத்தவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பு பறிபோகின்றது. இதுவும் எமது கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளது. முக்கியமாக மலையக மாணவர்களின் கல்வி விடயத்தில் ஆரோக்கியமான பங்கு வகிக்கின்றோம் என்று கூறிக் கொள்ளும் அரசியல் தலையீடும் எமது கல்விக்கு ஆரோக்கியமானதாக அமையவில்லை. அரசியல் பின்னணி காரணமாகப் பல பாடசாலைகள் படு பாதாளம் நோக்கி சென்ற வண்ணம் உள்ளன. அரசியல்வாதிகளின் பொருத்தமற்ற வளப்பகிர்வின் காரணமாகப் பல பாடசாலைகள் இன்னும் பின்தங்கியே உள்ளது. இன்னும் நுவரெலியா மாவட்டத்தில் ஒரு தமிழ்த் தேசியக் கல்லூரியும் அமையவில்லை.

மேற்கூறிய விடயங்களையெல்லாம் ஆய்விற்குட்படுத்தி கற்ற சமூகம், கல்வியியலாளர்கள், நலன்விரும்பிகள் ஆரோக்கியமான பங்களிப்பினை வழங்கினால், எமது சமூகம் கல்வியில் முன்னேற்றமடையும். அதற்காக அனைவரும் தமது முயற்சிகளையும் ஆக்கபூர்வமான பங்களிப்புகளையும் வேகமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்தால் எமது மலையகக் கல்வியின் இன்றைய நிலைமாறும். இல்லையேல் என்றும் எம் நாட்டுக்குள் நாம் பின்தங்கிய சமூகமாகவே வாழ நேரிடும். சிந்திப்போம் செயல்படுவோம்.

திருமதி.யசோதரி தயாலெனின்
நு/வ/சில்வர்கண்டி த.வி.
ஹல்கரனோயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விதான்...!

கல்வி ஒன்றே - உனக்கு
உண்மையான எதிர்காலம்
இதை மறந்து நீயும் - இடை
விலகிப் போகாதே

எட்டாம் வகுப்பு படிச்சாச்சு
அரும்பு மீசை முளைச்சாச்சு !
அம்மா நான் - ஸ்கூலுக்குப்
போகலன்னு அடம் பிடித்து - அழுகாதே !

உனையீன்றோர் - உன்னை
உயர்த்திப் பார்க்க எண்ணுகையில்
அவர் எண்ணந்தனை உதைத்து
உதாசீனப்படுத்தாதே !

கல்விதனை மறந்துவிட்டு
கொழும்புக் கடைகளிலே
பொட்டலம் கட்டலாம்னு -
புறப்பட்டுப் போகாதே !

உன் எதிர்காலந் தன்னை
இருட்டாக்கிக் கொள்ளாதே
இமைப்பொழுதுச் சிந்தனையில்
நிறையின்பம் இழக்காதே !

கல்லாதோர் கரம்கிட்டி
கலாசாரந்தனையிழந்து - நீ
காளையர் கூட்டு சேர்ந்து
கறை படிந்து போகாதே !

உனைவைத்து உழைத்தோர்
உயர்ந்து நிற்க - நீயோ
ஊதாரித்தனமாய் - ஊர்
ஊர்சிரிக்கத் திரியாதே !

பெற்றோர் பேச்சுணர்ந்து
கல்விதனை மதித்திட்ட
உன்வகுப்புத் தோழன்
வைத்தியனாய் வந்துநிற்க !

கண்கொண்ட குருடனாய்
கல்விதனை உதறிவிட்டு
காலத்தை அழித்துவிட்ட - காளையாய்
கண்ணீர் விட்டழுகாதே !

கல்விதான் கரையடா
கற்றோர் சமூகம் ஏற்றுமடா
எண்ணையும் எழுத்தையும் நினையடா
எழுந்து நீயும் நடந்திடடா !

K. சத்தியகுமார்
நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலயம்
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

01. மனித நடத்தை உருவாதலில் தாழ்வுணர்ச்சியின் வலுவினைத் தெளிவு படுத்தியவர்.
அல்பிரட் ஆட்லர் (Alfred Adler)

02. குழுக்களின் நடத்தை பற்றி ஆராய்ந்தவர்.
ஆல்போரட் ஜி. எச் (Allport G.H)

03. மரபு நிலை மேதைகளை உருவாக்குவதில் முக்கியமானது என்ற கருத்தை விளக்கியவர்.
கால்டன் (Galton)

04. விளையாட்டு முறையில் கற்றலைப் பிரபல்யமாக்கியவர்.
கால்டுவெல் குக் (caldwell cook)

05. நுண்ணறிவின் அமைப்பு பற்றியும் ஆக்கத்திறன் பற்றியும் பல கருத்துக்களைத் தந்தவர்.
கில்போர்ட் (Guilford)

06. கற்றலில் மண்டலக் கொள்கை என்பதனைக் குறிப்பிட்டவர்.
கர்ட் லெவின் (Kurt levin)

07. நுண்ணறிவு பற்றிய ஆராய்ச்சியாளர்.
தர்ஸ்டன் (Thurstone)

08. ஆய்வுச்சிந்தனை என்பது பிர்ச்சினைக்குத் தீர்வு காணல் என விளக்கியவர்.
ஜோன் டுயி (John Dewey)

09. முயன்று தவறிக் கற்றல், கற்றல் விதிகள், பயிற்சி மாற்றம் போன்றன பற்றி பல உண்மைகளைத் தந்துள்ள கல்வி உளவியல் ஆராய்ச்சியாளர்.
தோண்டைக் (Thorndike)

10. அறிவு வளர்ச்சி பற்றிய புதிய கோட்பாட்டினை விளக்கியவர்.
பியாஜே (Piaget)

11. உளப்பகுப்புக் கோட்பாடு
சிக்மன் பிராய்ட் (Sigman Freud)

12. குளவிப் பூங்கா முறையினை அறிமுகப்படுத்தியவர்
பிரோபெல் (Froebel)

13. முதன் முதலில் முறைப்படியான ஒரு நுண்ணறிவுச் சோதனையை உருவாக்கியவர்.
அல்பிரட் பினே (Alfred Bine)

4. கற்பித்தல் இலக்குகளை வரையறை செய்தவர்.
பெஞ்சமின் புளும் (Benjamin Bloom)

17. நடத்தை வாதக் கொள்கையினைத் தோற்றுவித்தவர்.
வாட்சன் (Watson)

8. குழந்தை மையக் கல்வியினைத் தொடங்கியவர், ஆசிரியருக்குப் பயிற்சியின் தேவையை முதன்முதலில் தெளிவுபடுத்தியவர்.
பெஸ்டலோசி (Pestalozzi)

19. முதல் உளவியல் ஆய்வுக்களத்தை நிறுவி உளவியல் பரிசோதனை முறைக்கு வித்திட்டவர்.
வில்ஹெல்ம் உண்ட்டு (Wilhelm Wundt)

20. கற்றல் பற்றி ஆராய்ந்து இதில் 7 நிலைகளைக் குறிப்பிட்டவர்.
காக்னி (Gagne)

கி.வனிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியன்

"அன்னசாலைகள் அமைத்தலும், ஆலயங்கள் எடுத்தலும், சாலைகள் வகுத்தலும், சோலைகள் வளர்த்தலும் சிறந்த அறங்களே. எனினும், புண்ணியங்கோடி ஆங்கோரேழைக்கெழுத்தறிவித்தல்" எனப் பாரதியார் கற்பித்தலின் பெருமையை எடுத்தியம்பியுள்ளார்.

நல்லாசிரியன் என்பவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை,

"குலனரு தெய்வங் கொள்கை மேன்மை
கலை பயில் செ தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர் குணம் இணையவும்
அமைபவன் நல் உரை ஆசிரியனே"

எனத் தொல்காப்பியப் பாடலடிகள் விளக்குகின்றன

"கருணை கொண்ட உள்ளம் கடவுள் வாழும் இல்லம்" என்கிறார் ஒரு கவிஞர். எனவே, ஒரு ஆசிரியரானவர் கருணை நிறைந்த உள்ளமுடையவராக இருக்க வேண்டும். கருணை நிறைந்த உள்ளமுடைய ஒருவரிடம் இன்முகமும், இனிய சொற்களும் இயல்பாக அமைந்திருக்கும். இது நல்லாசிரியருக்கு இருக்க வேண்டிய பண்பாகும்.

மேலும்,இப்பாடலடிகளில் நிலம், மலை, மலர், துலாக்கோல் என்பவற்றுக்கு ஆசிரியர் ஒப்பிடப்படுகின்றார்.

"தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சியளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பாடும்மே"

என்ற பாடலடிகள் நிலத்தின் பெருமையை வெளிப்படுத்துகின்றன. நிலமானது பிறரால் அறியப்படாத உருவத்தின் பெருமையை உடையது. அது போல, ஆசிரியரானவர் பிறரால் அறியப்படாத கல்வியறிவின் பெருமையை உடையவர். நிலத்தைத் தோண்டுதல் முதலிய கொடுமைகளை மனிதர்கள் செய்தாலும், பொறுமையில் உயர்ந்து நிற்கிறது. அது போலத் தன்னிடம் வரும் மாணவர்கள் செய்யும் குற்றங்களைப் பொறுத்து அவர்களை வழிப்படுத்துபவராக ஆசிரியர் இருக்க வேண்டும். மேலும் பருவம் பார்த்து பயிர் செய்யும் உழவரின் முயற்சிக்குத் தக்கவாறு பலனைத் தருவது நிலம். அது போல மாணாக்கரின் முயற்சிக்கு ஊக்கமளித்து, அவருக்குப் பயனைத் தருதலும் ஆசிரியரின் பணியாகும். எனவே, நல்லாசிரியன் நிலத்தின் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டவனாக இருக்க வேண்டும்.

மலையானது நிலப்பரப்பில் மிக உயர்ந்து விளங்குகின்றது; நிறைந்த வளங்களைக் கொண்டு விளங்குகின்றது. மனிதர் வளங்களைப் பெற விரும்பும் போது, மலை அதனை வழங்குகின்றது. அதே போல, ஆசிரியர்களும் மலை உயர்ந்து நிற்பது போல, பண்பிலே உயர்ந்தவர்களாக விளங்க வேண்டும். பல்வேறு நூல்களையும் கற்று, தெளிந்த அறிவுடையவர்களாக விளங்குவதோடு, தான் பெற்ற அறிவை மாணவர்களுக்குப் பொருத்தமாக வழங்கும் ஆற்றலுடையவராகவும் ஒரு நல்லாசிரியன் விளங்க வேண்டும்.

மலர் மென்மையும், அழகும் நிறைந்தது. அது போல ஆசிரியர்களும் மென்னமையான குணமுடையோராக விளங்க வேண்டும். அத்துடன், துலாக் கோல் பற்றி வள்ளுவர் "சமன் செய்து சீர் தூக்கும் கோல்......" எனக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் நல்லாசிரியனுக்கு துலாக்கோலை ஒப்பிட்டுள்ளார். பொருளையும், நிறையையும் பாரபட்சமின்றி சமன்செய்து காட்டுவது துலாக்கோல். அது போல நல்லாசிரியர்களும் மாணவர்களிடம் எவ்விதப் பாரபட்சமுமின்றி சகல மாணவர்களையும் சமமாக மதிக்கும் பண்புடையவர்களாக விளங்க வேண்டும்.

இவற்றோடு, காலத்தின் தேவைக்கும், மாற்றத்திற்கும் ஏற்பத் தன்னை, தனது அறிவை மாற்றியமைத்துக் கொள்வது நல்லாசிரியனின் முக்கியப் பண்பாக அமைகின்றது.

மேலும், மாணவனின் பல்வகையைக் கவனத்திற்கெடுத்து, பொருத்தமான கற்பித்தல் நுட்பங்களை முறையாகத் திட்டமிட்டு மாணவர்களின் திறன்களை வெளிக்கொண்டு வரும் ஆற்றல் ஒரு நல்லாசிரியனுக்கு இருக்க வேண்டும்.

எனவே, நல்லாசிரியனாக மாணவ சமுதாயத்திற்கு நன்மையளிக்கும் ஒருவனாக விளங்க மேற்கூறப்பட்ட பண்புகளை ஆசிரியர்கள் வளர்த்து தொழிலில், வாழ்வில் உயர வேண்டும்.

திருமதி. வசந்தி (விரிவுரையாளர்)
நு/நாவலர் த.ம.வி. ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையம்,
நானு ஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவனின் குமுறல்

ஆசானே!
விடியலை நோக்கிய
எனது பயணங்கள்
தடைப்பட்டுக் கிடக்கின்றன
என் கனவுப் பாதைகள்
நனவாகாமல்
தடைப்பட்டுக் கிடக்கின்றன.
நானும் தடம் பதித்திடுவேனா?

ஆசானே!
என் அப்பியாசக் கொப்பிகள்
வெள்ளைக் காகிதங்களாய்
வெறுமையாக உள்ளன
எனது கனவுகள்
எனக்குச் சுமையாய்
மாறிப்போய் விட்டன.
மாற்றங்கள் நேர்ந்திடுமா?

ஆசானே!
என் கண்களில் இருண்ட மேகம்.
இன்னும் கரைந்தோடவில்லை
காலத்தின் கோலத்தால்
எனது கனவுகள் கலைந்துவிட்டன
தடம் மாறிய பயணங்களில்
எனது தடயங்கள்
எங்ஙனம் விடிந்திருக்கும்
தடம் பதிக்கும்
எனது பேனை முனைகள்
தடம் மாறிப் போய்விட்டன

ஆசானே!
ஆவலாய்
உன்னிடம் ஒரு வேண்டுகோள்
யாசகம் கேட்கின்றேன்
பிச்சையிடுங்கள்

ஆசானே!
அட்சயப் பாத்திரத்தில்
நீ பிச்சையிடுகிறாய்
பிச்சையிடுங்கள்
மிகவும் பசிக்கிறது
பிச்சையிடுங்கள்

ஆசானே!
நான் தீட்டும் ஓவியத்திற்கு
வர்ணங்களைப் பிச்சையிடுங்கள்
என்னுடைய படைப்புக்கு
உன்னுடைய முகவரியைப்
பிச்சையிடுங்கள்
என்னுடைய கண்களுக்கு
உன்னுடைய ஒளியைப்
பிச்சையிடுங்கள்.

ஆசானே!
அதோ எனது கிராமம்
மிகவும் தொலைவிலே
பல மலைகளின் நடுவிலே
இருளாகக் கிடக்கின்றது
அங்கேயும் ஒரு விடியலைத்
தாருங்கள்
ஞான விளக்குகள்
சுடர் விட்டெரியட்டும்

ஆசானே!
இவன் என் பாடசாலை நண்பன்
இவன் நடந்து வரும் பாதையில்
யார் யாரோ? முட்களை
விதைத்துவிட்டார்கள்
இவனும் வறுமையில் நிரந்தரமாய்
வழி மாறிப் போய் விட்டான்.

ஆசானே!
இவனுடைய பாடசாலைக் கதவுகள்
இன்னும் திறக்கப்படவில்லை.
யன்னல்களும் திறக்கப்படவில்லை.
இவன் தன்னுடைய பாடசாலை
சாவிகளைத்
தொலைத்துவிட்டான்

ஆசானே!
இவனின்
பாடசாலைக் கதவுகள்
திறக்கப்படுமா?

ஆசானே!
அறிவொளி வீசும்
ஞான விளக்குகளே
எமக்கொரு
விடியலைத் தாருங்கள்

J.சந்திரமோகனராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆசிய நாடுகளிடத்தே அதியுயர் தன்மையைக் கொண்டிருக்கும் இலங்கையின் கல்வி வளர்ச்சியில் மலையகக் கல்வியானது மிகவும் பின்தங்கிய நிலையையே இருக்கிறது.

1940 களில் மேற்கொள்ளப்பட்ட கல்விக்கொள்கைகளில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டிருந்தாலும், இறப்பர் மற்றும் தேயிலைத் தோட்டங்களில் தம்மை முடக்கிக்கொண்டு வாழும் இந்திய வம்சாவழி மக்களின் கல்வியில பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியிடவில்லை. இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தையென புகழப்படுகின்ற C.W.W. கன்னங்கரா அவர்களால் 1944 இல் "தோட்டப்பாடசாலைகள் பற்றிய அனைத்துப் பிரச்சினைகளும் தற்போதைக்குப் பிற்போடப்பட்டுள்ளன" எனக் கூறியிருந்தார். இதுவே மலையகக் கல்விக்குப் போடப்பட்ட முதல் முட்டுக்கட்டையாகவும் அமைந்தது. அதேபோன்று 1947ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் E.A. நுகவெல என்பவர் பெருந்தோட்டப் பாடசாலைகளைச் சுவீகரிப்பதில் அரசுக்கு இருந்த ஈடுபாட்டை வெளிக்கொண்டு வந்ததன் காரணமாக 1948-1951 இற்கு இடைப்பட்ட காலத்தில் தோட்டப்புறப் பாடசாலைகள் 955 இலிருந்து 720 ஆகக் குறைவடைந்தமையைக் கூற முடியும். அதே காலப்பகுதியில் அரசாங்கப் பாடசாலைக்கு அருகில் அமைந்திருந்த 80 தோட்டப்புறப் பாடசாலைகளும் மூடப்பட்டன. இதில் படித்த மாணவர்கள் அயற் கிராமப் பாடசாலைகளில் சிங்கள மொழியில் மட்டுமே கற்க முடியுமெனவும் கூறப்பட்டது. இதன் மூலமாக மலையகத் தமிழ் வம்சத்தின் கல்விப் பாதையை முற்றாகத் திசை திருப்ப முயன்றிருந்தமை தெளிவாகப் புலப்படுகின்றது.

மலையகத்தைப் பொறுத்தமட்டில் 1466 பாடசாலைகள் காணப்படுகின்றன. அதில் 434 பாடசாலைகள் தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றில் 234 பாடசாலைகள் ஓரளவு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தாலும், இன்னும் 207 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படாமலேயே உள்ளது.

மேலும் 1928-1972 ம் ஆண்டு வரையான காலப்பகுதியிலும் சரி அல்லது அதற்கு பிற்பட்ட காலப்பகுதியிலும் சரி மலையகக் கல்வித்துறை தொடர்பாகப் பலவழிகளில் மறைமுகமான பின்னடைவை ஏற்படுத்தியிருந்தனர். உதாரணமாக, எமது மலையகத்திற்கென தனியான ஒரு பல்கலைக்கழகம் இன்று வரையில் வெறும் பேச்சாக, கனவாக உள்ளது. அதேபோல் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியிலும் 25% ஏனைய சமூகத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். இன்று இலங்கையிலுள்ள 33 தொழினுட்பக் கல்லூரிகளில் மலையகத்திற்கென, எமது இனத்திற்கெனத் தனியான ஒரு கல்லூரி இல்லை, அப்படியே இருந்தாலும் அதில் தமிழ்மொழி மூலப் பயிற்சி நெறிகள் காணப்படுவதில்லை. மேலும் மலையகத்தில் க.பொ.த. (உ/த) கலை, வர்த்தகப்பிரிவிற்கே அதிக மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். ஆனால் இவர்களுக்கு கற்பிக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியர்களோ அல்லது துறை சார்ந்த ஆசிரியர்களோ அரிதாகவே காணப்படுகின்றனர்.

மேலும் எமது கல்வி நிர்வாகத்துறையை எடுத்துக் கொண்டால் 265 தமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கு 68 ஆசிரிய ஆலோசகர்களே உள்ளனர். இதன் காரணமாகப் பாடசாலைக் கல்வியில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஆலோசனை அல்லது வழிகாட்டல்கள் குறைவாகவே காணப்படுகின்றது. இலங்கை மக்கள் தொகையில் 7% ஐ மலையகத் தமிழர் கொண்டிருக்கின்றனர். நம்மில் வருடத்திற்கு 4000 மாணவர்களாவது பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். ஆனால் இன்றும் 300-350 மாணவரே அத்தகுதியைப் பெறுகின்றனர். இதன் காரணமாகக் கல்வித் திட்டமிடல் துறையில் எம் இனத்தவர் குறைவாகவே உள்ளனர். மேலும் 1981 ஆம் ஆண்டுக்குப் பிறகும் கூட, பாடசாலைக் கலைத்திட்டத்தில் எம் இனத்தவருடைய மண்வாசனை சம்பந்தமான விடயங்கள் காட்டப்பட்டிருப்பது மிகக் குறைவு. இதன்மூலம் எமது சமூகம் கல்வித் துறையில் மறைமுகமாகவும் நேரடியாகவும் வீழ்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளதை உணர முடிகிறது. எனவே எதிர்காலத்தில் இது தொடர்பான நடவடிக்கைகளில் நாம் விழிப்பாக இருந்து எமது இனத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுவது இன்று கட்டாயமாகவுள்ளது.

இரா. அஜித்சிங்
நு/ எபட்ஸ்போட் தமிழ் வித்தியாலயம்
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை நனைத்து மகிழ்வுறும்
மழை மாய்ந்தே போனதுவே!
ஊரே வரட்சியால் காய்ந்து
ஊனமாய்ப் போனதுவே!

புல் மேயும் பசுக்களும் கன்றுகளும்
புண்பட்டுப் போனதுவோ!
தேடித் தேடிப் பார்த்தும்
தேடல் என்பதுவே களைந்து விட்டதுவோ!

பட்சிகளின் இனிய இசை
பண்புடனே அவை கீச்சிட
ஒற்றுமையாய் பறக்கும் அவை
ஒன்றைக்கூட காணவில்லையே!

காற்றுக்குத் தலையசைக்கும் மரங்கள்
காப்பாற்றும் என்றும் அவை எம்மை
கண்மணிக்குள் விழவில்லை
காப்பானையே காணவில்லையே!

மலர்களிலே அமுதம் பருகும் சிட்டுக்குருவி
மறக்கமுடியவில்லை அதன் நீண்ட மூக்கு
செல்பேசி கோபுரங்களின் அலைகளினால்
செத்தே போனதுவே கூட்டத்துடனே!

பச்சைப் பசேலென விளங்கிய புற்றரைகள்
பசுமையை இழந்து நிற்கின்றனவே!
பசுமை இருந்த இடங்களிலெல்லாம்
பகட்டாய்க் கட்டிடங்கள் தெரிகிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சியும் நட்பும்

நாற் திசையிலிருந்தும் வந்து நட்பு
எனும் பெயரில் ஒன்றிணைந்தோம் அன்று
பல மலர்களிலிருந்து தேனைத் தேடி
நுகர்ந்த தேனீக்களைப் போல,
அறிவு எனும் தேனைத் தேடி சுவைத்து
சேமித்துள்ளோம் இன்று

கல்லெறிந்து கலைக்கப்பட்ட தேனீக்களாக
கலையப் போகின்றோம் இன்று
ஊற்று நீர் ஆற்றிலும்,
மழைத்துளி மண்ணிலும், சங்கமிக்கும்
ஆனால் நாம் இனி எங்கு சங்கமிப்பதோ?

அன்னையின் மடியிலிருந்து தொப்புள்
கொடி அறுத்த போதும்
பள்ளியின் படியிலிருந்து குருவின் காலடியிலிருந்து
பிரிந்தபோதும் கலங்காத கண்கள்
இன்று கண்ணீர்க் கடலில் மிதப்பது ஏனோ
எமது பயிற்சிக் காலமதில் ஏற்பட்ட

இந்தப் பிரிவின் சோகத்தை அதன் ஏக்கத்தை
வார்த்தைகளாக ஏடுகளில் எழுதி
முற்றுப்புள்ளி வைக்க முடியாது
அது ஓர் அழியாத ஓவியமாய்
மறைக்க முடியாத காவியமாய்
எம் உயிருள்ள வரை எம்முடனே இருக்கும்
ஓர் உன்னத உறவு

மு.அன்னக்கிளி
ம/மா/நு/கிளன் ஈகள்ஸ் த.வி.
லிந்துல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✐கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். காரணம் அந்தக் கோயிலிலுள்ள கலசம் எம்மை இடி, மின்னல் என்பவற்றிலிருந்து பாதுகாக்கும்.

✐மூக்கில் மூக்குத்தி அணிதல் காரணம், எமது கண்ணுக்கான ஒரு பயிற்சிச் செயற்பாடாகும். அதாவது மூக்குத்தியை நாம் மூக்கில் அணிந்ததும், எமது கண்ணால் எமது மூக்கைப் பார்ப்பது கண்ணுக்குச் சிறந்த பயிற்சி.

✐விதவைப் பெண்கள் விபூதி, சந்தனம் தரித்தல் காரணம், விபூதி, சந்தனம் என்பன உடலுக்குக் குளிர்ச்சியானது. சாந்தத் தன்மையாக இருப்பதோடு, காம உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தும்.

✐எம்மவர் ஆலய வளாகங்களிலும், வீட்டிலும் பாதணிகள் அணியத் தடை விதித்துள்ளனர் காரணம் மண், மணல், சாணம் என்பன எமது பாதங்களில் பட்டு தோல் மூலமாகக், குருதியால் சுத்திகரிக்கப்படுகின்றது. இவ்வாறு நடைபெறும் போது நீரிழிவு, மாரடைப்பு போன்ற நோய்களிலிருந்து விடுபடலாம்.

✐ பெண்கள் தலையின் நடுவில் வாகு எடுத்துப் பின்னி சடை போடல் காரணம், சூரிய ஒளி தலைக்குப்படுவது குறைவு. ஏனென்றால் தலைமயிர் தடுத்து விடும். அதனால் வாகு எடுக்கப்படும் பகுதியினூடாகச் சூரிய ஒளியிலுள்ள விட்டமின்கள் தலைக்கு அகத்துறிஞ்சப்படும்.

✐திருவிழாக்காலங்களில் மஞ்சள் நீராடல் காரணம், பலதரப்பட்டவர்கள் பல பிரதேசங்களிலிருந்தும் வருகை தருவார்கள். அதனால் பல்வேறு நோய்க்கிருமிகள் எம்மைத் தொற்று நோய்க்குள்ளாக்கும். அதனால் மஞ்சள் நீராடும் போது நோய்க்கிருமிகள் அழிக்கப்படும்.

வே.அசோதா
நு/டயகம மேற்கு இல.02 த.வி
டயகம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுகள்
ரகசியங்களைத் தேடுகிறது.
நிலாவில் .............!
மேகங்கள் ........
மகத்துவத்தைத் தேடுகிறது.
நீல வானில் ........!
காற்றிடம் பூக்கள்
தேடுகிறது
அர்ப்பணிப்புக்களை.....!
இது அத்தனையும்
ஒன்று சேர்ந்து வரும் போது
புரியும்...........!

ஈன்றெடுக்காத
தாய்.......
இன்ப துன்பத்தில் நண்பன்
இல்லையென்பான்
இறைவன்
கரும்பலகை வெண்கட்டியோடு
சந்தங்கள்........
நான்கு சுவர் சமூகத்துக்குள்ளே
சத்தத்தால் வெட்டப்பட்டது.....!
வைத்தியனாய்

பொறியியலாளனாய்
இன்னும் பல வகையில
தூவப்பட்டது.........
இப்போது மரமாய்........
மண்ணில் விதைகளாய்.....!
இந்த மண்ணில்
எத்தனை புதினங்கள்....!
அதற்கு அத்திவாரம்
யார்.......?

நிலாவின் மறுபக்கத்தில்
மர்மமாய்......!
உயர்ந்த பதவிகள்
அவர் பாதத்துக்கு.....!
பணிவிடைகளை
பதவிகளுக்கு
பகிர்ந்து கொடுக்க
வேண்டும்......!
அனுபவங்கள் ஏங்கி நிற்கிறது.
அவர் பார்வைக்காய்...!
அவர் அர்ப்பணிப்பைத் தேடி ......!
நிலா....
நீல மேகம்
இரவுகள் பூங்காற்றோடு
ஒன்று சேர்ந்து
வருகிறது.......!
ஒரு புதிய பூமியில்
மழைகளாய்.....!
அவர் (யார்?) தெரியுமா....?
அவர் தான்........!

திருமதி.தி கிருஷாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நவீன உலகின் எந்த ஒரு நிறுவனத்தின் உயர்விற்கும் வளங்களின் உச்சப்பயன்பாடு அவசியமாகும். அவ்வளங்கள் ஒழுங்காக முகாமை செய்யாவிடின் நிறுவனம் எதிர்பார்க்கும் பயனை அல்லது இலக்கை அடைய முடியாது. அந்த வகையில் மனித, பௌதிக வளங்களின் உபயோகத்திற்கு திட்டங்கள் அமைக்கப்படுவது போன்று மிக அரிதான வளமான நேரத்தின் பயன்பாட்டிற்கு திட்டங்கள் வகுக்கப்படுவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது என்றே கூறலாம்.

மேலும் நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறப்பட்ட சில வாசகங்கள் "ஒருவர் தனது நேரத்தை எவ்வாறு செலவிடுகின்றார் என்பதைக் கூறுவாராகில் அவர் எப்படிப்பட்டவர் என்பதைத் தீர்மானித்து விடலாம்"

"கடந்த காலம் திரும்பி வரமாட்டாது, எதிர்காலம் எமது கையில் இல்லை, இப்பொழுது கிடைத்திருப்பது நிகழ்காலம் ஒன்றே"

"நேரம் நமது மிகவும் மதிப்புள்ள பண்டமாகும்"

"இறந்த காலம் என்பது உடைந்த பானை. எதிர் காலம் என்பது மதில் மேல் பூனை. நிகழ்காலம் என்பது கையில் உள்ள வீணை"

என இவ்வாசகங்கள் நேரத்தின் மேன்மையினை எடுத்தியம்புவதைக் காணக் கூடியதாக உள்ளது.

பொதுவாக எமது பாடசாலைகளை நோக்கும் போது, நேர வளமானது ஒரு வளமாக நோக்கப்படுவதும், அதன் உச்சப் பயன்பாட்டிற்காகத் திட்டமிடப்படுவதும் மிக அரிதாகவே இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளதென்றே கூறலாம். உதாரணமாக எமது பாடசாலைகளில் எவ்வளவோ நேரம் வீணாக்கப்படுவதை அவதானித்து வருகின்றோம். நேரத்தை விரயமாக்கும் காரணிகள் அதிபருக்கு அதிபர், ஆசிரியருக்கு ஆசிரியர் வித்தியாசப்படலாம். பின்வருவனவற்றைப் பொதுவான நேரத்தை விரயப்படுத்தும் காரணிகளாகக் குறிப்பிடலாம்.

- ஒழுங்குபடுத்தப்படாத கூட்டம்
- திட்டமற்ற வேலை ஒப்படைப்பு
- தீர்மானமின்மையும் தாமதமும்
- நெருக்கடிகள் பிரச்சினைகள் என்பவற்றை முகாமை செய்தல்
- தெளிவற்ற பொறுப்பு ஒப்படைப்பு
- சுய கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பன இன்மை
- சுய அபிவிருத்தியின்மை
- பணியாற்றலில் முன்னுரிமை வழங்காமை
- திட்டமற்ற தொடர்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறாக வீண்விரயமாகும் நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குப் புதிய நுட்ப முறைகளைக் கையாண்டு நேரத்தைத் திட்டமிடுவதன் மூலம் சிறந்த பயனைப் பெறலாம். நேரத்தைப் பயன்படுத்த சில அறிவுறுத்தல்கள்:

✐மனம் நன்கு செயற்படக்கூடிய வேலைகளைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். பொதுவாகக் காலை வேளை தெளிவாகவும் சுறுசுறுப்பாகவுமிருக்குமாகையால் அந்த நேரத்தை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நன்கு பயன்படுத்த முனைய வேண்டும்.

✐வகுப்பறை, பாடசாலை சூழல் என்பன சிறந்ததாக இருத்தல், நல்ல நேரப் பயன்பாட்டிற்கு உதவுவன. போதிய வெளிச்சம் காற்றோட்டம் சத்தம் சந்தடியின்மை என்பன நேரத்தின் உச்சப் பயன்பாட்டிற்கு உதவுவனவாகும்.

✐அதிபர்கள், ஆசிரியர்கள் தொலைபேசி அழைப்புக்களைத் திட்டமிட்டு மேற்கொள்வதன் மூலம் நேர முகாமைத்துவத்தைப் பேணலாம்.

✐பிரதான விடயங்களைப் பின் போடாது செய்தல் நேர முகாமைத்துவத்தின் பிரதான அம்சமாகும். ஒரு செயலைப் பின் போடும் அளவுக்கு அச்செயலைச் செய்வதற்கான கால அளவும் கூடிக் கொண்டே போகும். ஆகையால் அதிபர்கள் பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபட்டிருக்கும் முகாமைத்துவக் குழுவினர், ஆசிரியர்கள் ஆகியோர் பிரதான விடயங்களைப் பிற்போடாது செய்து முடிக்க முயல வேண்டும்.

✐ஒரு வேலையை ஒரு நேரத்திற்குச் செய்வதும் அவசியம். ஒன்றிற்கு மேற்பட்ட வேலைகளை ஒரே நேரத்தில் செய்ய முனைந்தால் மன ஒருமைப்பாடு பல பக்கமாகச் சிதைவடையும்.

எனவே நேரம் மிகவும் பெறுமதி வாய்ந்தது. அதற்குப் பெறுமதி கூறுவது கடினம். நேரத்தைச் சேமிக்கவோ, நிறுத்தி வைக்கவோ முடியாது. அதனை இழந்தால் இழந்ததாகவே இருக்கும். ஆகையால் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் தங்கள் கற்றல் கற்பித்தல் செயன்முறைகள், இணைப்பாட விதான செயற்பாடுகள், அதிபர், ஆசிரியர், மாணவர் கலந்துரையாடல் என்பவற்றில் நேரத்தை மிகவும் பயனுள்ள வகையில் திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் மூலம் உச்சப்பயனைப் பெறலாம்.

செ.சுமதி
CP/HK/விக்னேஸ்வரா த.ம.வி.
ஹேவாஹெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்தைப் பாட வந்த மக்கள் கவி, எம் மாகவி, அறம்பாட வந்த மாக்கவியே விடுதலை பாட வந்த வித்துவானே அவன். என்று கூறுவதில் ஐயமில்லை. பல்துறை கவிகளும் தம்மைப் பின்பற்றித் தமிழ் வளர்க்க ஒரு பரம்பரையைத் தோற்றுவித்த, புது நெறி காட்டிய புலவன் பாரதி. அவரின் கவி நயங்களைக் கூர்ந்து, நுணுகி ஆராயும் போது அதில் அவரின் பார்வைகள் வெளியாவதைக் காணலாம்.

அறிவியல், சுதந்திரம், வரலாற்று இலக்கியம், பெண் விடுதலை, உறவுகள், சமூகப் பார்வை, இயற்கை அம்சம், பக்தி, காதல், துன்பம், பகை, மொழி, தேசபக்தி, வாழ்த்து, தன் வரலாறு, கற்பனை, பொதுமைப் பாடல்கள் இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம் இவரின் படைப்புக்களை. அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றையே இவை குறித்து நிற்கின்றது. எனினும் சுதந்திரத் தாகமே இவரது பாடல்களில் இலையோடி நிற்கின்றது.

பாரதியின் பக்திப் பாடல்களை முதலில் நோக்கினால், விநாயகர் நான்மணிமாலை, தோத்திரப்பாடல்கள், வேதாந்தப்பாடல்கள் போன்றவற்றில் பக்தி இலையோடி இருப்பது தெரியவருகின்றது. அதாவது எடுத்துக்காட்டாக,

இறைவி இறையவனிரண்டு மொன்றாகித்
தாயாய் தந்தையாய் சக்தியும் சிவனுமாய்..........

பக்தியினாலே தெய்வ பக்தியினாலே உண்டாவது என்ன? என்பதை பாரதி மிகத் தெளிவாகக் கூறியிருப்பது தெளிவாகின்றது.

"கல்வி வளரும் - பல காரியங் கையுறும்,
வீரிய மோங்கிடும், அல்லலொழியும் - நல்ல
ஆண்மை யுண்டாகும், அறிவு தெளிந்திடும்......."

"இன்னும் இன்னும் பல பக்தி" என்னும் தோத்திரப் பாடலில் பக்தி குறித்து பாரதி மிக அழகாகக் கூறுகின்றார். சரஸ்வதி, லக்ஷ்மி, திருமகள், காளி, முருகன், கிருஸ்ணர் போன்ற கடவுளரை அழகான செந்தமிழில் இயம்பியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அடுத்து பாரதியின் பார்வையில் தேசபக்தி என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். அதாவது பாரதி நாட்டின் சுதந்திரத் தாகம் உணர்ச்சி வெள்ளமாய், காட்டுத்தீயாய், சுதந்திரக் கனலாய், அனலாய், புனலாய் வீறு கொண்டெழச்செய்யும் படி உணர்ச்சிப் பெருக்குடன் கவி வடித்துள்ளமையானது தனது தேச பக்தியையே அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. உதாரணங்களாகப் பின்வரும் அடிகளை நோக்கலாம்.

எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே - அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
மடிந்தது மிந்நாடே......

பாரத தேசமென்று பெயர் சொல்லுவார் - மிடிப்
பயங்கொல்லு வார்துயர்ப் பகை வெல்லுவார்...

'எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாடு, வந்தே மாதரம், எங்கள் நாடு, ஜயபாரதம், பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி, தமிழ் நாடு தேசிய இயக்கப்பாடல்கள், சுதந்திரப் பாடல்கள் இன்னும் இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். அவரின் நாட்டுப்பற்றை, தேசபக்தியை முழுமை அறிந்தோர் முற்றிலும் அறிவார். பாரதியின் தாய் 'பாரதம்' என்று கூறுவது மிகையாகாது.

பாரதியார் கவிதைகளிலே தன் வரலாறுக்கென ஒரு பகுதியையே ஒதுக்கியுள்ளார். இவற்றில் சுய வாழ்வு மட்டுமல்லாது பொதுவாக மானுடம் தொடர்பாகப் பல கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். அதாவது சுயசரிதையிலே பிள்ளைக்காதல், ஆங்கிலப் பயிற்சி, மணம், தந்தை வறுமை யெய்திடல், பொருட் பெருமை என்பவற்றைக் கூறியுள்ளார்.

பாரதி - அறுபத்தாறு என்பதில் மரணத்தை வெல்லும்.

"சிலுவையிலே அடியுண்டு யேசு செத்தான்
தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்.
பலர்புகழு மிராமனுமே யாற்றில் வீழ்ந்தான்
பார்மீது நான்சாகா திருப்பேன், காண்பீர்"

நான் சாகாதிருப்பேன் என்று பாரதி பாடியதில் மெய்யுள்ளதைக் காண்பீர். அதாவது கவிதை வடிவில் வாழ்ந்து கொண்டே இருப்பார் அந்த மகான். பாரதி அறுபத்தாறு' இல் மற்றும் சினத்தின் கேடு, பொறுமையின் பெருமை, கடவுள் எங்கே இருக்கிறார்? உபதேசம் என்பவற்றையும் பாடி எழுதியுள்ளார்.

பெண் விடுதலை தொடர்பாக பாரதியார் தமது கவிதைகளில் கூறியுள்ளமையை தனியாக ஆராய்ந்து நோக்கலாம். அத்துடன் அவர் பெண் அடிமையை விரும்பாதவர் என்பது தெளிவாகின்றது.

'மாட்டை யடித்து வசக்கித்தொழுவினிலே
மாட்டும் வழக்கத்தை கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி.....'

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞான செருக்கு மிருந்தால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்........'

..........நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்.........

போன்ற பல கவி வரிகளுடாகப் பாரதியார் பெண் விடுதலை தொடர்பாக மிக அழகான மொழிநடையில் சமூகத்தில் மக்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கவி வடித்துள்ளமை குறிப்பிட்டுக் கூறத்தக்க ஒன்றாகும். மேலும் சமூகம் தொடர்பாகப் பெண் விடுதலை மட்டுமல்லாது, பெண்ணியம், அறக்கருத்து, சுதந்திரம், சாதி, சாத்திர சடங்கு இன்னும் பல இன்னோரன்ன கருத்துக்களையும் எடுத்தியம்பியுள்ளார்.

அது மட்டுமா கற்பனையும் கதையும் இவர் பாடல்களிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவற்றிலிருந்து அவை மிகைப்பட்டு இருப்பதைப் பார்க்கலாம்.

இன்னும் கூறப்போனால் இயற்கை தொடர்பாகப் பல கற்பனைகள் உண்மைகளைக் கூறி மக்கள் மனங்களைக் கவர்ந்துள்ளார். காக்கை சிறகினிலே, காட்டு வழி, காற்று, கடல், கடற்கரை, நிலவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி பலவாறு இயற்கையைப் பாடியுள்ளமை உண்மையே. இவ்வாறான பல விடயங்களைப் பாடிய பாரதி காதலைப் பற்றியும் பாட மறக்கவில்லை.

.........காதலி னாலறி வெய்தும் - இங்கு
காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்....
காதலெனுந் தீவினிலே - ராதே, ராதே ....

போன்ற பாடல்களிலே காதல் பற்றி பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. குயில்பாட்டு கவிதையில்,

காதல், காதல், காதல்
காதல், போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்...........எனக் குயில் பாடுவது போல கவி வடித்துள்ளார்.

ஆத்திச்சூடி என்றாலே ஔவை நினைவுதான் வருகிறது. இந்தப் 'புதிய ஆத்திச்சூடி' என்கிற போது பாரதி தான் மனக்கண்ணில் தோன்றுவான். பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி மிக முக்கியமான பகுதியாகும். இதில் பல மானிட ஒழுக்கங்களையும் கூறியுள்ளார். வேண்டுகோள் விடுப்பது போன்று சொல்லாட்சித் திறனை வெளிகாட்டியுள்ளார்.

அச்சந்தவிர் - ஆண்மை தவறேல்..
நெற்றி சுருங்கிடேல் - நேர்படப் பேசு...
புதியன விரும்பு - பூமியிழந்திடேல்..

என்ற பல விடயங்களை முன்வைத்து வடித்துள்ளார்.

இவ்வாறு பாரதியின் பார்வையை ஆராயும் போது அவரின் பார்வையில் படாதவை எண்ணப்பட்டு விடும் என்பதோடு, எண்ணத்தாலும் எழுத்தாலும் மக்களை (வாசகர்களை) சிந்திக்க வைப்பதோடு மட்டுமல்லாமல், ஏழை எளியவர்களும், படிப்பறிவில்லா பாமரர்களும் கூட வாயில் முனுமுனுத்துக் கொண்டிருக்கும் பாரதியின் பாடல்கள் சமூகத்தோடு இணைந்து வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பது கண்கூடு.

A.ரஞ்சனி
N/போர்ட்மோர் த.வி.
அக்கரப்பத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு

மாதா, பிதா, குரு தெய்வம் என்பதில் குருவிற்கு அடுத்ததாகவே தெய்வம் உள்ளது. குருவிற்கு இடத்தை விட்டுச்சென்று அடுத்ததாகவே இறைவன் அமர்ந்துள்ளார் எனலாம். உயிர்களோடு உறவாடும் தொழிலையே ஆசிரியர் செய்கிறார். அந்த வகையில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைச் சிறந்த முறையில் ஒரு மாணவனிடம் விருத்தி செய்யக்கூடிய பொறுப்பு ஆசிரியர்களையே சாரும்.

பல்வேறுபட்ட சூழல்களிலிலிருந்து வரும் பிள்ளைகள் பல விதமான மனப்பாங்குடன் வருவர். இவர்கள் அனைவருக்கம் ஒரே விதமான கற்பித்தலை நிகழ்த்த முடியாது. பாடசாலை என்பது ஒர் வைத்தியசாலை என வர்ணிக்கின்றனர். அங்கு எல்லோருக்கும் ஒரே வகையான மருந்தினை வழங்க முடியாது. அவரவர் நோய்க்கு ஏற்பவே மருந்துகளை வழங்க முடியும். அவ்வாறே பாடசாலைகளில் பலவிதமான சூழல்களிலிருந்து வரும் பிள்ளைகளுக்கு ஒரே விதமான கற்றல் கற்பித்தல் செயன்முறையை வழங்கமுடியாது.

ஆரம்பப் பிரிவில் கல்வி கற்பிக்கும் சில ஆசிரியர்கள் தரம் 3 இலிருந்து கல்வி கற்கும் சில மீத்திறன் கூடிய மாணவர்களை மனதில் கொண்டு புலமைப்பரிசில் பரீட்சையைக் குறிக்கோளாக வைத்து செயற்படுகின்றனர். முழுக்கவனமும் இவர்கள் மீதே செலுத்தப்படுகின்றது. ஏனைய மாணவர்களின் நிலைமை என்ன? என்பது பற்றி ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு கவனத்திற் கொள்ளாதிருக்கும் மாணவர்கள் ஏனைய உயர் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல எழுத வாசிக்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே இதற்கான தீர்வை ஆசிரியர்கள் மேற்கொள்வது மிகச் சிறந்ததாகும்.

மொழியிலேயே எல்லாப்பாடங்களும் நடைபெறுகின்றன. பொறுப்பான ஆசிரியர்கள் பேசுதல், பந்தி வாசித்தல், வாய்மொழி வினாக் கேட்டல் போன்றவற்றைச் செய்தல் வேண்டும். அத்தோடு பயிற்சிக் கொப்பிகள் திருத்தத்தின் போது எழுத்துப் பிழைகளைத் திருத்த வேண்டும். இது மொழி ஆசிரியரின் கடமை என மாற்றாந்தாய் மனப்போக்குடன் செயற்படக்கூடாது.

சிறு சிறு விளையாட்டுக்களின் மூலமும் இவர்களின் மொழியாற்றலை வளர்க்கலாம். மாணவர்களை வரிசையாக நிற்க வைத்து பின்னால் உள்ள மாணவரின் முதுகில் ஒரு எழுத்தை எழுதி விடல், சிறு கூற்றினைக் கூறி அதனை முன்னால் உள்ளவருக்குக் கூற எவ்வாறு அக்கூற்று கடத்தப்பட்டது என்பதை அறியலாம்.

எனவே மொழியை வளர்ப்பது என்பது மொழி ஆசிரியரது கடமை மட்டுமல்ல, எல்லா ஆசிரியர்களதும் கடமையுமாகும்.

A.விஜயலட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் கல்வி

**"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்**
**சொற்தெரிதல் வல்லர் அகத்து"**

குற்றங்கள் இல்லாமல் சொல்பவற்றைப் புரிந்து கொள்ள வல்லர்களின் அவையிடத்தே கற்றறிந்தவரின் கல்வியானது விளக்கம் பெற்றுத் தோன்றும் எனத் திருவள்ளுவர் கல்வி பற்றி கூறியுள்ளார். கல்வியின் முக்கியத்துவம் இன்று நேற்றல்ல, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் உணர்த்தப்பட்டுள்ளது. இன்றைய நாட்டின் நெருக்கடியான நிலைக்கு கல்வி ஒரு காரணம் எனக் கூறப்படுகின்றது.
முறையற்ற கல்வி இவ்வாறான பிற்போக்கு விளைவுகளை எற்படுத்தியிருக்க, அதனை விட்டும் கல்வியில் புதிய சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில்
**"அனைவருக்கும் கல்வி"** எனும் பொருளில் கல்வியானது முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

**"அனைவருக்கும் கல்வி"** என்ற சிந்தனையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனமே மனித சமூகத்தின் அடிப்படைத் தேவையாக சர்வதேச அலகில் உறுதி செய்தது. அதன் மூலம் 2000ம் ஆண்டில் சகலருக்கும் கல்வி வழங்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டபோதிலும், இவையனைத்தையும் செயற்படுத்த முடியுமா? அல்லது கருத்து மாற்றம் பெறக்கூடியவையா? எனும் ஐயம் கல்வியாளர்களிடம் ஏற்படாமலில்லை. இப்படி இருக்க, அனைவருக்கும் கல்வி எனும் காலக்கெடு முடிவடைய 2000ஆம் ஆண்டில் **"செனகல்"** இல் கூறப்பட்ட மாநாட்டில் இக்கால எல்லை 2015 என நீடிக்கப்பட்டது.

**"அனைவருக்கும் கல்வி"** எனும் தொனிப்பொருளில் கல்வியை வழங்குவதின் ஊடாக நாட்டின் வறுமை, இயலாமை, சமூகக் குற்றங்கள் போன்றவற்றைத் தவிர்த்து அபிவிருத்தியை ஏற்படுத்த எதிர்பார்ப்பதுடன், கல்வியைப் பெற்றுக்கொள்வது அனைவரதும் உரிமை என்பதும் தெளிவாகின்றது.

கல்விக்கு அடித்தளமாக அமைவது ஆரம்பக் கல்வியாகும். ஆரம்பக் கல்வியானது கட்டாயமானதாகவும், இலவசமாகவும் வழங்கப்பட வேண்டும் என்பதில் கருணை இருந்த போதிலும், அது முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் உள்ளது. இந்நிலைமை வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமல்ல அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் இவ்வாறான போக்கினைக் காணலாம்.

வளர்முக நாடுகளில் வயது வந்த ஒருவரில் நால்வரில் ஒருவருக்கு வாசிக்கவோ, படிக்கவோ தெரியாது என "யுனெஸ்கோ" அமைப்பு ஆய்வில் கூறப்படுகின்றது. "யுனிசெப்" நிறுவனத்தின் 1997ஆம் ஆண்டின் உலகச் சிறுவர் நிலை பற்றிய அறிக்கையில் சுமார் ஒரு மில்லியன் மக்கள் ஒரு புத்தகத்தை வாசிக்கவோ, தம் பெயரை ஒப்பமிடவோ தெரியாதவர்களாக 21ம் நூற்றாண்டை எதிர் கொள்வர். இவர்கள் எழுத்தறிவுள்ளவர்களைப் பார்க்கவும் வறியவர்களாகவும், நோயாளர்களாகவும் உள்ளனர்.

அனைவருக்கும் கல்வி எனும் எண்ணக்கருவில் "கட்டாயக்கல்வி" வழங்கப்படல் மற்றும் "பெண்களுக்கான கல்வி" என்பன பற்றியும் கவனம் செலத்தப்படுகின்றது. இந்த வகையில் கற்பதற்கு வயதோ, நேரமோ இல்லை. வாழ் நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்கலாம்.. அதில் தடையில்லை.

"மன்னனுக்கு தன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு; ஆனால் கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"

எனவே கல்வி எனும் கண்ணாடியைக் கவனமாக, முறையாகக் கையாளும் போது. தான் அதில் திறமைமிக்க விழுமியப் பண்புடைய நற்பிரஜையைப் பெற முடியும் என்பது நிச்சயமாகும்.

செ.மு.பதுருன்னிஸா
நு/ஸாஹிரா வித்தியாலயம்
ஹாவாஎலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால ஓட்டத்தில் சுழன்று
கால் மணி நேரம் நிற்க முடியாமல் - தொழிலுக்கு
காற்றாய்ப் பறக்கின்றோம் - ஏன்
நமது கவலையைக் குறைக்க, கற்றலைப் பெருக்க

வேலை! வேலை! வாத்தி வேலை
ஏனிந்த இயந்திர வாழ்வென்று தெரியவில்லை
இயந்திர வேலையால் வந்த
வேர்வைத் துளிகள்தான் - இன்று
கடலாய் மாறி
கடல் கோளாய் பொங்கியெழுந்தது

இந்த அவசர உலகத்தில்தான்
அண்ணன் என்ன? தம்பி என்ன?
ஆண்டவர்தான் என்ன?
அரை வயிறுக்கு அரிசியிருந்தால்
அதுவே போதும்

ஆலையிலே அடிபட்ட கரும்பு போல
இயந்திர வேலையிலே அடிபட்டு
மெலிந்து போகின்றோம் - தெம்புக்கு
நெஸ்ட்டமோல்ட் குடிக்கக் கூட
நேரமில்லை

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு - இது கடந்தகாலம்

நவீன பாரதி இருந்திருந்தால்
காலை எழுந்தவுடன் வேலையின் நினைப்பு
அதனை நினைத்தால் ஏற்படும் சலிப்பு
மாலையில் ஏற்படும் அசதி - இதனால்
எங்கே எனக்கு நிம்மதி என்றிருப்பார்

நமீதாவும், நயன்தாராவும்
கனவுக் கன்னிகளாம் யார் சொன்னார்கள்?
இன்றைய இவர்களின் இதயத்தில்
இதுகளா கனவுக் கன்னிகள்
இல்லவே இல்லை
காரியாலயத்திலுள்ள வேலைகள்தான்
கனவிலும் கண்ணி வெடிகள்

மனிதா!
ஒன்றை உணர்ந்து கொள்
வாழ்க்கையை வாழத்தான் வேலை
வேலைக்காக வாழ்க்கையல்ல

முத்தையா ராமதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தில் அதிபருடைய போதனாத் தலைமைத்துவத்தின் செல்வாக்கு

## (நுவரெலிய கல்வி வலய தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வின் சுருக்கம்)

இவ்வாய்வு தரம் 5 மாணவர்களின் கணிதபாட அடைவு மட்டத்தில் அதிபருடைய போதனாத் தலைமைத்துவத்தின் செல்வாக்கைப் புலப்படுத்துகின்றது. இது நுவரெலியா கல்வி வலயத்தில் உள்ள 06 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாய்வில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களும் 06 ஆசிரியர்களும் 120 மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றபோதும், அதிபருடைய போதனாத் தலைமைத்துவம், கற்றலுக்கான அழுத்தம், ஆசிரியர் இணைவு எனும் பாடசாலைக் காரணிகளும் குடும்ப ஆதரவு எனும் பின்னணிக் காரணியும் மாத்திரமே இவ்வாய்வில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தெரிவு செய்யப்பட்ட மாறிகள் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதற்காக மாணவர்களுக்கான வினாக்கொத்து, அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான நேர்காணல் அட்டவணை, அவதானிப்புப் படிவம் எனும் நான்கு தரவு சேகரிப்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டதுடன், அவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் தொகை ரீதியான தரவுகளாக மாற்றி யமைக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு ஏற்ற வகையில் அட்டவணைப்படுத்தப்பட்டன.

பின்னர் அவை "SPSS" எனும் கணினி மென் பொருளை அடிப்படையாகக்கொண்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இங்கு தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பிரதானமாக "Regression" எனும் தரவுப் பகுப்பாய்வு நுட்பமுறை பயன்படுத்தப்பட்டது.

ஆய்வு முடிவுகள்:-

1. அதிபரின் போதனாத் தலைமைத்துவத்திற்கும் தரம் - 5 மாணவர்களின் கணிதபாட அடைவு மட்டத்திற்கும் இடையில் பொருண்மையான தொடர்பு காணப்படுகின்றது.

2. நுவரெலியா கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் - 5 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாக ஆசிரியர் இணைவு காணப்படுகின்றது.

3. கற்றலுக்கான அழுத்தமும் தரம் - 5 மாணவர்களின் கணிதபாட அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான காரணிகளில் ஒன்றாகும்.

4. குடும்ப ஆதரவிற்கும், தரம் - 5 மாணவர்களின் கணிதபாட அடைவு மட்டத்திற்கும் இடையில் பொருண்மையான தொடர்பு காணப்படுகின்றது.

5. தெரிவு செய்யப்பட்ட சாராமாறிகளான ஆசிரியர் இணைவு, கற்றலுக்கான அழுத்தம், அதிபரின் போதனாத் தலைமைத்துவம், குடும்ப ஆதரவு என்பவற்றுக்கும் மாணவர்களின் கணித பாடஅடைவு மட்டத்திற்கும் இடையில் பொருண்மையான தொடர்பு காணப்படுகின்றது. இது தரம் 5 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தில் பாடசாலைக் காரணிகளும், பாடசாலைக்குப் புறம்பான காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

6. நுவரெலியா கல்வி வலய தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் தரம் -5 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தில் கற்றலுக்கான அழுத்தம், ஆசிரியர்இணைவு, அதிபரின் போதனாத் தலைமைத்துவம், குடும்ப ஆதரவு என்பன இறங்கு வரிசையின் அடிப்படையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஆய்வாளன்
ஆ. கிருஸ்ணகுமார்
விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றியின் இரகசியம்**

- மனிதர்கள் மோசமானவர்கள்; அபாயம் நீங்கியவுடன் அவர்கள் ஆண்டவனை உடனடியாக மறந்து விடுவார்கள்.
- நன்மை செய்யுங்கள் யாருக்கென்று மட்டும் கேட்காதீர்கள்.
- வேலை மனிதனைக் கொல்வது இல்லை; கவலைதான் கொல்லும்.
- அடுத்தவன் சுகமாக வாழ்கிறான் என்பதுதான் அனைவரின் துன்பத்திற்குக் காரணம்.
- வேடிக்கை என்பது மற்றவர்களுக்கு நடக்கும் போது அல்ல; நமக்கு நடக்கும் போது தான் வேடிக்கை.
- பொறாமையை நீ துணைக்கு அழைத்தால், அது உன்னை அழித்து விடும்.
- உதவி செய்யுங்கள்; எதையும் எதிர்பார்க்காதீர்கள்
- தான் கற்றவற்றைப் பிறருக்குக் கொடுப்பதே ஞானதர்மம்.
- நாம் பிறரைப்பற்றி எப்போதும் எடை போட்டுக்கொண்டிருந்தால், நம் வாழ் நாள் முழுவதும் வீணே கழிந்து விடும்.
- தாகத்தின் போதே தண்ணீர் கொடுக்க வேண்டும்; இதே போன்று ஒருவருக்கு உதவி தேவைப்படும் போதே உதவ வேண்டும்.
- தன் கண்ணை மூடிப்பார்த்தால் தான் யாரென்று புரியும்.
- வாழ்க்கையில் வரும் துன்பங்களை எதிர் கொள்பவனே சிறந்த ஞானி.
- ஒருவரைப் புகழ்ந்து பேசுவதை விட அவரின் குறைகளை நிவர்த்தி செய்வதே உண்மையான அறிகுறியாகும்.
- நல்ல உள்ளம் என்பது பிச்சைக்காரனிடமும் இருக்கும்.
- அன்பு என்ற சொல்லில் 'அ' என்பது உயிர்; 'ன்'என்பது மெய்; எனவே அன்பு காட்டுபவர்கள் மீது உயிர்க்கும் மேலான உண்மையான அன்பைக் காட்டுதல் வேண்டும்.

ஆர்.புனிதசெல்வி

இல - 1187



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஹைக்கூ" கவிதைகள்

<u>தாய்</u>
எந்த சொந்தங்களோடும்
ஒப்பிட முடியாத
ஓர் உன்னத உயிர்.

<u>தந்தை</u>
எல்லோரையும் விட உயர்ந்தவனாய்
தன் மகன் வர வேண்டுமென
எதிர் பார்க்கும் ஜீவன்.

குழந்தைகள்
அழுதாலும் அழகாகும்
சிரித்தாலும் அழகாகும்
நாளைய உலகின் தலைவர்கள்.

மனிதன்
ஆறறிவு என்ற பெயரில்
ஐந்தறிவோடு நடமாடும்
உயிரினம்.

ஆசிரியர்
எல்லோரையும் கரைசேர்த்து
எங்கேயும் செல்லாமல்
கடலிலே இருக்கும் ஓடம்.

இசை
எந்த மனதையும் இயல்பாக
ஈர்க்கும்
ஓர் அற்புத ஊடகம்.

கல்வி
மனிதன் மனிதனாக வாழ்வதற்கு
அன்றாடம் தெரிந்து கொள்ளும்
புதிய விடயங்கள்.

நிலா
எல்லாக் கவிஞர்களையும்(மனதை)
ஏதோ ஒரு வகையில் தொட்ட
இயற்கையின் கொடை

அனுபவம்
பின்னாளில் செய்யப் போகும்
விலையற்ற காரியங்களின்
இன்றைய சேமிப்பு.

வாழ்க்கை
எப்போது முடியுமென்றே தெரியாமல்
எங்கெங்கோ சென்று
கொண்டிருக்கும் பயணம்.

அ. வனிதகுமார்
நு/தங்கக்கெலை இல - 1 த.வி,
லிந்துல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் சிந்தனை இதுதான். உங்கள் மனதை நீங்கள் வருத்தாமல் வைத்திருக்க வேண்டும்; மனதை அமைதியாக வைத்திருக்கும் கலை தான் நிலையான கலை.

-ரான் ஹலன்ட்-

மற்றவர்களின் குறைகள் உங்களுக்கு நல்ல ஆசிரியர்கள்.

-எஸ் தோனியா-

உங்கள் பயங்களை உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள்; உங்கள் தைரியத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

-ஆர்.எல்.ஸ்டீவன்சன்-

ஒவ்வொரு நாளும் 120 நிமிடங்களை மட்டுமாவது பொறுப்புடனும், விடா முயற்சியுடனும் ஒருவன் நன்கு பயன்படுத்தினால் கூட அவன் விரும்பிய அளவு உயர முடியும்.

-ஹோரஸ் மான்-

தினமும் காலையில் எழுந்திருந்ததும் நான் மனப்பாடமாகச் சொல்லும் மூன்று வாக்கியங்கள் இவை.

1. நான் நலமாக இருக்கின்றேன்.
2. நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன்.
3. நான் இன்றைக்கு எத்தனைப் பிரச்சினை வந்தாலும் சந்திக்க துடிப்புடனும், ஆவலுடனும் இருக்கின்றேன்.

-நெப்போலியன் ஹில்-

நீங்கள் செய்யக்கூடாத செயலை நாளை வரை தினமும் தள்ளிப் போடுங்கள்.

-மாரிஸ் மேண்ட்ல்-

உங்களது தனிப்பட்ட ஆற்றல் என்ன?

அதை மட்டும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; அந்தத் திறமையை ஊக்கம் நிறைந்த உங்களது உழைப்பினால் இன்னும் மெருகேற்றி வளர்த்துக் கொள்ளுங்கள்.

-என்.வி.பில்-

நான் எதையும் நேசிக்கின்றேன்; அதனால் தான் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடிகிறது.

-டால்ஸ்டாய்-

அதிகம் பேசுபவர்களால், பேசிக்கொண்டிருப்பவர்களால் நிறைய சம்பாதிக்க முடியாது. பாருங்கள்! பறவைகளில் கிளி மட்டும் தான் பேசுகிறது; ஆனால் அது அதிக உயரம் பறப்பதில்லையே!

-ரைட் பிரதர்ஸ்-

மின்மினிப் பூச்சி, பறக்கும் போது தான் ஒளி வீசுகிறது; நம் மனமும் அப்படித்தான்; நாம் சும்மா உட்கார்ந்திருக்கும் போது இருண்டு போய் விடுகிறது; எனவே முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் சிறு செயலையாவது செய்து கொண்டிருப்போம்.

-பெய்லி-

R.சுலக்ஷனா
நு/ஹோல்புறுக் த.ம.வி
அக்கரைப்பத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தகுதி

தேயிலைக்குள் மாசி
தோண்ட வந்தவரெல்லாம்
தேசத்தின் தூண்கனென்பது
தெரிந்து கொண்டால்......?

வேண்டாம் அந்த
வேதனையைத் தரவேண்டாம்
வேண்டுவதெல்லாம் அவர்கள்
வந்தவர்களாகவே இருந்திடட்டும்.

கல்வி தனைக் காட்டுங்கள்
கற்க மட்டும் விடாதீர்கள்
கண்ணொன்று கிடைத்து விட்டால் - எங்கள்
கைங்கரியங்கள் கண்டறிவாறே.

எம் மூதாதையர் சேர்த்தது
ஏழு தலைமுறைக்கு மேல்
எப்படியும் என் கணக்கு
நான்கு தலைமுறைதான்,

சொத்துக்காக மட்டும் கூறவில்லை
அடக்கி ஏமாற்றி பழகிய -மனது
மாற்றங்களை விரும்பவில்லை
அது தேவையுமில்லை!

இளைஞர்கள் துடிப்பானவர்கள்
இவை அனைத்தும் தெரியு முன்
இங்கொன்றும் அங்கொன்றும்
திறந்திடுங்கள் பானக் கடைகளை

அயலில் உள்ள நம் நாட்டிலும்
தொலைக்காட்சியும் , பணமும், பானமும்
ஆள்பவர்களை நியமிக்கின்றதாம்.
இங்கு நிகழ்த்திடுவோமா அதனையே!

கஜானாவில் உள்ள பணம்
கட்டாயத்திலும் இருக்கட்டும்
கடன் வாங்கிக் கொண்டிருந்தாலே
கேள்வி கேட்பார் அடித்திட்டவர்.

புற்றீசல் கட்சிகள்
புதிதாக முளைக்கின்றதாம்
புரட்சிப் பாதைகள் ஏதும்
வெட்டி விடப் போகின்றனர்

பூவாக மணம் பரப்ப முன்
மாலையாக எனக்கணிவித்து விடுங்கள்
மறுப்பு உண்டானால்
மலர் மாலையாக மாற்றிடுங்கள்

தொழில் கொடுத்திடுங்கள்
தொடர்ந்து நாம் ஆள்வதற்கு
தெரியாத தொழில் என்றவனுக்கே
தெரிந்து செய் என்று வலியுறுத்துங்கள்.

பழகிக் கொண்டு அவர்கள்
பணியைச் செய்ய முன்
பாழாகி விடலாம் ஒரு
பைத்தியக்கார சமுதாயத்தையே

சேகுவேராக்களும் சேதுக்களும்
பேசிக்கொண்டே இருந்திடுவர்
பேரம் பேச வேண்டியதில்லை
பயம் கொள்ளத் தேவையில்லை

பல்கலைக்கழகம் தேடும் நெஞ்சங்கள்
பல்கிப் பெருகிப் போகுதையா
படித்துக் கொடுக்கும் ஆசான்களைப்
பணம் கொடுத்தாவது தடுத்திடுங்கள்

ஏனய்யா விழிக்கின்றீர்?
எனக்கும் அரசியல் ஆசை
என்னுள் கொஞ்சம் கண்டீர்
எடுத்துச் சொல் நீ எனக்கு
ஆன தகுதி எனக்குண்டல்லவோ?
வெளிப்படையாகப் பேசிவிட்டேன்
வெள்ளந்தி நானல்ல
இது எம் சூழல்
புதிதாக ஒன்றும் கூறவில்லை

செல்வி.ஷரணியா மைக்கல்
நு/முல்லோயா த.வி
ஹேவாஹெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் மாணவர்களின் ஒன்றிணைந்த ஆளுமையைக் கட்டியெழுப்ப வேண்டும்

நாட்டின் கல்வி அபிவிருத்தியின் உச்சப்பயன் இரு நபர்கள் கலந்து பேசுவதில் தான் தங்கியுள்ளது. (Dialogue with Two Persons) இதில் பாடசாலையைப் பொறுத்தமட்டில் ஆசிரியரும் மாணவரும் ஆகும்.

புதுக் கல்விச் சீர்திருத்தத்தின் போது, வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களை அடைவதற்காகப் புதிய கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் முன்மொழியப்பட்டது. தேசிய நீரோட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டு முன்வைக்கப்படும் புதிய விடயங்கள், செயற்பாடுகள், வழிகாட்டல்கள் என்பன புதிய மாணவர்களின் உளத்தகுதிக்கும், உடல் தகுதிக்கும், உலகின் கல்விச் சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியவகையில் மாற்றியமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நாளுக்கு நாள் உலக மாற்றங்களுக்கு பாடசாலைப் பிள்ளைகள் மிகவும் இலகுவாகப் பழக்கப்படுகின்றார்கள். உலகச் சந்தையின் தேவையினைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் முன்வைக்கப்படும் கல்வி மீளாய்வுகள் பாடசாலை ஆசிரியர்களாலும், அதனைச் செவ்வனே நேர்த்தியாக அமுல்படுத்தி மேற்பார்வை செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டிய பாடசாலை முகாமைத்துவ ஆளணியினர்களாளும் எதிர்க்கப்படுகின்றது. இது பழையதை வைத்து காலத்தை ஓட்டுவது போன்ற பண்புகள் ஆகும்.

மாணவர்களில் பல்பரிமாண ஆளுமை விருத்தியினைக் கட்டியெழுப்பும் ஓர் அமைப்பு பாடசாலையாகும். ஒன்றிணைந்த ஆளுமை கொண்ட மாணவர் குழுவே எதிர்கால சமூகத்தை வழி நடாத்துகின்றார்கள்.

புதுக்கல்விச் சீர்திருத்தத்தின் ஊடாகத் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதும், மாணவர்களை மையமாகக் கொண்டதுமான தொழிற்பாடுகள் மூலமான கற்றல்- கற்பித்தல் புது திருப்பமாகும். ஆளிடைத் தொடர்பு (Inter Personal Ability) ஒன்றிணைந்த ஆளுமையினைப் பயிற்சியின் ஊடாக வாழ்நாள் முழுவதும் செயற்படக் கூடிய பழக்கங்களின் மூலமாக (Practice) வளர்க்க வேண்டும். வகுப்பறையிலும், பாடசாலையிலும் இது தொடர்பான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். இலவசமாக வழங்கப்படும் புத்தகங்களை மட்டும் நம்பி தொழில் செய்யக்கூடாது. தேடித்தேடி கற்பிப்பதன் மூலம் ஒன்றிணைந்த ஆளுமையினை வளர்ப்பதில் கூடுதலான பங்களிப்பைச் செய்ய முடியும்.

மாணவர்கள் செயற்பாட்டை விரும்புவார்கள். குழுவாகக் கதைப்பது, உருக்களைச் செய்வது, ஆக்கத்திறன் செயல்களில் ஈடுபடுவது, நடனமாடுவது, நடிப்பது போன்ற முனைப்பான செயல்களில் ஈடுபடுவதையே விரும்புகின்றனர். பொதுவாகவே விரிவுரையை விரும்புவதில்லை. அடிப்படையில் தயார் செய்யப்படும் செயற்பாடுகள் பொதுவாக மாணவர்களின் அன்றைய கனவை (Day dream) நனவாக்குகின்றது. கூடுதலான முக்கியமான செயற்பாடுகளை மாணவர்கள் விரும்புகின்றனர்.

கூடுதலான ஆசிரியர்கள் ஒன்று அல்லது இரண்டு கற்பித்தல் முறைகளை மட்டும் பயன்படுத்தி மாணவர்களைக் கட்டுப்படுத்துகின்றனர். இது தவறானது. வித்தியாசமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் போது மாணவர்களின் வருகை அதிகரிக்கும். பொருத்தமான மிக நீண்ட சவால்கள், எதிர்காலப் பிரச்சனைக்குத் தீர்வாக அமையும். மாணவர்கள் தங்களது தேவைகளுக்கும் ஒவ்வொரு சவால்களுக்கும் தீர்வைக் காணக்கூடியதாக இருக்கும். ஒவ்வொரு மாற்றமும் ஆசிரியரின் வகிபாகமும் (Role) ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்த ஆளுமை நிறையுடைய மாணவர்களை முத்திரையிட்டு பாடசாலையிலிருந்து சமூகத்திற்கு அறுவடையாக அனுப்புவது பாடசாலையின் வகிபாகமாகும். (School Role).

பல்வேறு துறைகளின் மூலம் தங்களை அபிவிருத்தி செய்துகொள்வதற்கான கருவிகள் (Tools) ஆசிரியர்கள் வைத்திருக்கும் கற்பித்தல் கருவிகளின் தொகுதிகளின் மூலம் பெறுகின்றனர். (Teacher Tool kit) மாணவர்கள் பல்வேறு வழிகளில் கற்றுக்கொள்கின்றனர். வித்தியாசமான செயற்பாடுகள் அவர்களின் தகுதிக்கேற்ப நிறைவு செய்யப்படுகின்றது. வித்தியாசமான கற்பித்தல் முறைகள் மூலம் உதவிகளையும் சந்தோசமான அனுபவங்களையும் பெறுகின்றனர்.

ஆசிரியர்கள் புதிய புதிய கற்பித்தல் முறைகளை உருவாக்க முடியும். பல்வேறு முறைகளைப் பயன்படுத்த முடியும். இதனூடாக ஆசிரியர்கள் கற்றுக்கொள்ள முடியும். மாணவர்களின் ஒன்றிணைந்த ஆளுமையினை வளர்க்க முடியும்.

## ஒன்றிணைந்த ஆளுமையை வளர்க்கும் வழிகள் (Integrated - personality)

### சிந்தித்தல் திறன் (Thinking Skills)

ஆக்கச் சிந்தனையை வளர்ப்போம்
தீர்க்கமான சிந்தனையை வளர்ப்போம்

- பகுப்பாய்வு
- தர்க்கம்
- உய்த்தறிதர்க்கம்
- தொகுத்தறிதர்க்கம்

→ சிந்தனையை வளர்ப்போம்

சுயமாகத் தீர்மானமெடுத்தல் திறனை வளர்ப்போம்

பிரச்சினை தீர்த்தல் திறனை வளர்ப்போம்

முரண்பாட்டு முகாமைத்துவத் திறனை வளர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகத்திறன்கள் (Social Skills)

### ஆளிடைத்திறன்களை வளர்ப்போம்

குழுவில் செயற்படும் ஆற்றலை வளர்ப்போம்
பரிவுடன் செவிமடுக்கும் ஆற்றலை வளர்ப்போம்
கரிசனையும் பகிர்ந்துகொள்ளும் ஆற்றலையும் வளர்ப்போம்
தொடர்பாடல் திறன்களை வளர்ப்போம்.

- செவிமடுத்தல்
- பேசுதல்
- வாசித்தல்
- எழுதுதல்

தலைவரினதும் பின்பற்றுபவரினதும்
வகிபாகங்களின் ஆற்றலை வளர்ப்போம்.

சுயதிறன்களின் ஆக்கத்திறன்களை வளர்ப்போம்
(Personal Skills)

- நல்ல மனவெழுச்சிகளை வளர்ப்போம்
- நெருக்கிடை முகாமைத்துவத்தை வளர்ப்போம்
- தான் தொடங்கும் ஆற்றலை வளர்ப்போம்
- மாற்றத்தினை நாடல் திறனை வளர்ப்போம்
- முயற்சியாண்மைத் திறனை வளர்ப்போம்
- பொறுப்பு கூறும் திறனை வளர்ப்போம்
- வகை சொல்லல் திறனை வளர்ப்போம்
- அர்ப்பணிப்புத் திறனை வளர்ப்போம்
- சுயகட்டுப்பாடுகளை வளர்ப்போம்
- தேர்ச்சியினை வளர்ப்போம் / நாமும் தேர்ச்சி பெறுவோம்
- ஒன்றிணைந்த ஆளுமையுடைய மாணவ சமூகத்தை பாடசாலையில்
- உருவாக்குவோம்.

P.ஸ்ரீதரன்
மேலதிக கல்விப் பணிப்பாளர்
வலய கல்விப் பணிமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியல் கல்வியால் ஆரம்பக் கல்வியில் நாம் பெறும் முக்கியத்துவம்

ஆரம்பக்கல்வி முறைசார் கல்வியின் அத்திவாரம் ஆகும். நாட்டின் திடகாத்திரமான அபிவிருத்திக்குத் தேவையான நற்பிரசைகளை உருவாக்கும் பொறுப்பு வாய்ந்த நற்பணி இங்கு தான் ஆரம்பிக்கின்றது. இன்று உலக நாடுகள் அனைத்தும் தத்தம் நாட்டிலுள்ள சகல பிள்ளைகளும் குறைந்தபட்சம் ஆரம்பக்கல்வியையாவது பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை வழங்குவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றன.

ஒரு பிள்ளை பிறந்து அது பாடசாலை செல்லும் வரையில் சூழலில் இருந்து ஏதோ ஒரு அறிவைப் பெற்று வளர்கிறது. அப்பிள்ளைக்கு யாரும் கற்றுக் கொடுப்பதில்லை. அதேவேளை பாடசாலையை அடைந்ததும் அப்பிள்ளை கற்க ஆரம்பிக்கின்றது. கல்வி அறிவு வளர்ச்சியின் அடித்தள அமைப்பான ஆரம்பக் கல்வியானது, ஒரு பிள்ளையின் அறிவு வளர்ச்சியில் பாரிய பங்காற்றுகிறது. அவ்வறிவினைப் பிள்ளை கற்றுக்கொள்வதற்கு அழகியல் கல்வி முதன்மையாய் அமைகிறது.

கற்றல் என்பது நடத்தை மாற்றமாகும். இந் நடத்தை மாற்றத்தை இலகுவாக மாணவரில் ஏற்படுத்த அழகியல் கல்வியின் பங்கு இன்றியமையாதது. ஆரம்பக்கல்வி என்பது தரம் 01 தொடக்கம் தரம் 05வரையான வகுப்பு நிலையை உள்ளடக்கியதாகும். அழகியல் என்பது எதுவெல்லாம் இரசனையுடன் உள்வாங்கப்படுகிறதோ அவை அனைத்தையும் கருதுகிறது.

இங்கு நடனம், சங்கீதம், சித்திரம், நாடகம் என்பன அழகியல் துறைக்குள் உள்ளடக்கப்படுகின்றன. இவை ஆரம்பக்கல்வியின் சுற்றாடல்சார் செயற்பாடுகள் என்ற எண்ணக் கருவில் உள்வாங்கப்படுகிறது. அத்தோடு ஆரம்ப நிலை வகுப்பறைகளை இலகுவான முறையில் ஒழுங்கு முறையாகக் கொண்டு நடாத்துவதற்கு அழகியல் கல்வி முதன்மைப் பங்காற்றுகிறது. ஆரம்பக் கல்வியை இலகுவாக உள்வாங்கிக் கொள்வதற்கு அழகியல் கல்வி வழியாக அமைகிறது.

அதை நோக்குவோமாயின், ஆரம்பக் கல்வியின் தரம் 01, தரம்02, தரம் 05 ஆகிய வகுப்புகளில் சுற்றாடல் சார் செயற்பாட்டில் 16 தலைப்புகளும் தரம் 03, தரம் 04ல் 15 தலைப்புகளும் காணப்படுகின்றன. அந்தத் தலைப்புகள் ஊடாக அழகியல் செயற்பாடுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மரம், செடி, கொடிகள் என்ற தலைப்பை முன்வைத்து செயற்பாட்டை அவதானிப்பின் தாவரங்களின் பயன் பற்றி பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் போது பாடல் மூலமாக, அபிநயம் மூலமாகக் கற்பித்தலானது, கலந்துரையாடல் மூலம் கற்பிப்பதைப் பார்க்கிலும் இலகுவான செயலாக அமையும்.

அதே வேளை தமிழ்மொழி, கணிதம், ஆங்கிலம், இரண்டாம் மொழி போன்ற அனைத்து ஆரம்பக்கல்வி வகுப்புப் பாடங்களையும் மாணவர் அழகியலுடன் இணைந்து கற்கும் போது, இலகுவாகக் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் ஆரம்பத்தில் சூழலில் இருந்து அறிவைப் பெற்று வளர்ந்த பிள்ளை பாடசாலையில் கல்வியைக் கற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறது. அச் செயற்பாட்டிற்கு அழகியல் கல்வி சிறந்த உறுதுணையாக அமைகிறது என்றால் அது மிகையாகாது.

இங்கு ஒன்றிணைக்கப்பட்ட கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து அழகியல் கல்வியின் மூலமான கற்றல் கற்பித்தல் செயன்முறை துரிதமடைந்து வருகிறது. அத்தோடு அடிப்படைத் தேர்ச்சிகளான தொடர்பாடல், சுற்றாடல் சார்தேர்ச்சி (உயிரியல், பௌதிக, சமூக) சமயமும் ஒழுகலாறும், ஓய்வு நேரம் விளையாட்டு, கற்றலுக்கான கற்றல், வேலை உலகிற்குப் பிள்ளைகளைத் தயார் செய்தல், ஆளுமை விருத்தி போன்ற தேர்ச்சிகளை இலகுவாக மாணவரிடத்தில் ஏற்படுத்துவதற்கு அழகியல் கல்வி சிறந்த ஊடகமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சூழலை அறிந்து உணர்தல், ஆராய்தல் என்பவற்றில் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் பங்காற்றுகின்றன. இவை சூழலில் கேட்கும் ஒலிகளுக்கும், இசைகளுக்கும் இசைவாக்கம் பெறுகின்றன. தாய் தாலாட்டுப் பாட், குழந்தை அவ் இசைக்கு வசப்பட்டு தூங்குகிறது. அதே போல் இசையுடன் கூடிய கற்றலில் அதாவது பாடலுடன் கூடிய கற்றலில் மாணவரை வகுப்பறை செயற்பாட்டில் வசப்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை ஒழுங்கமைத்து நடத்தலானது ஆரம்ப நிலை வகுப்பறை நடவடிக்கைகளில் வெற்றியளிப்பதாய் அமைகிறது.

பியாஜேயின் எண்ணக்கரு வளர்ச்சிப் படிநிலைகளின்படி புலன் இயக்கப் பருவத்திற்கு அடுத்தபடியான தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் 2 வயதிற்கும் 7 வயதிற்கும் இடைப்பட்ட பருவம் என நாம் அறிந்துள்ளோம். இப் பருவத்தினர் இயற்கையாகவே பாவனை செய்தல், சுயமாக நடித்தல், பாடுதல், ஆடுதல் போன்ற செயல்களுக்குக் கட்டுப்பட்டவர்களாவர். அதேபோல் அடுத்துள்ள தூல சிந்தனைப்பருவம் 7 வயதிற்கும் 12 வயதிற்கும் இடைப்பட்ட பருவமாகும். இப் பருவத்தில் மாணவர்களின் இரசித்தல், நயக்கும் ஆற்றல் ஆகியவற்றை விரிவடையச் செய்யலாம். இந்த வகையில் நாம் நோக்கும் போது பாடசாலையில் ஆரம்ப நிலையில் கல்வி கற்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு அழகியல் மூலமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்வைத்தல் மூலம் வெற்றி கரமான கற்றல் அடைவுகளைப் பெறக்கூடியதாய் இருக்கும்.

எனவே இவ்வாறாக நாம் வகுப்பறைச் செயற்பாட்டில் அழகியல் கல்வி மூலமாகக் கற்பித்தலில் ஈடுபட முடிவது இன்றியமையாததாகும். மேலும் பாடசாலைகளில் கலை விழாக்கள், போட்டிகள், பரீட்சைகள் போன்றவற்றை நடாத்துவதால் எமது மாணவர்கள் இத்துறையில் தாம் பெற்ற அனுபவங்களின் அடைவுகவைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதோடு, உளச் சமநிலையும் ஏற்பட்டு ஆளுமையுடையோராகத் திகழ வாய்ப்பேற்படும் எனலாம்.

ஆக்கம் - வேலுசாமி விஜயகுமார்
நு/சந்திரிகாமம் த.வி
டயகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்காணுவோம் வழிப்படுவோம்

மனிதனாகப் பிறக்கிற ஒவ்வொருவரும் உலகிலுள்ள எல்லா விடயங்களையும் கற்றுக்கொண்டு பிறப்பதில்லை. அவன் பிறப்பிலிருந்து படிப்படியாகவே ஒவ்வொரு விடயத்தையும் கற்றுக் கொள்கிறான். அந்த வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாகவும்,விரைவாகவும் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களாகச் சிலர் காணப்படுகின்றனர். அதேவேளை இலகுவில் கிரகித்துக் கொள்ள முடியாதவர்களையும், கிரகித்துக் கொள்வதில் இடர்ப்படுகின்ற மாணவர்களையும் விசேட தேவையுள்ள மாணவர்களென இனங்காணலாம். இவ் விசேட தேவையுடைய மாணவர்களைப் பொதுவாக எம்மால் இவ்வாறாக இனங்கண்டு கொள்ள முடியும்

1. அதிக திறமையுடைய மாணவர்கள் மீத்திறன் மாணவர்கள்
2. மெல்லக் கற்கும் மாணவர்கள்
3. உடல் ரீதியாகக் குறைபாடுள்ள மாணவர்கள்
4. உள ரீதியாகக் குறைபாடுள்ள மாணவர்கள்.
5. நெறிபிறழ்ந்த மாணவர்கள்
6. மந்தபோசனையுள்ள மாணவர்கள்.

இவ்வாறான மாணவர்களுக்கு விசேட தேவை ஏற்படுவதற்கான காரணங்கள் உடல், உளரீதியான குறைபாடுகள், போசனைக் குறைபாடுகள் பரம்பரை மற்றும் அவர்கள் வாழும் சூழல் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆகவே இவ்வாறான மாணவர்களைப் பாடசாலையில் ஆசிரியர்கள் சரியான முறையில் இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ற முறையில் கற்றல் கற்பித்தலை ஒழுங்குபடுத்துவதன் மூலமாக இவர்களைக் கல்வி சமூகத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.

எமது நாட்டில் சுமார் 43 இலட்சம் மாணவர்கள் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் 10 சத வீதமானோர் ஏதோ ஒரு வகையில் கற்றலில் இடர்ப்படுகின்ற மாணவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் உலகில் சுமார் 600 மில்லியன் மாணவர்கள் இவ்வாறு விசேட தேவையுள்ள மாணவர்களாகக் காணப்படுகின்றனர்.

விசேட தேவையுடைய மாணவர்களில் அதிக திறமையுள்ள அல்லது மீத்திறன் மாணவர்களை எடுத்து நோக்கினால், இவர்கள் வகுப்பறையில் இடம் பெறும் கற்றல் நடவடிக்கைகளை விரைவாகவும், இலகுவாகவும் கிரகித்துக் கொள்ளும் தன்மை உடையவர்கள். அதாவது இவர்களது வயது மட்டத்தில் காணப்பட வேண்டிய நுண்மதி ஈவு உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதாகும். மேலும் இவர்களின் கிரகித்தல் தன்மை, ஞாபக சக்தி, சிந்திக்கும் ஆற்றல் என்பன ஏனைய மாணவர்களை விடவும் அதிகமாகக் காணப்படும்.

அதே போல் மெல்லக் கற்கும் மாணவர்களை எடுத்து நோக்கினால், இவர்களில் கிரகித்தல் தன்மை, சிந்திக்கும் ஆற்றல், ஞாபக சக்தி என்பன மீத்திறன் மாணவர்களை விடவும் மந்தமான நிலையில் காணப்படும். அதாவது இவர்களின் நுண்மதி ஈவு இவர்களின் வயது மட்டத்திலும் பார்க்கக் குறைவாகக் காணப்படுவதாகும். இவர்கள் ஒரே தடவையில் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ள முடியாதவர்கள்.

உடல், உள ரீதியான குறைபாடுடைய மாணவர்களை நோக்கும்பொழுது, இவர்களில் பொதுவாக உடல் குறைபாடு மற்றும் பார்வைக் குறைபாடு, கேள்விக் குறைபாடு, பேச்சுக் குறைபாடு என்பன காணப்படுவதால், இவர்கள் எழுதுதல் மற்றும் வாசித்தல், செவிமடுத்தல் போன்றவற்றில் ஆர்வம் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

மற்றும் உளக்குறைப்பாடு எனும் போது உளப் பலவீனமும் அடிக்கடி மனவெழுச்சிகளால் பாதிப்படையக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். விசேட தேவையுடைய மாணவர்களில் நெறி பிறழ்வான மாணவர்களை நோக்கினால், இவர்களது நடத்தைகள் ஏனையோரைவிட மாறுபட்டதாகக் காணப்படும்.

மேலும் இவர்களிடம் அடிக்கடி கோபப்படுதல், முரட்டுத்தனம் இவ்வாறான தன்மைகளால் தம்மைத்தாமே வருத்திக்கொள்ளல் ஏனையோருக்கு இடையூறாக நடந்துகொள்ளல் என்பன காணப்படும். மந்தபோசனையுள்ள மாணவர்களை எடுத்து நோக்கினால், இவர்கள் எந்த நேரமும் சோர்வடைந்த நிலையிலேயே காணப்படுவர். இதனால் இவர்கள் எழுதுதல், வாசித்தல், கிரகித்தல் போன்றவற்றில் வெறுப்புத்தன்மையுடனேயே காணப்படுவர்.

இவ்வாறு விசேட தேவையுடையவர்களைப் பாடசாலையில் இனங்கண்டு அவர்களுக்குத் தேவையானவற்றை அறிந்து அவர்கள் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அவர்களுக்குத் தேவையான அன்பு, பாசம் போன்றவற்றை வழங்குவதின் ஊடாகவும், பரிசில்கள் என்பனவற்றை வழங்குவதின் ஊடாகவும் விளையாட்டுக்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதினூடாகவும் இவர்களைச் சிறந்த ஒரு கல்விச் சமூகத்திற்குக் கொண்டு செல்லமுடியும். ஆகவே உலகில் மகோன்னதமான தொழில் என்று கூறப்படும் ஆசிரியர் தொழிலைச் சேவை எனும் மனப்பான்மையுடனும், அர்ப்பணிப்புத் தன்மையுடனும் செய்வது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும்.

துணை நூல் :- கூர்மதி (2006-2008) ஆக்கம்

G.பிரபாகரன் ஆசிரியர்
நு/வ/மகா ஊவா த.வி
வலப்பனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய பிரம்மாக்கள்

எல்லோருக்கும் போலவே நமக்கும் விடிகிறது......... வேலைக்குச் செல்வதற்கான மணி ஓசையுடன் இவர்களின் இன்றைய நாள் தொடங்குகின்றது. காய்ந்து கரடாய்ப் போன கரங்கள் தேயிலைத் தளிர்களைப் பறிக்கின்றன.

இது போன்று நேற்றல்ல; பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை இங்கு அறிமுகப்படுத்திய காலந் தொட்டே தொடர்ந்து வருகின்றது. போதிய போக்குவரத்து வசதிகள், இயந்திர வசதிகள், இல்லாத காலத்திலிருந்தே சுவை மிகு தேயிலைப் பானத்தை மேல்வர்க்கத்தினருக்குப் பெற்றுக் கொடுக்க எம்மவர்கள் சக்கையாய்ப் பிழியப்பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது நவீன தொழிநுட்ப வசதிகள், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் எனத் தேயிலைத் தொழிற்றுறை மிக வேகமாக முன்னேறியுள்ளது. ஆனால்................

கறுப்பு வெள்ளைப் படங்கள் வர்ணப்படங்களாக மாறியது போல நமது மக்களின் வாழ்க்கையில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தவிரவும், குட்டிச்சுவருக்கு வர்ணம் பூசியது போல் சிதிலங்கள் இன்னமும் உள்ளேயே இருக்கின்றன.

கொழுந்து பறிப்பிலிருந்து தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லும் வரை சுத்தம் பேணப்படுகின்றது. அது தொழிலாளர்களின் சுத்தமல்ல.

இயந்திரங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றது.
ஆனால் எம்மவரின் தரம் ?

தேநீர், கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை எல்லோராலும் விருப்பமுடன் அருந்தும் ஓர் பானம். உலக நாடுகளில் இன்னமும் கூட Ceylon Tea என்ற பதத்திலேயே இலங்கை அறியப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

இந்தத் தேயிலையை உலக நாடுகளிலும் உள்ளூர்களிலும் விற்பனை செய்து கொள்வதற்காக விளம்பரத்திற்கெனப் பல இலட்சம் ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலும், ஆடம்பர விருந்துகளிலும் தேநீர் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. தரமான தேயிலையைத் தருகின்ற மலையக மக்களின் வாழ்க்கை நிலை அப்படியொன்றும் தரமாக இல்லை.

ஆனாலும், தேயிலையைத் தரமாகவும், உயர்ந்ததாகவும் உருவாக்கத் தினமும் பல்வேறு ஆராய்ச்சிகளும், பராமரிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய நிலைமைகளுக்கு யார் தான் காரணம்? அல்லது எது ? இயல்பாக இப்படியோர் கேள்வி எழும்.

இந்நிலைகள் மாற்றமடைய வேண்டுமாயின், நம்மமில் சிந்தனை மாற்றம் தேவை. சமுதாயம் சார் சிந்தனை வளர்ச்சி தேவை. தூர நோக்குடனான அரசியல் சிந்தனை தேவை. அப்படியாயின் நம் சமூகத்தில் கல்வி வளர்ச்சி தேவை.

கல்வி கற்றதோர் சமூகமாக நாம் மாற்றம் பெறுவோமாயின், ஏனைய சமூகத்தினரோடு போட்டி போடக் கூடிய வல்லமையைப் பெற்று விடுவோம். அரசியலில், அரச தொழில்களில், பொருளாதாரத்தில் புறக்கணிக்க முடியாத ஓர் சக்தியாக மாறிவிடுவோம். எனவேதான், ஆரம்பத்திலிருந்தே மலையக சமூகம் திட்டமிட்ட புறக்கணிப்புகளுக்கு உள்ளாகி வந்திருக்கின்றது.

கி.மு. 3ம் நூற்றாண்டில் மகிந்தரின் வருகையோடு இலங்கையில் பௌத்தம் வளர்ச்சியுறுகிறது. அதனைத் தொடர்ந்து விகாரைகள் அமைக்கப்படுகின்றன. அவ்விகாரைகள் பௌத்தத் துறவிகளிடம் கையளிக்கப்படுகின்றன. விகாரைகளில் மதக்கல்வியும் அதனை அடியொற்றிய சிற்பம், ஓவியம், செதுக்கல், தச்சு போன்ற தொழிற்றுறைக் கல்வியும் உயர்கல்வியாகச் சிங்களம், பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளும் மருத்துவம், வரலாறு, இலக்கணம், தர்க்கம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இதன் பயனாகப் பௌத்த கல்வி படிப்படியாக வளர்ச்சியுறஆரம்பிக்கிறது.

குறிப்பாகச் சொல்வதாயின் எழுத்து, வாசிப்பு போன்றவற்றுக்கு "குருகெதர" எனும் சிற்றூர் பள்ளிகளும், உயர் கல்விக்காகப் "பிரிவேனா"க்களும் இருந்தன. இக்கல்வி முறையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியரின் படையெடுப்பு வரை நீடித்தது. பௌத்தத்தின் வருகையோடுதான் இலங்கையில் கல்வி முறைமை உருவாக்கப்பட்டது என்று சொல்வதற்கில்லை. "குருகுலக்" கல்வி முறைமை இதற்கு முன்னதாகவே இருந்திருக்கிறது.

கி.பி. 1505 இல் போர்த்துக்கேயரின் வருகைக்குப் பின் இவர்கள் கைப்பற்றிய கரையோரப்பிரதேசங்களில் கல்வி முறைமையில் சிற்சில மாற்றங்களைக் கொண்டுவந்தனர்.

இவர்கள் தங்களது வியாபார நலன்களுக்காகவும், கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்காகவுமே கல்வியினைப் பயன்படுத்தினர். இவர்களின் கலைத்திட்டம் மதத்தை மையமாகக் கொண்டே அமைந்திருந்தது. மதம் மாறியவர்கள் இக்கலைத்திட்டத்தால் பயனடைந்தனர்.

கி.பி. 1658 க்குப் பிறகு ஒல்லாந்தரின் ஆட்சி இடம்பெற்றது. போர்த்துக்கேயரின் கல்வி முறைமைகளிலிருந்து பெரிதான மாற்றமெதனையும் ஒல்லாந்தர் செய்து விடவில்லை. இவர்களும் தங்கள் மதத்தினைப் பரப்புவதற்கே கல்வியைப் பயன்படுத்தினர். அதே நேரம் கல்வி வழங்குவது அரசாங்கத்திதன் கடமை எனக் கருதினர்.

கி.பி. 1796 இல் இருந்து இலங்கை சுதந்திர நாடாக மாறும் வரை ஆங்கிலேயர் தமது ஆட்சியை நிலை நிறுத்தினர். போர்த்துக்கேய, ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தினை விடவும் இலங்கையில் கல்வித் துறையில் இவர்களால் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடிந்தது. ஆரம்பக் கட்டத்தில் இயங்கிய பரீஸ், கொழும்பு அகடமி, அநாதைப் பாடசாலைகளில் கற்பித்தல் மொழி சுதேசிய மொழியாகவும், அதனுடன் ஆங்கிலமும் சகல மாணவர்களுக்கும் கற்பிக்கப்பட்டது. இதனால் இருமொழி தெரிந்தவர்கள் உருவாக்கப்பட்டனர். இது ஆங்கில ஆட்சியை நடாத்த உதவியது. கொழும்பு அக்கடமியில் உள்நாட்டவர் இலவசமாகக் கல்வி கற்றனர். வெளிநாட்டவர் கல்விக்காகக் கட்டணம் அறவிடும் பிரிவில் கல்வி கற்றனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தரை விட ஆங்கிலேயரின் கல்வி முறைமை சிறப்பானதாகவே காணப்பட்டது. கல்விச் சீர்திருத்தத்திற்காக ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. குறிப்பாக அபிவிருத்திக்காக 1939 ம் ஆண்டு 31ம் இலக்க கல்விச்சட்டப்படி மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள்:

✎ மத்திய நிர்வாகக்குழு- கல்வியின் பொது நிர்வாகம் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் முழுஉரிமை நிர்வாகக் குழுத்தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டது.

✎ தேசிய ஆலோசனைக்குழுவும் பிரதேச ஆலோசனைக்குழுவும்

✎ கல்வி, பன்முகப்படுத்தும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டது.

✎ பெற்றோரின் அனுமதியின்றி பிள்ளைகளுக்குச் சமயம் கற்பிக்க முடியாது.

✎ கல்விக்குப் பொருத்தமான சட்டமியற்றும் அதிகாரம் கல்வி நிர்வாகக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது.

✎ தோட்டப்பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பு தோட்ட நிர்வாகியிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

✎ பாடசாலைகளை நிறுவுதல், மூடுதல், கட்டாயக்கல்வி செயற்படுத்தும் திட்டம் கல்வி நிர்வாகக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டது.

இப்படியான அம்சங்களைக் கொண்டு காணப்பட்ட பிரித்தானியக் கல்வி முறையானது சிறப்பானதென்று கூறினாலும், தோட்டப்பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே ஆங்கிலேய ஆட்சியாளர்கள் நடந்து கொண்டுள்ளனர் என்பதைத் தோட்டப்பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பு தோட்ட நிர்வாகியிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது என்ற ஒரு விடயத்திலிருந்தே எமக்கு விளங்கக்கூடியதாக உள்ளது. இதை மிகைப்படுத்துவதற்கு எதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் தோட்டப் பிள்ளைகளால் தேயிலைச் செய்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது என்பதனால், பிள்ளை மடுவங்கள் (பிள்ளை பராமரிப்பு நிலையம்) ஆங்கியேத் தோட்ட நிர்வாகிகளால் அமைக்கப்பட்டது. இதுவே பின்னர் படிப்படியாகப் பள்ளிக்கூடங்களாக மாற்றமடைந்தன. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கல்வி வழங்கும் விடயத்திலும், மதப்பரப்புரை விடயத்திலும் மற்ற சமூகத்தினரிடம் காட்டிய கரிசனையை ஏன் நம் சமூகத்தினரிடம் காட்டவில்லை? அதற்கு அடிப்படையான காரணங்களில்லாமலில்லை. பொதுவாகவே அந்நிய ஆட்சியாளர்கள், தம்மதத்தைத் தழுவியோருக்கும், கற்றோருக்கும் ஓரளவு சம அந்தஸ்தை வழங்கினர். தேவாலயங்களில் ஒன்றாக இருந்தே ஆராதனைகளில் ஈடுபட்டனர்.

தமது நிர்வாகக் கட்டமைப்புகளில் தொழில் பெற்றுக்கொடுத்தனர். பொருளாதாரங்களைப் பெருக்கிக்கொள்ள சந்தர்ப்பங்களை வழங்கினர். ஆனால் இத்தகைய சலுகைகளைப் பெருந்தோட்டத் தமிழ் மக்களுக்கு வழங்க முடியுமா? வழங்கமுடியாமைக்கான காரணங்கள் என்ன? அவையாவன

1. பெருந்தோட்டங்களில் மதத்தைப் பரப்பினால் அவர்களுடன் சமபோக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்
2. தேவாலயங்களில் சமனாக ஆசனங் கொள்ள வேண்டும்.
3. கல்வி கற்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.
4. அரச துறைகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இதன் மூலமாக அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியளிக்க வேண்டும். இவையெல்லாம் சாத்தியமாகுமா? பல பிரித்தானிய கம்பனிகள் பெரும் முதலீட்டில் நடாத்திக் கொண்டிருக்கும் தோட்டங்கள் என்னவாவது? அதனால் அரசுக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரிய வருமானத்தின் நிலையென்ன? கம்பளிக்கு ஒரு சதம், கறுப்பு கம்பளிக்கு இரண்டு சதம் என்ற ஏமாற்றுத்தனத்தைக் கூட அறியாமல், சிறு கூலிக்கும், அரைவயிற்றுக் கஞ்சிக்கும் மாடாய் உழைக்கும் கூட்டத்தை இனி எங்கே போய்த் தேடுவது? ஏகாதிபத்தியத்தின் கல்வி மறுப்புக்கு இவைகளே காரணங்களாய் அமைந்திருந்தன. இக்கருத்துக்களுக்கு வலு சேர்க்கும் விதமாக பின்வரும் காரணங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

1. பெருந் தோட்டங்களில் உத்தியோகத்தர்களாகப் பணிபுரிந்தவர்களுள் பெரும்பாலானோர், மதம் மாறிய வட மாகாணத்தவர்.
2. அனேக காலமாக மலையகத் தமிழர்களுக்கு இப்பதவிகள் கிடைக்கவில்லை.
3. நம் விரலைக் கொண்டு நம் கண்ணையே குத்துவது போல் நம்மவர்களைக் கசக்கிப் பிழிய உருவேற்றி உருவாக்கியிருந்தவர்களே பெரிய கங்காணிகள்.
4. பெருந்தோட்ட முதலாளிகளின் ஆசீர்வாதத்துடன் நம்மவர்களை எழவிடாமல் நசுக்கிவதைத்திருப்பதில் நீண்ட காலம் பெரிய கங்காணிகள் வெற்றிபெற்றவர்களாகவே இருந்தார்கள்.

சுதந்திரத்துக்குப் பின்பும் நாம் பெரிதாகக் கல்வியில் எழுச்சி பெற்றவர்களாக இல்லை என்பதே என் கருத்து. ஏகாதிபத்தியம் வெள்ளைக்காரர்கள் ரூபத்திலில்லாமல் வேறு வடிவத்தில் எம்மை ஆட்டிப்படைக்கின்றன. ஒவ்வொரு வெற்றியும் பெரும் போராட்டத்தின் பின்பே கிடைத்திருக்கின்றன. அதுவும் முழுமையாகக் கிடைக்க வில்லை.

ஆசிரியர்களாகிய நாம் இனியும் வாளாவிருப்போமானால், மலையக சமூகம் மரணப் பொறிக்குள் சிக்கிவிடும். ஆசிரியர்கள் வெறுமனே ஆசாபாசத்திற்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கக் கூடாது. அவர்களிடம் மிகப் பெரிய சமுதாயப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய வல்லமை ஆசிரியர்களிடமே உள்ளது. தொடர்ந்தும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும் இருக்க முடியாது. இந் நிலைமைகளை மாற்றி மற்ற சமூகத்தினரோடு சமத்துவமாக வாழக்கூடிய சூழலை ஆசிரியர்களே உருவாக்க வேண்டும்.

"ஆசிரியன் என்பவன் வெறுமனே சிற்பி அல்ல அவன் சமுதாயத்தின் பிரம்மா"

எஸ்.இரவீந்திரன்
நு/மூன்பிளேன் த.வி.
நுவரெலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றிலிருந்து சில துளிகள்

இது ஒரு நாட்டின் வரலாறோ அல்லது ஒரு ஊரின் வரலாறோ அல்லது ஒரு மனிதனின் வரலாறோ அல்ல. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் கல்வி தோன்றிய வரலாறு பற்றியதாகும். படிப்பறிவு இப்பிரதேச மக்களுக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதையே சுருக்கமாக நான் இங்கு எடுத்துக்காட்டுகின்றேன்.

அன்று மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லும்போது, தங்களுடைய சிறு பிள்ளைகளை வீடுகளில் விட்டுச் செல்வதில் பெருமளவு பிரச்சினைகளைச் சந்திக்க நேர்ந்தது. இப் பிரச்சினையானது தோட்ட நிர்வாகத்திற்கும் பெரும் தலையிடியாகவே இருந்தது. இதனால் இப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தோட்ட நிர்வாகம் அவ்வவ் தோட்டங்களில் ஒரு சிறு அறையைப் பிள்ளை பராமரிப்புக்காக ஒதுக்கியது. அவ்வாறு ஆரம்ப காலத்தில் ஒதுக்கப்பட்ட அறைதான் இன்று கம்பஹா தமிழ் மகா வித்தியாலயமாக வளர்ச்சியடைந்திருக்கிறது.

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் ஊவா பரணகம எனும் தேர்தல் தொகுதிக்குரியது கம்பஹா தேயிலைத் தோட்டம். 1930ம் ஆண்டு இத் தோட்ட நிர்வாகம் உருவாக்கிய பராமரிப்பு நிலையம் அன்றைய கால வழக்கப்படி சற்று படிப்பறிவுள்ள கங்காணி ஒருவரால் நடாத்தப்பட்டு வந்தது. இவர் காலை
8.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை சிறுவர்களுக்குக் கல்வி புகட்டி வந்தார். மேலும் இவர் தோட்டத் தொழிலாளிகளை மேற்பார்வை செய்வதற்காக இந்தியாவிலிருந்து வந்ததாகப் பாடசாலை வரலாறு கூறுகின்றது.

அக்காலகட்டத்தில் பிள்ளைகளின் கல்விக்காகத் தேவையான உள்ளீடுகளைத் தோட்ட நிர்வாகமே வழங்கியது. இருந்தபோதும், அப்போது பிள்ளைகளுக்கான ஒழுக்கம் சமூகத் தொடர்பு, நடத்தை என்பன முறையாகக் கற்பிக்கப்படவில்லை. காலப்போக்கில் இக்கல்விமுறை பிள்ளைகளுக்கு வெறுப்பளிக்கக்கூடிய கல்விமுறையாக இருந்துவந்ததாக அறியக்கூடியதாயிருந்தது. தொடர்ந்து 18 வருடங்கள் இவ் வெறுப்பு நீடித்தது.

1948ம் ஆண்டு எமது இலங்கை நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஒவ்வொரு தோட்டத்திலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் அரசால் எடுக்கப்பட்டது. இம் முயற்சியால் 1948ம் ஆண்டின் இறுதியில் கம்பஹா தோட்டக் காரியாலயத்தின் அருகில் புதிய கட்டிடம் ஒன்று உருவானது. காரியாலயத்தில் சேவை புரிந்தவரான திரு.அப்பையா என்பவர் காலை நேரத்தில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்காக நியமிக்கப்பட்டார்.

மாலை நேரத்தில் இவர் காரியாலய வேலைகளை மேற்கொண்டார். இவ்வாறு சுமார் 25 வருடகாலமாகத் தோட்ட நிர்வாகத்தில் நியமிக்கப்பட்ட சேவையாளர்கள் பலர் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து 1973ம் ஆண்டு திரு. இராஜேஸ்வரன் என்பவரே முதன் முதலில் ஆசிரியராக அரசால் நியமனம் பெற்று வந்துள்ளார். இது பாடசாலை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். 1977இல் சகல பாடசாலைகளும் அரசின் கீழக் கொண்டுவரப்பட்டது.

இதில் இப்பாடசாலையும் உள்ளடங்கியது. அதுமட்டுமன்றி கம்பஹா கீழ்ப் பிரிவில் இயங்கி வந்த சிறு பாடசாலையும இதனுடன் இணைந்து ஒன்றாக செயற்படத் தொடங்கியது. 1980இல் திரு. இராஜேஸ்வரன் ஆசிரியருடன் இணைந்து இரு தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலையை நடாத்தி வந்தனர். அப்போது பாடசாலை மாணவர்தொகை 14 ஆக இருந்தது. 1983இல் மேலும் ஒரு கட்டிடம் நிர்மாணிக்க ஆரம்பமாகி இப்பணி 1984இல் நிறைவுபெற்றது.

1985-1986ம் காலப்பகுதியில் இப் பாடசாலைக்கு திருமதி.வீ.ஜீ.ரத்னராஜா என்பவர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்து நியமனம் பெற்று வந்தார். அன்று முதல் இப்பாடசாலையின் பொற்காலம் உதயமானது என்று கூறினால் அது மிகையாகாது. மாவட்ட மட்டங்களில் விளையாட்டுப் போட்டிகள் தமிழ் சாகித்திய விழாக்கள் போன்றவற்றில் மாணவர்கள் பங்குபற்றி பல பரிசுகளையும் கௌரவத்தையும் பாடசாலைக்கு ஈட்டிக்கொடுத்தனர். 1987ம் ஆண்டு முதல் திருமதி வீ.ஜீ.ரட்னராஜா அவர்கள் அதிபராக 7 வருடங்கள் கடமையேற்று வந்தார். இவர் தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடன் பல வருடங்கள் பாடசாலையை மிகத் திறமையாக நிர்வகித்து வந்தார்.

வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறும் ஓர் அம்சமாக 1987இல் தொண்டர் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த திருமதி எஸ்.யோகாம்பாள் என்பவர் இன்றும் இதே பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகவே கடமையாற்றி வருகின்றார். இவரது அயராத சேவையை மேலும் இப் பாடசாலையில் இவர் தொடர வேண்டும் என்றே எமது பாடசாலை நிர்வாகம் எதிர்பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3179 ஆசிரியர் நியமனமும், எதிர்நோக்கிய விமர்சனங்களும், எதிர்நோக்கவேண்டிய சவால்களும்.

கடந்த 2007-04-23 அன்று வழங்கப்பட்ட 3179 ஆசிரியர் நியமனம் 2007-05-03 அன்று அமுலுக்கு வந்தது. இதனடிப்படையில் இந் நியமனத்திற்கு முன் பல சவால்களையும் பல இழுத்தடிப்புக்களையும் தாண்டி போராட்டத்தின் விளைவாக பெற்றதே இவ் ஆசிரியர் நியமனம் என்பது கல்வி உலகறிந்த உண்மை. அதேவேளை இவ் ஆசிரியர் நியமனத்தின் பின்புலத்தில் பல நல்ல நோக்கங்களும் அரசியல் பின்புலமும் இருந்ததென்பதும் சொல்லி அறியவேண்டியதில்லை. இவ்வாறான பல சவால்களையும், பல போராட்டங்களையும் தாண்டிப் பெற்ற இவ் ஆசிரியர் நியமனம் தொடர்பாக இன்றும் பல எதிர்க்கருத்துக்கள் வெளிப்பட்டு வருவதும் நாம் அறிந்ததே. இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்திற்கும் விமர்சனத்திற்கும் உரியவர்களாக இந் நியமன ஆசிரியர்களைக் குறை கூறிக்கொண்டிருப்பது இன்றும்கூட தொடர்ந்து தொடர்கதையாகவே மாறியுள்ளது.

இந் நியமன ஆசிரியர்களாக உள்ள பலரும் நியமனத்திற்கு முன் நியமனத்திற்கு உரிய தகுதியுடன் வெவ்வேறு துறையில் வெவ்வேறு தொழில்களைப் புரிந்தவர்கள். இவர்களை அதே பழைய நிலையிலும், அதே தொழிலுடனும் சமூகம் வைத்துப் பார்க்கின்றது. ஆனால், அன்றைய சூழலில் வறுமை, பசி, பட்டினி, குடும்ப சுமை என்பன இவர்களை வாட்டி வதைத்ததை யாரும் அறியாதவர்களாகவே இருப்பது வேதனையளிப்பதாயுள்ளது.

அதைபோல பாடசாலைச் சூழல் இவர்களைப் பல கண்ணோட்டத்தில் நோக்கியதும் இன்றும் மாறா வடு. வகுப்பறை முகாமை தெரியாதவர்களாக இருக்கின்றார்கள் என்றும் எந்தப் பிரச்சினை என்றாலும் புதிய ஆசிரியர்கள் என்ற அடைமொழியோடும் விமர்சிக்கப்படுவதும் ஆசிரியர் சேவையில் நேரடியாகவும் ஆசிரியர் தர வகுப்பு 3இல் உள்வாங்கப்பட்டதும் எவ்வளவு பாரதூரமானது எனப் பல வகையிலும் விமர்சனங்கள் தொடர்ச்சியாகவே வெளிப்பட்டதும் அவற்றையெல்லாம் சவால்களாக எடுத்துக்கொண்டு இன்றும் கூட வெற்றிப் பயணத்தை வீரத்துடன் தொடர்கிறார்கள் என்பதற்கு இன்று பல பாடசாலைகள் சான்று பகர்கின்றன.

இவ்வாறான பல சவால்களுக்கு இந் நியமன ஆசிரியர்கள் முகங் கொடுத்தமைக்குப் பல காரணிகள் உண்டு. அவற்றில் கல்வி அமைச்சும் இவ் ஆசிரியர்களின் தேவையறிந்து செயலாற்றியதும் உண்மை. காரணம், சேவைமுன் பயிற்சியின்றியோ அல்லது ஆசிரியர் பயிற்சியின்றியோ ஓர் ஆசிரியன் வகுப்பறைக்குச் செல்லக்கூடாது என்ற கொள்கையிருந்தும் அவற்றை நடைமுறைப்படுத்தத் தவறியதும், நடைமுறைச் சாத்தியமற்றதாகக் காணப்பட்டதும் இதற்கொரு காரணமாகும். அதன்பின் வழங்கப்பட்ட சேவைக்காலப் பயிற்சியின் பின் இந்நிலைமை மாற்றப்பட்டதும் உண்மை. இருந்தும், இப்பயிற்சியானது, ஆசிரியர் பயிற்சி வழங்கும் வரை போதுமானதாக இருக்கவில்லை. இதற்குப் பரிகாரமாக புத்தூக்கக் கல்வித்திட்டத்தை அமுல்படுத்தியிருக்கலாம். இவையனைத்தும் காலம் கடந்துவிட்டபோதிலும் இன்று அமுலில் இருக்கும் வார இறுதி ஆசிரியர் பயிற்சி நெறி பாரிய ஆறுதலாகவும் அவசியமானதாகவும் அமைந்துள்ளது.

எவ்வாறாயினும் எதிர்கால அறுவடைக்காக ஆசிரியர் சமூகம் இன்று தெளிவுடன் செயலாற்றுகின்றது. இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது. இச் சேவை தொடர்ந்தும் சமூகத்திற்குச் செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே 3179 ஆசிரியர் நியமனம் தொடர்பான எந்த ஒரு விமர்சனத்தையும் எட்டிப்பார்க்கத் தேவையில்லை. அவற்றைச் சவால்களாகத் தட்டிப்பார்ப்போம். எமக்கென்று பல சவால்களை நேற்றைய சந்ததி வழங்கிவிட்டது. இன்று அவை நடைமுறையாகி இருக்கின்றன. நாளை அனுபவிக்கப்போகின்றோம். சிந்தனையுடன் செயலாற்றுவோம். நேற்று தூற்றியவர்கள் நாளை போற்றுவார்கள். இவை நிஜங்களாகும். நாமும் நல்ல சமூகத்தையும், வளமான எதிர்காலத்தையும் உருவாக்கிய சிற்பிகளாகவே உயிர் துறப்போம்.

உலகின் வாயைத் தைத்திடு - அல்லது
உந்தன் செவிகளை மூடிடு - உலகின்
வாயைத் தைப்பது கடினம் - உந்தன்
செவிகளை மூடுதல் சுலபம்.

(கவிப்பேரரசு வைரமுத்து)
தகவல்களுக்காக உசாவியது
கூர்மதி - 2006-2008

ஆசிரியர் - எஸ்.பிரதீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்பு

ஆசானே
என் - கன்னிக் கவிதையின்
கதாநாயகன் நீ

நான் - நல்லவன்
நகைப்புக்குட்படுத்தா வரை!
நான் அறிவாளி
என்னையும் - நீ ஏறெடுத்துப் பார்த்தால்!
நான் - மாணிக்கம்
பட்டை தீட்டினால்!
நான் - நிலவு
நீ சூரியனாகவிருந்தால்!
நான் ஓவியம்
நீ உணர்வோடு உய்ப்பித்தால்!

நானோ - கல்
நீயோ - சிற்பி
என்னில் வேண்டாத
கற்களை நீக்கினால்
நானோர் சிற்பம்!
இல்லையேல் - பயனில்லாத
தூபகற்பம்!

நல்ல தீய
பழக்கங்கள்
இரண்டுமே ஒன்றுதான்
எங்களுக்கு - நீ
எடுத்துரைக்கும் வரை

நீர்
நிறம் பெற்றாலும்
தன்னிலை மாறாத
ஆசானே!
வழியை காட்டுங்கள்
வலியை காட்டாமல்

சின்னச் சின்ன
விடயங்களுக்கெல்லாம்
சினம் கொள்ளாதே!
பொக்கிஷங்களான
எங்களுக்கு - பொறுமையை
உபதேசி

கற்பிக்கும்
விடயங்களை
காலநிலை
அறிக்கையாக்காதே!
கல்
வெட்டுக்களாக்கு.

வழிகாட்டியே
சுவாசிக்கும் வளியில்
$O_2$வாக வேண்டும்
சீ........$O_2$ வாக அன்றி

தொழில்நுட்பத்தை
தொலைவாக்காமல்
வகுப்பறைக்கு
வரவழைக்கும் முகவராகு!

ஊருக்கு மட்டுமே
உபதேசமன்று
தனக்கும் என்ற
தன்மை வரவேண்டும்

கலைஞனே!
நான் - உன் ரசிகன்
நின் மாற்றங்களில்
மலர்ச்சியை
ஏற்படுத்து

ஏணி என்ற
நிலையில் இருந்து
ஏற்றம் பெறுவாயா?
உயர்த்தியாக!

சமூக இடைத்தொடர்பை
இறுக்கமாக்கி
இடை விலகலை
இல்லாமல் செய்!

விழுமியங்களை
விழாமல் நிலை நிறுத்து
எமக்கும்
எடுத்துரைத்து.

கடலில் தத்தளிக்கும் எனக்கு
கலங்கரை விளக்கமாக அல்ல நீ
கட்டைத்துண்டாகு!

பின்தங்கிய எங்களைப்
பிறையாக - மிளிரவை

எதிர்பார்ப்பை ஏற்றுக்கொண்டு
எம் அடைவுமட்டத்தை
ஆகாய மட்டமாக்கு

J. பிரபாகரன்
நு/ விவேகாலயா த.வி
லிந்துலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவரும் நவீன உலகில் கல்வித் தொழிநுட்பம் எனும் அடிப்படையில், தகவல் தொழிநுட்பம் பாடத்தினூடாகப் புதிய புதிய கற்றல் கற்பித்தல் தர உள்ளீடுகள் பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் பாடசாலைகளும், ஆசிரியர்களும் தம்மை இற்றைப்படுத்திக் கொண்டு கல்வியில் ஏற்படும் சமகால மாற்றங்களையும், போக்குகளையும் கால நீரோட்டத்தில் உட்புகுத்திக் கொள்வது அவசியமாகும். இதன் காரணமாக மாணவர்கள் கல்வித் தொழிநுட்பத்தில் இணைந்த வகையில் புதிய அனுபவங்களையும் புதிய தகவல்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும்.

நான் கேட்டேன் - நான் மறந்தேன்
நான் பார்த்தேன் - ஞாபகப்படுத்தினேன்
நான் செய்தேன் - விளங்கிக்கொண்டேன்

என்பதற்கமைவாக கற்றல் அனுபவங்களைக் காட்சிகள், செயற்பாடு மூலம் கற்பித்தலாக மேற்கொள்ளல் சிறப்பைத் தரும். தற்போது கரும்பலகைக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடியன: White Board, Green Board, Grag Board, Red Board, Orange Chalk Board, Yellow Chalk Board என்பன பயன்படுத்தப்படுகின்றன. இதற்குப் பொருத்தமான நிறக்கட்டிகளும், எழுதுகருவிகளும் பயன்படுத்த வேண்டும்.

படங்கள், அட்டவணைகள், சுவரொட்டிகள், மாதிரிகள், வரைபுகள், அசையாப் படங்கள், அசையும் படங்கள், இடம்பெயர் சலன அட்டைகள், பளிச்சிடும் அட்டைகள் என்பவற்றைக் காட்சிப்படுத்துவதற்குக் காந்தப்பலகை, கம்பளிப் பலகை, செருகல் பலகை, அறிக்கைப் பலகை, காட்சிப்படுத்தல் பலகை, இலத்திரனியல் வெண் பலகை என்பன பயன்படுத்தப்படுகின்றன.

பல்லூடக எறியி (Multi Media Projector) கற்றல் மிகச் சிறப்பாக இடம்பெறும வகையில் CD, Power Point என்பவற்றைத் திரையில் பிரதிபலிக்கச் செய்ய முடியும்.
விம்பங்களைப் பெறுவதற்கு கணினி, வீடியோ டெக் என்பவற்றைப் பயன்படுத்த முடியும்.

## கல்வி ஆலோசனை
## (Educational Counselling)

கல்வியானது ஒருவரது தனி வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு உதவக்கூடியது மட்டுமல்ல அது சமூகத்துக்கும் சிறந்த சொத்தாகும். மேலும் கல்வியினால் எதிர்பார்க்கப்படுவது நல்வாழ்வும் பயனுள்ள தொழிலுமாகும். பெற்றோர் விரும்புவது அறிவு வளர்ச்சி, குணப் பண்பாட்டு வளர்ச்சி, சமூக வளர்ச்சி ஆகியனவாகும். சமூகம் எதிர்பார்ப்பது மக்கள் அறிவு பெற்றிருக்க வேண்டும்,. சட்டப்படி வாழவேண்டும், நற்பிரஜைகளாகத் திகழ வேண்டும் என்பதையே.

கல்வி ஆலோசனை வழங்கும் பிரதான நிறுவனமாக பாடசாலை விளங்குகிறது. கல்வி என்பது சமூகச் செயற்பாடு. அதனால் பாடசாலைச் சமுதாயத்தின் சொத்து சமூகத் தேவைகளையும், அதன் பெறுமதியையும், எதிர்பார்ப்புக்களையும் பாடசாலை பிரதிபலிக்கும். சமுதாயத்தின் இயல்புக்குத்தக்க வகையில் கல்வி வழங்கப்படுகிறது. இதனால் வாழ்க்கைக்குத் தேவையானவை எதுவோ? அவை பற்றிய சிந்தனையை, தரங்களை, கொள்கைகளை, நம்பிக்கைகளை, நற்குணங்களை, எண்ணங்களைப் பிரதிபலிக்கும் இடமாகப் பாடசாலை விளங்குகிறது. இதனால் சமூகமயமாக்கப்பட்ட சூழல் நிலவுகிறது. சமூக வளர்ச்சிக்கு உந்து சக்தியாக பாடசாலை அமைகிறது. சமுதாயத்திற்குத் தேவையான நற்பிரஜைகளை உருவாக்குகிறது. அதன் மூலம் சமூகத்திற்குப் பெரும் பங்களிப்பைச் செய்கிறது. இந்த வகையில் கல்வி ஆலோசனையைத் தொடர்ச்சியாகப் பெறும் முகவர்களாகப் பாடசாலையின் கட்டமைப்பு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆலோசனை
## COUNSELLING THE ELEMENTARY SCHOOL CHILD)

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் சந்தோசமாக இருக்கிறார்கள். அவர்கள் சந்தோசத்திற்கேற்ப இணங்கி நடப்பதற்கான பிரச்சினை பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுச் சூழலிலும் உள்ள விடயங்கள் அவர்களைப் பாதுகாக்கின்றன. அச்சூழல்கள் பிள்ளைகளுக்குக் கவர்ச்சிகரமாக அமையாவிட்டால் அவர்கள் சந்தோசமற்றுக் காணப்படுவார்கள். இப்படியான மாணவர்களுக்கு ஆலோசனை கூறுவதன் மூலம், அவர்களின் மனோ நிலையில் ஆறுதல் ஏற்படுத்தலாம். பிள்ளைகளுக்கு வீட்டுச் சூழலில் கிடைக்கும் ஆறுதல், பாடசாலைச் சூழலிலும் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். மாணவர்களைச் சிறந்த முறையில் ஆலோசனை கூறி வழிப்படுத்துவதன் மூலம் அவர்களை எதிர்கால நற்பிரஜைகளாக உருவாக்க முடியும் என்பதாகும்.

## உயர் பிரிவு மாணவர்களுக்கு ஆலோசனை

இவ்வயதுப் பிரிவு மாணவ மாணவியர்க்கு ஆலோசனை வழங்குதல் மிகவும் முக்கியமான பணியாகும். அவர்களின் வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் காலம் இக்காலமாகும். எல்லா வகையான அபிவிருத்தியும் இக்காலத்தில் ஏற்படும். எனவே இக்காலத்தில் கூடிய கவனம் தேவை. ஆலோசகர் அவர்களுடன் நம்பிக்கையுடன் பழகி அவர்களின் நோக்கங்களை அடையக்கூடிய உதவிகளை, ஒத்தாசைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். எதிர்காலத்தில் அவர்கள் எவ்வாறு தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்பதற்காக வழிகாட்டல் வேண்டும்.

## கல்லூரியில் ஆலோசனை
## (COUNCELLING AT COLLEGE)

ஒரு கல்லூரி மாணவர் ஒரு வளர்ந்தவராக இருப்பினும், வளர்வதற்குரிய பொறுப்புணர்வுகள் இல்லாதிருக்கலாம். இந்த வகையில் பின்வரும் உயர்கல்வி நோக்கங்கள் உயர்கல்வி மாணவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும்.

1. வாழ்க்கையின் உயிரோட்டமுள்ள தத்துவம்.
2. பல்வேறு துறைகள் சார்ந்த திறமைகளை மதித்துப் பேணுதல் அனுபவித்தல்.
3. சுற்றாடலிலுள்ள பல்வேறு வசதி வாய்ப்புக்களை உணர்தல்
4. சுதந்திர உணர்வு இருப்பதுடன், தம் பொறுப்புக்களைச் சிறப்பாகச் செய்து முடிக்கக் கூடிய தன்மையையும் கொண்டிருத்தல்.

எனவே கல்லூரிக் காலத்தில் ஆலோசனையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

## சமூக மாற்றத்தின் போது ஆலோசனை

சமூக மாற்றம் என்பது ஒரு அமைப்பின் அல்லது மக்கள் குழுவின் நடத்தை மூலம் வெளிப்படுத்தப்படும் நடத்தைக்கோலங்களாகும். சட்டங்கள், நிறுவனங்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், பாவனைகள் என்பவற்றை இது குறிக்கும். இம் மாற்றங்கள் படிப்பினையாகவும் வரலாம். திடீரெனவும் வரலாம். இம்மாற்றங்கள் பின்வரும் துறைகளில் அமைந்திருக்கும் அரசியல், பொருளாதாரம், சமயம், பண்பாடு, குணநலம், சமூகம் என்பன. சமூகத்தில் இம்மாற்றம் ஏற்பட்டால் சமூகமாற்றம் எனலாம். சமூகம் என்பது மனிதத் தொடர்புள்ள நிலையாகும்.

நாட்டின் ஒருமைப்பாடு, இன ஒற்றுமை, சமாதானம் என்பவற்றுக்கு கல்வி பிரதானமாகும். மக்களின் நடத்தையில் சரியான போக்கு கல்வியினால் தான் ஏற்படல் வேண்டும். மாற்றங்கள் சமூகத்தில் ஏற்பட கல்வியே வழிவகுக்கின்றது. ஆளுமை வளர்ச்சிக்கும் இது உதவுகிறது. இளைஞர்கள், சங்கங்கள், கழகங்கள் என்பன தனியாட்களை வளர்க்க உதவுகின்றன. சமூகமாற்றமும் கல்வியும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புள்ளவை. கல்வியினால் ஏற்படும் மாற்றங்கள் சமூகத்தில் சிந்தனைப் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதற்கு நாம் வழிகாட்டல் வேண்டுமென்று "அரிஸ்டோட்டில்" கூறியிருக்கின்றார். எனவே இதனை வலியுறுத்தவேண்டியது சமூகப்பிராணியின் (மனிதனின்) கடமையாகும். பொதுவாக நோக்குமிடத்து கல்வி ஆலோசனையின் நோக்கங்கள் எனும்போது..........,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) எதிர்கால அடைவு கருதி மாணவர்களின் ஆற்றல்கள் திறமைகளைப் பயன்படுத்தி என்ன பாடங்களைக் கற்க வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.
(2) உரிய பாடத்துறைகளில் நல்ல முறையில் தேர்ச்சியடைய சிறந்த கற்றல் முறையில் மாணவர்களை ஈடுபடுத்தல்.
(3) கற்கைக்கு அப்பால், சமூக மேம்பாட்டுக்கான ஆர்வங்களை அபிவிருத்தி செய்தல்
(4) கல்வியின் நோக்கத்தையும் அதை அடைவதில் பாடசாலையின் நோக்கத்தையும் விளங்கிக் கொள்ள
(5) மாணவர்களுக்கு ஆர்வமுள்ள அவர்களது ஆற்றலை விருத்தி செய்தல்.

(6) தெரிவு செய்த தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு சிறந்த பயனைப் பெறல்.
(7) மாணவர் தம் சக மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் நல்லுறவைப் பேணவும் சந்தோசமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் முனைதல்

வழிகாட்டல் - ஆலோசனை கூறுவதில் இன்னுமொரு முக்கியமான விடயம் மாணவர்களின் தனிப்பட்ட வளர்ச்சி, அபிவிருத்தி, உ மாறுபாடுகள், உணர்வுகள் என்பவற்றில் ஏற்படும் வளர்ச்சியும், மாற்றமும் குறித்ததாகும். உடல் வளர்ச்சி புதியதோர் உலகை உருவாக்குகிறது. உளவியல், உடலியல் மாற்றங்கள் காரணமாக மனோ ரீதியான சிரமங்களும், சமூகப் பொருத்தமின்மையும் ஏற்பட அவை வழிவகுக்கின்றன. இந்த வகையில் கல்வி ஆலோசனையைத் தொடர்ச்சியாகப் பெறவேண்டும். மாணவர்கள் ஆலோசனையால் பெரும் பயனை அடைய வேண்டும். இல்லையேல் ஆலோசகர் என்ற ஒருவரிருக்கத் தேவையில்லை. இந்த வகையில் ஆலோசகர் அந்நபருக்கு ஆலோசனை கூறவேண்டியவராக இருக்கிறார். அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டியவராக இருக்கிறார்.

இந்த வகையில் வீட்டுச்சூழலும் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். பாடசாலைச் சூழலும் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். இவ்வாறு மேற்கூறப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுமேயானால், கல்வியினூடாக எதிர்காலச் சவால்களை நிறைவேற்றக்கூடிய நற்பிரஜை உடைய சமூகம் ஒன்று உருவாகும் என்பதில் துளி கூட ஐயமில்லை.

தொகுப்பு
கணேசன் யோகேஸ்வரன்
நு/கிறேட்வெஸ்ரன் த.வி
தலவாக்கலை.

உசாத்துணை
1. இலங்கையின் கல்வி வரலாறு
2. கூர்மதி (கல்வி அமைச்சின் வருடாந்த வெளியீடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் சமூகத்தின் இருப்பு, அதன் வாழ்வு அதன் மரபு வழி கலாச்சாரப் பின்னணியிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் எமது மலையக சமூகத்திற்கெனத் தனித்துவமான கலைச்செல்வங்கள் மலிந்து கிடக்கின்றன. கி.பி. 1800 ஆம் ஆண்டளவில் சொத்தடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட எமது சமூகத்தின் நிழல்களாகவே இக்கலைகள் திகழ்கின்றன. அந்த வகையில் காமன்கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் என்பன முக்கிய கூத்துக்கலைகளாகத் திகழ்கின்றன.

இதனடிப்படையில் திருமாலின் மகனான காமனையும் சிவனின் புதல்வியான ரதி, தக்கன் ஆகியவர்களைக்கொண்டு புனையப்பட்ட கதையாக "காமன் கூத்து" அமைகின்றது. "பொன்னர் சங்கர்" வேளாளர் குடும்பத்தின் குன்றுடையானின் மகனான பொன்னர் சங்கர், அருச்சுனன் ஆகியவர்களின் பாசக்கதையைக் கூறுகின்றது.

இவற்றில் "அருச்சுனன் தபசு" எதுவெனப் பார்க்கும் போது, இது மக்களின் கலையாக மட்டுமல்லாமல் பக்தி இலக்கியமாகவும் போற்றப்படுகின்றது. இது வில்லிப்புத்தூராழ்வார் அருளிய வில்லிப்புத்தூர் இலக்கியங்களில் இடம் பெறும் கதையாக வருகின்றது. மேலும் இதன் மூலக்கதையைப் பார்க்கும் போது, மகாபாரதக் கதையின் ஆதிப்பருவம் தொடக்கம் சுவர்க்க ரோகினிப் பருவம் வரை பதினெட்டைக் கொண்டுள்ளது. இதில் ஆரண்யப்பருவத்திலேயே இவ் அருச்சுனனின் தவவலிமை குறித்துக் கூறப்படுகின்றது. இது 57 செய்யுள்களாகக் காணப்படுகின்றது. "கதலிப்பா" என்ற யாப்பு வடிவத்தைக் கொண்டு திகழ்கின்றது.

இதன் கதையானது, சகுனியின் சூழ்ச்சியால் திரௌபதையை சூதாட்டப் பொருளாக வைத்துப் பாண்டவர்கள் தோற்றுப்போகின்றனர். இதில் கௌரவர்களை அழித்து மட்டுமே நாட்டை மீட்க முடியுமெனக் கண்ணன் கருதுவதாகவும், இதற்காக அருச்சுனன் கைலாயகிரிக்குச் சென்று தவம் செய்து பாசுபத அஸ்திரத்தைப் பெற்றுவருவதாகவும் கதை அமைகின்றது. இது பாமர மக்கள் மத்தியில் கூத்துக்கலை பரிணமித்து நாயக்கர் காலம் தொட்டு அடிமட்ட மக்களின் வாழ்வியல் கூத்துக்கலையாக ஆடப்பட்டுவருகின்றது. இது செவ்வியல் (Classical) மட்டுமல்லாமல் (Folk Ballad) கூத்துக்களாகவும் இருப்பது சிறப்பானதாகும்.

இக் கூத்தானது, ஐந்து அங்கங்களென்றாலும் ஒரு அங்கம் மட்டுமே ஆடப்படுகின்றது. இது இலங்கையில் ஒரு நாள் அல்லது மூன்று நாள் கூத்துக்களாக ஆட, தென்னிந்தியாவில் 18 நாள் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

இசை என்று பார்க்கும்போது, (ரிதம்) தப்பு, உடுக்கு, சதங்கை, ஜால்ரா என்பவை முதலிடம் வகிக்கின்றன. பாத்திரப்படைப்பு எனும் போது அருச்சுனன், தருமன், இந்திரன், கிருஷ்ணன், ஏழுகன்னி, பேரண்டக்கி, மோகினி, ஈஸ்வரன், கட்டியக்காரன போன்ற பாத்திரங்கள் காணப்படுகின்றன. இது இரவு 9.00 மணிக்கு ஆரம்பமாகி முதலில் விநாயகரை வாழ்த்தும் பாடலுடன் தொடங்கப்படுகின்றது. அந்த வகையில் வாழ்த்துப் பாடல்களாக,

அல்லல் போம், தொல்லை போம்
வயிற்றுப் பிறந்த தொல்லை போம்
துயரம் போம் நல்ல குணமதிகமாம்
அருணைக் கோபுரத்து மேவும் கணபதியை
கை தொழுதக்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தருமராஜனின் வருகையில் தொடங்கி, பகடையில் தோற்றுப் பின் அருச்சுனனை நினைந்து தவம் செய்ய அனுப்பும் நிகழ்வு இடம் பெறும். இதில் 13 வனங்களை அருச்சுனன் கடக்க வேண்டும். இதில் 8 வனங்கள் அருச்சுனனின் தவ வலிமையைச் சோதிக்கும் அங்கங்களாகவும் இருக்கின்றன.

மோகினி மரிப்பு தொடக்கம் பேரண்டக்கி மரிப்பு வரை இடம்பெறும். பின் 60 அடி உயரமான கம்பத்தில் அருச்சுனன் உருவத்தில் ஒருவர் ஏறி தவம் செய்ய வேண்டும். இந்த நிகழ்வுகளில் மக்களின் பேச்சு வழக்கு மொழியில் பாடல்கள் பாடப்படுகின்றன. அந்த வகையில்,

"சண்டைக்கு வந்த சரியா வாடா
நீ கன்னி பயலே
தகுந்த வார்த்தை பேச வேண்டாமே
குத்துக்கு வந்தா சரியா வாடா"

என்று ராட்சகன் பாட்டு அமைய அருச்சுனன் பாடுவதாக,

வந்த வலைகளை கண்ணால் கண்டானாம்
அந்த வீமன் தம்பி விஜயர்சுனன்
வில்லாமல் தேக்கி காலா கலக்கினான்

என்றவாறு பாடல்கள் அமையப்பெறுகின்றன.

வசனம் என்று பார்க்கும்போது அருச்சுனன் பேசுவதாக அமைகின்றது,

கேளும் அர்ச்சுனா, நீயோ பெண் பித்தன்
வாலுக்கு சேவை கட்டியிருந்தாலும் அதை நீக்கி
விட்டு ஆணா, பெண்ணா எனப் பார்க்க கூடியவன்

என்று அமையப் பெறுகின்றது.

இவ்வாறு அருச்சுனனைக் கதையின் நாயகனாகக் கொண்டு திகழும் இலக்கியமாகவே அமைகின்றது. ஆரம்பக்காலத்தில் கூத்துக்களின் இடைவெளியைப் பூர்த்தி செய்ய "பபுன்" போன்ற கூத்துக்கள் இடம்பெற்றன. தற்போது இதன் செல்வாக்கு குறைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்றைய மக்கள் மத்தியில் இதன் செல்வாக்கு இழந்ததற்குக் காரணமெனும்போது, ஆரம்பத்தில் பிராமணர் வசமிருந்து பின் சாதாரண மக்களின் ஏழைகள் கூத்தாகப் பார்க்கப்படுகின்றன. தற்காலத்துக்கு ஏற்றவாறு ஒப்பனை, அலங்காரம் செய்யாமையும், கௌரவக் கலையாக எண்ணாமையும் இதற்குக் காரணமாகும். மேலும் இன்று சினிமா இலக்கியத்தில் இதனைச் சேர்க்காமையும் இதன் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றது. மேலும் பெரும்பாலும் பக்தியை இதனுடன் சேர்க்கின்றமையும் இக்கலையின் தொய்வுக்குக் காரணமாக அமைகின்றது. இது இன்று வழிபாட்டுக் கூத்துக்கலையாகவே ஆடப்பட்டு வருகின்றது.

இன்று மேலை நாட்டு இலக்கியங்களான இலிய, ஒடிசி போன்றவையும் ஜப்பானிய பாரம்பரியக் கலையான கஜோக்கி போன்றவையும் திரைப்படங்களாகக் கொண்டு வரப்பட்டுள்ளபோதும், உலகின் திரைப்படத் துறையில் 4ம் இடம் வகிக்கும் இந்திய சினிமா, "கூத்துக்கலை" குறித்து என்ன செய்தது என்று பார்க்கத் தோன்றுகின்றது. காத்தவராயன் கூத்துக்கள் போன்றவை சிறப்பாக மேடையேற்றி அரங்குகளில் செய்யும்போது எமது கலைகளை அந்நிலைக்குக் கொண்டு செல்லாமை பெரியதொரு இழப்பாகக் கருதப்படுகின்றது.

இக்கலைகளை 1980 காலப்பகுதியில் பாடசாலை மட்டத்தில் எடுத்துச்செல்ல முயற்சித்த போதும் அது தொடர்ந்தும் வெற்றியளிக்காமல் போனது. எனவே எமது சமூகத்தின் கலையம்சத்தைப் பேணுவது எமது கலாச்சாரத்திற்கும் அதன் நிலைபேற்றுக்கும் நாம் செய்யும் பெரிய தொண்டாகும். அத்துடன் இக்கலைகளைப் புதிய பரிணாமத்திற்குட்படுத்தி தொழினுட்ப உதவியுடன் ஆடும் பொழுது இக்கலைகள் எம் சமூகத்தின் மத்தியில் தொடர்ந்தும் இருக்கும் கலைகளாக மாறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கி.மோகன்ராஜ்
நு/பெல்கிறேவியா த.வி
தலவாக்கலை.

உசாத்துணை:-
அம்பிகை வேல் முருகு
கருத்துப் பகிர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அனைவருக்கும் கல்வி முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு கல்வியைக் கற்கின்றார்கள். மனிதனுக்குள் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இம்மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைவது கல்வியே ஆகும். கல்வியைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர். வாழ்க்கைக்குப் பொருந்தாத பயனற்ற கருத்துக்களையும், கோட்பாடுகளையும் மனனஞ் செய்தலின்றி அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கினைத் திரட்டிக் கொள்வதற்கான செயன்முறையே கல்வியாகும். பொருத்தமான சான்றோனை உருவாக்கி ஒரு சிறந்த குடிமகனை சமுதாயத்துக்கு அளிப்பதே கல்வியின் நோக்கமாகும். கல்வி ஒருவனை வளமாக வாழ வைக்கவில்லை என்றால் அக்கல்வி அவனுக்குப் பொருத்தமற்றதாக இருக்கின்றது எனலாம். மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய எல்லாச் செல்வங்களிலும் கல்விச் செல்வமே சிறந்ததாகும்.

கல்வி கற்றவர்களை சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுவர். மனிதன் என்பவனுக்குச் சிந்திக்கும் ஆற்றல் உண்டு. சிந்திப்பதன் மூலம் அறிவு வளர வேண்டும். இதன் மூலம் எதையும் ஆழ்ந்து ஆராயும் பண்பு ஏற்படும். இதன் விளைவாகக் கல்வியைக் கற்பதற்கான ஆற்றலும், காரண காரியத் தொடர்பு காணும் திறனும், பகுத்தறிவும் வளர்ச்சி பெறும். அமெரிக்கக் கல்வி உளவியலாளரான "ஜோன் டூயி" என்பவர் கல்வி ஒருவனிடத்தில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் ஒருவன் பெறுகின்ற பல்வகையான அனுபவங்களே கல்வியாகும் என்றும் கூறியுள்ளார். கல்வியென்பது அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களினூடாக அளிக்க வேண்டும் என்கிறார். கல்வியை மற்றவர்களுக்கு ஊட்டுவதிலும், வழிகாட்டுவதிலும் ஒரு ஆசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானதாகவும் மகத்தானதாகவும் அமைகின்றது.

இன்று அனைவரும் கல்வியின் அவசியத்தை உணர்ந்திருக்கின்றார்கள். கல்வி இல்லாதவனை "நடைப்பிணம் "என்று கூறும் அளவிற்கு கல்வியின் தேவை அதிகரித்துள்ளது. மனிதன் பிறப்பிலிருந்து ஐம்புலன்கள் மூலம் பெறும் அனுபவத்தினால் அறிவு பெறத் தொடங்குகின்றான். அவ்வகையான புதிய விடயங்களை அறிந்து கொள்ளுதலும், தேடலுமே தான் கல்வியாகும். எனவே ஒருவனிடத்தில் பொதிந்திருக்கும் அறிவை, கல்வியானது விருத்தி செய்கின்றது என்பதே கல்வியியலாளர்கள் கூறிய உண்மையாகும். ஆகவே இயல்பான எம் அறிவைத் தூண்டும் கல்வியை நாம் தேடிப் பெறுதல் அவசியமாகும்.

அதிவீரராம பாண்டியன் கல்வியைப் பற்றி நறுந்தொகை எனும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே "

திருவள்ளுவர் கல்வியைப்பற்றி திருக்குறளில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"யாதேனும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு"

கல்வியானது பாடசாலையில் தொடங்கி, பல்கலைக்கழகம் வரை நீடிக்கின்றது என்று பலரும் எண்ணுகின்றனர். ஆனால் குழந்தையாக இருக்கும்போது பெற்றோரிடத்தே கல்வி கற்றலும் ஆரம்பிக்கின்றது. ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் பெறும் ஒவ்வொரு அனுபவங்களையும் கல்வியாகக் கூறலாம். ஒரு பிள்ளை பாடசாலைக்கு வருமுன்னமே தனது வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான விடயங்களைக் கற்றுக் கொள்கின்றது.

பிள்ளைகள் முக்கியமாகத் தாயிடமிருந்தும், தந்தையிடமிருந்தும், உறவினர், அயலவரிடமிருந்தும் வாழ்க்கையின் அடிப்படைகளை உள்வாங்கிக் கொள்கின்றனர். தாமாகவே செவிமடுத்தும், பார்த்தும், சுவைத்தும் , மணந்தும் , தொட்டுணர்ந்தும், செய்து பார்த்தும், கதைத்தும் பலவற்றைக் கற்கின்றனர். சூழலின் உதவியுடன் பல எண்ணக்கருக்களையும் அறிந்து கொள்கின்றனர். உதாரணமாக உணவு உண்பதற்கு முன் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவ வேண்டும் எனப் பாடசாலையில் கற்கின்றனர். இதற்கிணங்க பிள்ளைகள் வீட்டில் தினமும் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்பதற்கு முன் கைகளைச் சவர்க்காரமிட்டு கழுவுகின்றனர். இது கற்றலினால் ஏற்படும் மாற்றமாகும்.

கல்வியின் ஒரு பெரும் பகுதியினை மாணவர்கள் பாடசாலைகளிலே கற்கின்றார்கள். கற்றல் கற்பித்தல் முறைகளின் மூலம் மாணவர்களுக்குக் கல்வி ஊட்டப்படுகின்றது. புதிய புதிய கற்பித்தல் அணுகுமுறைகள் மூலம் கற்றலுக்கு வழிகாட்டப்படுகின்றது. இக்கல்வியானது மூன்று அடிப்படையில் நிகழ்கின்றது. அவை முறைசார்கல்வி, முறைசாராக்கல்வி, முறையிற்கல்வி என்பனவாகும். இடம், காலம், நேரம் என்பன தீர்மானிக்கப்பட்டு உரிய நிர்வாகக்கட்டமைப்பின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட பாட விதானத்திற்கமைய படிமுறையாகத் திட்டமிட்டு வழங்கப்படும் கல்வி அமைப்பையே முறைசார்ந்த கல்வி என்பர். ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரை இதனைக் குறிப்பிடலாம். பாடசாலைக் காலத்துக்குப் பின் கற்றுத்தரப்படும் கல்வி விடயங்கள் முறைசாராக் கல்வியாகும். பாடசாலைக் கல்வியை இடையில் விட்டு அதனைத் தொடர முடியாமலிருப்பவர்களும் இதில் கலந்து கல்வி கற்கலாம். வாழ்க்கை அனுபவங்களினூடாக எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி எப்போதும் கற்கக்கூடியவை முறையிற் கல்வி ஆகும்.

ஆசிரியரின் கட்டுப்பாட்டிலிருந்து கல்வி கற்பதை விட மாணவனை மையப்படுத்தி தற்போது சகல இடங்களிலும் கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்பவும், கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்பவும் கல்வியில் மாற்றம் ஏற்படுவதை நாம் காணலாம். கற்றல் கற்பித்தலில் இன்று கல்வியானது புதிய போக்குடன் செல்வதை நாம் காணலாம்.

ஒருவருடைய அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியோடு சமூகப்பயன்பாடாகவும் ஒருவர் பெறும் கல்வி அமைய வேண்டும். கல்வியின் மூலம் நிறைவான வாழ்வு கிடைக்கப் பெற வேண்டும். நவீன தொழினுட்பங்களினோடு மனிதனை வையகத்தில் சிறந்த மனிதனாக வாழ வழி செய்தல் வேண்டும். கல்வியைத் தேடித் தேடிப் பெற்று வாழ்வில் பயன்படுத்தி உயர வேண்டும். இன்றைய நவீன உலகில் கல்விச் செயன்முறையின் முக்கியத்துவத்தையும் அது தொடர்பான பரவலாக்கல் செயற்பாடுகளையும் அறிந்து அதற்கமைய நாம் அனைவரும் எம்மை ஒழுங்குபடுத்திக் கொள்வோமாக.

செல்வி. அருணகிரி நிர்மலா ஜோதி
நு/ரிலாமுல்ல த.ம.வி.
கந்தப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்மா" என முனங்கியபடி, படுக்கையில் புரண்டபடி திரும்பிப் பார்த்தாள் அவள். ஏன்டி மூதேவி ஒனக்கு இன்னும் விடியலயா?

அம்மா குசினியில் இருந்து கத்துவது காதைச் செவிடாக்கியது. "இதோ வாரேம்மா" என்றபடி கண்ணை மீண்டும் இறுக மூடிக்கொண்டு போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டாள் லக்ஷ்மி. அவள் எழுந்திருக்கும் முன் அவளைப்பற்றிய விவரத்தைப்பார்த்து விடுவோம்.

லக்ஷ்மி மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவள். சிறுவயதிலேயே தந்தையை இழந்து தாய், தங்கை இருவர், தம்பி என குறுகிய சொந்தங்களுடன் வாழ்பவள். பதினேழு வயதுடைய பருவமங்கை. பெயருக்கேற்றபடி லக்ஷிகரமான அழகு, அறிவு, ஆக்கம், அன்பு, நேர்மை என எல்லா வித நற்குணங்களுக்கும் சொந்தக்காரி.

கொஞ்சம் இருங்க அவள் எந்திரித்து விட்டாள். பிறகு பார்ப்போம் "ஐயய்யோ வந்தா தலையில் குட்டுவாளே" பதறியபடி படுக்கையிலிருந்து எழுந்து விட்டாள். அவள் அப்படி ஒன்றும் சோம்பேறியல்ல. மிகச்சுறுசுறுப்பானவள். 2010 ஆகஸ்ட் மாதம் உ/த பரீட்சை எழுத வேண்டியவள். அதற்காகக் கஷ்டப்பட்டுப் படிப்பவள் "அம்மா எனக்கு பிலேண்டி தர்றியா? எனக் கேட்டபடி குசினிக்குள் நுழைகிறாள் லக்ஷ்மி ம்..ந்தா.. என தேநீர் கோப்பையை மகளிடம் நீட்டியபடி பலாக்கட்டையில் அமர்கிறாள் காமாட்சி.

காமாட்சி 35 வயதானவள். 18 வயதில் திருமணம் முடித்து 17 வயதில் ஒரு மகளையும், 11, 08, 03 என மேலும் இரண்டு மகள்களையும், இறுதியாக ஒரு மகனையும் பெற்றவள் தான் இந்தக் காமாட்சி.

"அப்பா நான் போயிட்டு வாரேன்....." என்றபடி காலை டியூசன் வகுப்பிற்கு புறப்பட்டுச் செல்கிறாள் சுதா.

" சரிம்மா நானும் பேக்கரிக்குப் போகப் போகிறேன்" என அவசர அவரமாக ஆடைமாற்றிக்கொண்டு புறப்படுகிறார் கணேசன். தேயிலைத்தோட்டத் தொழிற்சாலை ஒன்றில் காவல்காரராகக் கடமையாற்றும் இவர் தன் மனைவியை வெளி நாட்டிற்கு அனுப்பிவிட்டு தனது 15 வயதான மூத்தமகளுடனும், 10 வயதான மகனுடனும் மஸ்கெலிய மேபீல்ட் தோட்டத்தில் வசித்து வருகிறார்.

"என்னங்க..ஒங்கள நம்பித்தான்.. இரண்டு பிள்ளைகளையும் விட்டுட்டு போறேன். நல்லபடியா பார்த்துங்க... படிக்க வைங்க" அவள் கூறிய வார்த்தை நல்லபடியாக காதில் விழுந்திருந்தாலும் மாலையானதும் எல்லாம் மறந்து விடுகிறது. குடிக்கு அடிமையானவன் மாலை வருவது என்னமோ நான்கு கால்களில்தான். ஓரளவு வசதியான வாழ்க்கைதான் படிக்கின்ற சுதாவுக்கும், தம்பி சுதனுக்கும் எந்நாளும் சாராயவாடை மூச்சுக்காற்று தான். படிக்க மிகுந்த கஸ்டமாக இருந்தும் தன் எதிர்கால இலட்சியப்படி வைத்தியராக மிகுந்த ஆர்வத்துடன் படிக்கின்றான்; சமைக்க, கழுவ என வீட்டு வேலைகளையும் செய்து கொள்கின்றான்; தம்பியையும் மிகுந்த அன்புடன் கவனித்துக் கொள்கின்றான்.

'ஏன்டி இன்னிக்கும் இப்படியே எந்திரிச்சா என்னாகுறது' காமாட்சி இன்றைக்கும் கத்துகிறாள்.'

இவளுக்கு எந்நிலைமை எங்கே புரியப் போகின்றது' நேத்து காலை தங்கராசு கங்காணி பார்த்த பார்வையும் அவனின் அசிங்கமான பேச்சும் 'சீ' 'நினைச்சாலும் இப்பவும் வாந்தி வர்ரமாறியிருக்கு' என மனதால் எரிச்சல் பட்டபடி நேற்றைய சம்பளத்தை மீண்டும் நினைத்துப் பார்க்கிறாள். காமாட்சி 35 வயதிலும் மாநிறமாயினும் நல்ல அழகுடனும் மிகுந்த உடல்வாகுடனும் இருப்பவள்.

கணவன் இறந்த இந்த மூன்று வருடமும் மிகவும் கஸ்டப்பட்டுப் போனாள் காமாட்சி. அம்மம்மா, இந்த ஆண் சமுதாயத்திலுள்ள காடைக்கள்வர்கள் மத்தியிலும் மிகுந்த தவிப்புக்கு ஆளானவள். எந்நேரமும் காமப்பார்வை பார்த்துக் கொண்டிருக்கும் கங்காணி நேற்றுக் கூட ஒழுங்காக வேலை செய்யாதவர்களுக்குப் பச்சைத் தூசனத்தில் ஏசிக்கொண்டிருந்தான்.

காரணமில்லாமல் ஏசுவதில் அவன் படுகில்லாடி; கேட்கச் சகிக்கவில்லை; இப்படி எல்லோருக்கும் ஏசிக் கொண்டு வந்த அவன், காமாட்சி இருக்கும் நிரைப் பக்கம் வந்தவுடன் மட்டும் பல்லை இழித்துக் கொண்டு நின்றான். காமாட்சி இருந்தது மேடான ஒரு இடத்தில்; அவன் அவள் மேனியை உற்றுப் பார்த்தபடி இருக்க விஷ ஜந்து ஊர்வது போல இருந்தது காமாட்சிக்கு; காமு, காமு நீ எனக்கு ஒரு வார்த்த சொல்லு; ஒனக்காக அரை பேற முழு பேறா மாத்துறேன்; இப்படி எவ்வளவு நாள் தான் கஷ்டப்படுவ? உனக்காக இந்த தங்கராசு இல்லையா?

தங்கராசு கேட்டப்படி இருக்க வழமையாக பொறுமையாக இருக்கும் காமாட்சிக்கு ஏதாவது சொல்ல வேண்டும் போல இருந்ததால் த்தூதேறி எனத்துப்பி விட்டு□ ஆடு நனையுதேனு ஓநாய் அழுததாம்; என நன்றாகப் படும்படி நறுக்கென்று பதிலளித்தாள். என்னைக்காவது ஒரு நாளைக்கு பார்த்துக்கிறேன் எனக் கூறி விட்டுச் சென்றான் தங்கராசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாக்கையா விரட்டுகிறார் காமாட்சியை; சின்னத்தொர பங்களா அமைந்திருக்கும் மலையிலேதான் அன்று அவளுக்கு வேலை "என்னாங்க சாமி கூப்பிட்டீங்களா?" காமாட்சி கேட்க "என்ன உனக்கு ஒழுங்கா வேலை செய்ய ஏழாதா? மேலதிகாரிக்கு மரியாதை கொடுக்கத்தெரியல்ல; கண்டவனையும் கூப்புடுற; ஒழுக்கமில்லாத உன்னை மூன்று மாதத்திற்கு வேலையிலிருந்து நிப்பாட்டுறன்" கத்தினார் சின்னத்தொர.

அப்படியே தலையில இடிவிழுந்தது போல தலை சுற்றியது காமாட்சிக்கு; இதயம் படபடத்தது; நாக்கு வரண்டது; கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது; உலகம் இருண்டது. எல்லாம் தங்கராசு எனும் நரியின் வேலையென்று அவளுக்குத்தெரியும். இருந்தாலும் ஏழைப் பேச்சு அம்பலம் ஏறாது என்பதை அனுபவவாயிலாக உணர்ந்தவள் அவள், அப்படியே வீடு நோக்கி நடந்து வந்து கூடையையும், படங்கையும் கழற்ற மறந்து வீட்டு வாசற்படியிலேயே சாய்ந்து உட்கார்ந்து விட்டாள்.

"அம்மா! என்னம்மா ஒரு மாதிரி இருக்கிற? சோறு போடும்மா" என்றபடி வீட்டுக்குள் நுழைந்தாள் லக்ஷ்மி.

"நாளக்கி கண்டியில செமினார்; எப்படியாவது போகனும்; ஆயிரம் ரூபா வேணும்மா"

மகள் கேட்க மௌனமாக இருந்தாள் காமாட்சி "என்னம்மா ஒன்னும் சொல்ல மாட்டேங்கிற காசு கொடுக்காட்டி நான் போக மாட்டேன்" சற்று அழுகை மூலமாக ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள் லக்ஷ்மி.

"நீ இனி பாடசாலைக்குப் போகாத; காமண்ட்ஸ்ல வேல கேக்கிறேன்; போகத் தயாராகு".

வானம் இடிந்து தலையில் விழுந்தது போலாகியது லக்ஷ்மிக்கு. ஒன்றும் விளங்கவில்லை. அம்மா ஏதோ கஸ்டத்துக்குத்தான் சொல்லியிருப்பாள்; இரண்டு மூனு நாளாக சரியாகும் எனக் காத்திருந்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவளுக்கு ஏதோ ஒன்று மட்டும் புரிந்தது போலிருந்தது.

பரீட்சைப் பெறுபேறு வெளியாகிவிட்டது. எல்லோரும் ஆர்வத்துடன் பாடசாலைக்கும், இன்டர்நெட் கபேக்கும் ஓடுகின்றனர். வெளிநாட்டில் இருந்து அம்மா, வேலு மாமா வீட்டிற்கு கதைத்து தீர விசாரித்துக் கொண்டிருக்கிறார். சுதாவும் எல்லோரினதும் நம்பிக்கையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்புடன் நிற்கிறாள். உள்ளுக்குள் படபடப்புடன் பெறுபேற்றை நேரடியாகப் பார்த்தவள் அசைவற்று அப்படியே நின்றுவிட்டாள்.

கணேஸா! ஒன்ட வீட்டுக்கு முன்னால ஏதோ கூட்டம்; என்னன்னு தெரியாது; டொக்டர் வரும்போது பார்த்தேன்; உழவு இயந்திர ஓட்டுனர் ராமுவிடம் கூறியதும், ராமு அவசர அவசரமாக வீட்டை நோக்கிச் செல்லத் தொடங்கினான் .

ஒரு அறையின் கதவை அடைத்து திரும்பவும் வெளியே வரவேயில்லை. யன்னல் வழியே தம்பி கண்ட காட்சியை

"அக்கா ஊஞ்சலாடுறா! அக்கா நானும், நானும்" என தம்பி கத்தியதைக் கண்ட பக்கத்துவீட்டு மூக்காயிக்கிழவி,

"என்ன ராசா" என வந்து பார்த்து "ஐயோ! ஐயோ!" என்று கத்தத் தொடங்கிவிட்டாள். ஊரார் கதவை உடைக்க, உயிரற்ற பிணமாகத்தான் சுதா கீழே இறக்கப்பட்டாள். "சுதா" கணேஷனின் அழுகை ஓலம் அந்த மலைப்பிரதேசமெங்கும் பரவியது. எல்லோரது எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்ய முடியாத சுதாவுக்கு வாழ்வு கசந்து விட்டது.

மறுநாள் பத்திரிகையில் கொட்டை எழுத்தில் மலையகத்தின் வெவ்வேறு இடங்களைச்சேர்ந்த மாணவிகள் இருவர் தற்கொலை என்ற தலைப்பில் அவ்விருவரும் முன்பக்கத்தை அலங்கரித்தனர்.

(அடியோடு அழிந்து போவதற்கு ஆலமரமல்ல பெண்கள்; வெட்ட வெட்டத் தழைக்கின்ற வாழைமரம் அவர்கள்.)

மொ. சுப்ஹான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அபிவிருத்திக்கான ஒரு திறவு கோல் அமைதியும் ஆகக்கத்திறனும் அமைந்த வாழ்க்கைக்கான அடிப்படை என்பதுடன், அது அனைவருக்கும் சமத்துவமாயக் கிட்ட வேண்டிய ஓர் உரிமை. (ஐக்கிய நாடுகள் மனித உரிமை உறுப்புரிமை )

மாற்றம் ஒன்றே நிலையானது எனும் அடிப்படையில் இயங்கும் உலகத்தில் மேற்சொன்ன உன்னத நோக்கமானது, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் செயன்முறையின் வெற்றியிலும், வினைத்திறனிலேயுமே தங்கியுள்ளது . கல்வியின் இறுதி நோக்கம் மாணவர்களிடம் பூரண ஆளுமை விருத்தியையும், சமூகமயமாதலினூடாக நாட்டிற்கும், சமூகத்திற்குமுரிய தேர்ச்சி மிகு நற்பிரஜையையும் உருவாக்குவதாகும். இவ் உயரிய பணியின் வெற்றி ஆசிரியர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டள்ளது. மாணவரது செயலாற்றுகையின் விருத்தி ஆசிரியர்களின் செயற்றிறனின் விருத்தியிலேயே தங்கியுள்ளது.

கற்பித்தல் ஓர் அறிவியலாகவும், கலையாகவும் எடுத்து நோக்கப்படுகின்றது. கோட்பாடுகள் எண்ணக்கருக்கள் மாதிரிகள், கற்பித்தல் முறைகள், முறைமைகள், கற்பித்தல் நுட்பங்கள், துணைச்சாதனங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல், பிரயோகித்தல் தொடர்பான ஆசிரியர்களின் தனித்தன்மை அல்லது தனியாள்
திறன்களினடிப்படையே கற்பித்தல் எனப்படுகனிறது. மாணவர்கள் விரும்பும் வகையில் கற்பித்தலை மேற்கொள்ள ஆசிரியர்கள் பல திறன்களைத் தன்னில் வளர்த்துக்கொள்ள வேண்டியவராகின்றார். இதற்கு நல்லதொரு வாய்ப்பை வழங்கும் அம்சமாகக் கற்பித்தல் மாதிரிகள் விளங்குகின்றன.

நாம் காணாத ஒன்றை அல்லது நேரடியாக அனுமதிக்காத யாதாயினும் ஒர் விடயத்தை விளங்கிக்கொள்ள உதவுவதே மாதிரியாகும். {Dorin,Dmmin & Gable 1990} இம்மாதிரிகள் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கற்பித்தல் உத்திகளுடன் கலைத்திட்ட அமைப்புகளையும் கல்வி இலக்குகளையும் ஆசிரியர்களுடன் தொடர்புபட வைக்க உதவுபவனவாய் அமைகின்றன
ஓர் சிறந்த ஆசிரியர் மாணவனின் இயல்பை நன்கு உணர வேண்டும் plato

"குழந்தை ஓர் புத்தகம்; அதன் ஒவ்வொரு பக்கத்தையும் ஆசிரியர் கற்க வேண்டும" (Roussauo) போன்ற கூற்றுக்கள் ஆசிரியர் மாணவனின் நிலையறிந்து தம் கற்பித்தலைத் திட்டமிட வேண்டும் என்பதனை உணர்த்துகின்றன. மாணவர்கள் எவ்வாறு அதிக பயனுறுதியுடன் கற்பதற்கு தம் கற்பித்தலை அதிகரிக்கலாம், அதிக வினைத்திறனுடன் கற்பதற்கு எவ்வாறு சகல மாணவர்களையும் வழிப்படுத்தலாம் என்பதற்குப் பல்வேறு வாண்மைசார் விருத்தி வழிகளைக் காட்டுபவனவாக இக்கற்றல் கற்பித்தல் மாதிரிகள் அமைகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் ஆசிரியர்கள்,

*பொருத்தமான தத்துவ உளவியல் சிந்தனைகளுடன் இணைந்த வகையில் தமது கற்பித்தலில் ஈடுபடலாம்.

*தகுதிவாய்ந்த கோட்பாடுகளின் அடிப்படையில் கற்றல் கறபித்தல் செயன்முறையில் ஈடுபடலாம்.

*தொடர்ச்சியான அனுபவங்களினூடாகப் புதுப்பிக்கப்படும் கற்பித்தலை மேற்கொள்ளலாம்.

* பொருத்தமானதும் இசைவானதுமான வகுப்பறைச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

*வினைத்திறனான கற்பித்தல் மாதிரிகளை, வினைத்திறனான முறையில் வகுப்பறைகளில் காலப்பொருத்தப்பாட்டுடன் கற்பிக்கலாம்.

கற்பித்தல் மாதிரிகளைப் புரூஸ் ஜொய்ஸ் மற்றும் மர்ஷா வில் போன்ற ஆய்வாளர்களின் வகைப்படுத்தலுக்கு அமையப் பின்வருமாறு குறிப்பிடலாம்
(Models of Teaching)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (Partners in Learning)<br>அ. உடன்பாடான பரஸ்பர சார்பு<br>(Positive interd pungence)<br>ஆ. கட்டமைப்பு விசாரணை<br>(Structured inquiry)<br>டேவிட் ஜோன்சன், ரோசர் ஜோன்சன் மார்க்கரிடா கல்ரோசன் எலிசபத் கோஹென நெஸட் ஸ்லேவின் | ஒத்துழைத்து ஒன்றிணைந்து கருமமாற்றுவதற்காகப் பல்வேறு உத்திகளை விருத்தி செய்யும் முறையாகும்.<br>மாணவர்கள் ஒன்றிணைந்து செயற்பட ஒத்துழைப்பைத் தரும்.<br>* கலைத்திட்டம் சகல வயதுப் பிரிவுக்கும் பொருந்தும்.<br>* மாணவர் செயற்பாட்டுத் திறன் அதிகரிக்கும். |
| 02. குழுப் பரிசோதனை<br>(Group Investigation)<br>ஜோன் டூயி, ஹெப்பே திலன், சுலோமா சாரன் புருஸ் ஜொய்ஸ் | *கற்றல் சமூக விருத்தியின் நேரடி வழியாகும்.<br>*சூழ்நிலை, வயது, முதிர்ச்சி என்பன இங்கு பிரதானமாகக் கொள்ளப்படும்.<br>*பிரச்சினையை வரையறுத்து, தகவல், கருத்துப் பரிமாற்றம் ஊடாகக் கற்றல் திறன் வளர்க்கப்படும். |
| 03. வகிபாகமேற்றல்<br>(Role Play)<br>பன்னிசாப்படெல் | * மாணவர் தம் சமூக விழுமியத்தை இலகுவாக அறிய உதவும்; சமூக வழிநடத்தலில் பங்கேற்கும் திறன் வளர்க்கப்படும். |
| 04. சட்ட ரீதியான விசாரணை<br>(Jurisprudential Inquiry)<br>டொனால்ட் ஒலிவர்,ஜேம்ஸ் ஷேவர் | * சமூக, தேசிய, சர்வதேச மட்டங்களில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து கற்கப் பயன்படும் முறையாகும்.<br>* தனியாள் கற்கை முறையாகப் பிரதானமாகப் பயன்படும். |

**02. தகவல் ஒழுங்குபடுத்துகை மாதிரிகள்**

தகவல் பெறல் ⟶ ஒழுங்கமைத்தல் ⟶ வினாக்கள் உருவாக்கல் ⟶ விடைகாணல் ⟶ எண்ணக்கருஉருவாக்கம் ⟶ அவற்றைக்கடத்தல் எனும் அடிப்படையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள உதவும் மாதிரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாதிரியும், விருத்திசெய்தலும் | விவரணம் |
|---|---|
| 01. உய்த்தறி சிந்தனை மாதிரி ஹில்டா தபா, புரூஸ் ஜெய்ஸ் | வகைப்படுத்தல் சார்பானது |
| 02. எண்ணக்கரு அடைதல் மாதிரி (ஜெரோம் புருனர், பிரைட் லைட் டென்னிசன், புரூஸ் ஜொய்ஸ்) | சிந்தித்தல் தொடர்பான ஆய்வின் அடிப்படையிலானது |
| 03. நினைக்குறிப்பு மாதிரி (மைக்கல் பிரஸ்ல்,ஜொய்ஸ்லிவினி ரிச்சட் அன்டர்சன்) | தகவலை தன்மயமாக்கல், நினைவிற் கொள்ளல் அடிப்படையானது. |
| 04. விஞ்ஞான ரீதியான விசாரணை (ஜோசப் ஸ்வாப்) | மாணவரது அனுமான ஆற்றல் விருத்தி சார்பானது. |
| 05. விசாரணைப் பயிற்சி மாதிரி ( ரிச்சட் சஜ்மன், ஜொவார்ட் ஜோன்) | கருதுகோலைப் பொய்ப்பிக்கும் பரிசோதனை அடிப்படையானது. |
| 06. முன்னேற்றங்கான ஒழுங்குபடுத்தல் ( டேவிட் ஒஸ்பெல், லவீடன்) | விரிவுரை, வாசிப்பு மூலம், கிரகித்தல் சார்பானது |
| 07. கூட்டு வலிமை ( பில் கோக்டன்) | பல்வேறு அறைகளின் புதிய போக்குகளினடிப்படை. |

**03. தனிப்பட்ட மாதிரித் தொகுதிகள்**
தனியாள் புலக்காட்சியினூடாகக் கற்பித்தலை ஆரம்பிக்க உதவுவது.

| | |
|---|---|
| 01. உய்த்தறி சிந்தனைகளின் மாதிரி (தபா) | விஞ்ஞான ஆய்வுகளினடிப்படையிலானது |
| 02. நேரிடையில் கற்பித்தல் மாதிரி (கார்ல் ரொஜர்ஸ்) | விஞ்ஞான ஆய்வுளினடிப்படையிலானது. |
| 03. நேரிடையில் கற்பித்தல் மாதிரி (கார்ல் ரோஜர்ஸ்) | ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்புப் பண்பு விருத்தியை அடிப்டையாகக் கொண்டது. |
| 04. சுயமரியாதையை மேம்படுத்தும் மாதிரி (ஏப்ரகாம் மாஸ்லோ) | சுயமதிப்பு சுய யதார்த்தத் தன்மையைக் கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்டது. |

**04. நடத்தைசார் மாதிரிகள்**
சமூகக்கற்றல் கோட்பாடு நடத்தைச் சீர்ப்படுத்தல் போன்ற கோட்பாடுகளை அடிப்படையாக்க கொண்ட மாதிரியாகும் அனுபவத் தொடர்பாடல் மூலமான கற்பித்தலுக்கு இம்முறை உதவும்.

| மாதிரியும் விருத்தி செய்தோரும் | விவரணம் |
|---|---|
| 01. பாண்டித்திய கற்றல் மாதிரி (பென்ஜமின் புளும், ஜேம்ஸ்புளொக்) | பாடவிடயம், பல உபஅலகுகளாகப் பிரிக்கப்பட்டுப் படிப்படியாக மாணவர் பாண்டித்தியமடைவதை அடிப்படையாகக் கொண்டது. |
| 02. நேரிடையான போதனை மாதிரி ( டொம் குட், ஜெரி புரோபி, கார்ல்ஸ் கிரீடர் சிங்கி என்லர்மன், வெஸ் பேக்கர்) | கற்றலைச் சாத்தியப்படுத்த பலதரப்பட்ட வழிகாட்டல் குறிப்புகளுடன் வெளிப்படையான ஆய்வுகளின் அடிப்படையிலான கற்பித்தல் மாதிரியாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 03. போலச் செய்தல் மாதிரி (கார்ல் ஸ்மித், மேரி ஸ்மித்) | கற்பித்தல் சாதனங்கள் மாதிரிகளின் அடிப்படையிலானது. |
| 04. சமூகக்கற்றல் மாதிரிகள் (அல்பேர்ட் பற்றுரா, கால் தொரிசன், வெஸ் பெக்கர்) | சூழலில் இருந்து கிடைக்கும் தூண்டியை அறிவாற்றல் செயன்முறையின் பால் வழிப்படுத்தி நுண்மதியின் ஊடாக நோக்கி வியாக்கியானம் செய்தலின் அடிப்படையிலானது. |
| 05. திட்டமிட்ட நிகழ்ச்சி மாதிரி (B. F.ஸ்கின்னர்) | நிகழ்வுகளை ஒழுங்கு செய்து பங்காளிளாக்கி அனுபவப்பகிர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். |

எனவே ஆசிரிய வாண்மை விருத்திக்கு அடிப்படையில் அமையும் பிரதான உந்து சக்தியாக விளங்கும் கற்பித்தல் மாதிரிகளை உரிய முறையில், காலச் சூழ்நிலை, இடம், சமூகச்சூழல், மாணவர்தன்மை, மாணவர்தேவை என்பவற்றை அறிந்து பயன்படுத்துவோமாயின் சமூகத்தின் எதிர்பார்ப்பையும் அபிமானத்தையுப் பெற்ற நட்சத்திரமாக உருவாகலாம் என்பதில் ஐயமில்லை.

உசாத்துணைகள் :-


1. சமகாலக்கல்வி வளர்ச்சி — பேராசிரியர் சபா ஜெயராசா
2. கல்வியும் மனிதவள விருத்தியும் — பேராசிரியர் சோ. சந்திரசேகரன், பேராசிரியர் மா . சின்னத்தம்பி
3. Models of Teaching — Bruce Joyce
4. Focus — யாழ் பல்கலைக்கழகச் சஞ்சிகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனைகள்

1. "மன்னிக்கவும், நன்றி கூறவும் தெரிந்து கொண்டுவிட்டால், நாம் மகிழ்ச்சியைத் தேடி ஓட வேண்டியதில்லை- அதுவே நம்மைத்தேடி ஓடி வரும்."
-ஜோசப் நியூட்டன்-

2. " உலகத்தில் மக்கள்பால் அன்பு கொள்பவனே உண்மையாக வாழ்பவன் ஆவான்"
- அந்தோணி -

3. " மனிதனுக்கு நீ தேவைப்படுகிறாய்; மக்களுக்கு நீ நெருக்கமாய் உள்ளாய் என்ற உணர்வே இன்பங்களில் தலையானது. மகிழ்ச்சியில் நிலையானது."
- மார்க்கிம் கார்க்கி-

4. " புத்திசாலி பேசுவதற்கு முன் என்ன பேசுகிறோம், எங்கே பேசுகிறோம், எப்பொழுது பேசுகிறோம், என்பதை யோசித்துவிட்டே பேசுவான்."
- ஆம்ரோஸ்-

5. " உங்கள் வாழ்வின் இலக்கை முதலில் உங்கள் மனதின் அகக்காட்சியில் தெளிவாகக் காணுங்கள்."
-ராஜாஜி -

6. " மகிழ்ச்சி பொங்குகின்ற முகத்தைக் கொண்ட ஒருவர் வீட்டினுள் நுழைந்தால், உடனே அந்த வீட்டில் ஒரு ஒளி தோன்றி விடுகின்றது."
-ஸ்டீவன்சன்-

7. " நீ கோபங் கொள்ளும் ஒவ்வொரு நிமிடமும் அறுபது வினாடி மகிழ்ச்சியை இழந்து வீடுகிறாய்"

8. " சில நேரங்களில் வாய்திறந்து பேசுவதைவிடப் பேசாமல் இருப்பதே மிக்க பயனளிக்கலாம்."
-காந்தியடிகள்-

9. " மகிழ்ச்சி நம் வீட்டுக் கூடத்திலேயே இருக்கிறது. அதை மற்றவர்களின் தோட்டத்திலிருந்து பறித்துக் கொள்ள வேண்டியதில்லை."
-ஜெரால்ட்-

10. "செய்யப்பட வேண்டிய செயல்களை நாம் தீர்மானிக்க, எம்மால் செய்யப்பட்ட செயல்கள் எமது ஆளுமையைத் தீர்மானிக்கிறது."
-வெர்ன்ஸ்-

11. "வாழ்க்கையில் நிகழ்ச்சிகள் எத்தகையது என்பதை விட, அவைகளை நாம் எப்படி ஏற்றுக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே இன்பம்."
-ஹம்போல்ட்-

12. "மனித சமூகம் அனைத்தினதும் நன்மைக்காகவே நாம் பிறந்துள்ளோம் என்று நாம் கருத வேண்டும்."
-செனிகா-

13. " நேர்மை என்ற முத்திரை பதித்த முகங்களாக நமது முகங்கள் ஒளி வீசட்டும்; அதுவே ஒளி வீசும், பிறரை மயக்கும் உண்மையான அழகு."
-வில்லிங்டன்-

14. " ஒருவர் தனக்குள் உருவாக்கக்கூடிய மிகப்பெரிய சக்தி இறைவனை நோக்கிய துதித்தல் ஆகும். பூமியின் ஈர்ப்புச்சக்தி போல, அது மிகவும் வலிமையான விசை ஆகும்."
-டாக்டர் கரல் -

15. " உலகின் எல்லாப் பாகங்களும் விருத்தியடைந்து விட்டன; மனிதனின் தொப்பிகளுக்குக் கீழ் உள்ள பாகம் மட்டும் விருத்தி அடையவில்லை. "
-பெர்னாட்ஷா-

16. " அறிஞனாக உன்னை உயர்த்திக் கொள்வதை விட, நல்ல காரியங்களைச் செய்து முடிக்கும் செயல் வீரனாக உன்னை உயர்த்திக் கொள்வது மேலானது."
-கென்கெசி-

"

17. " சிறப்பு என்பது ஆற்றலைச் சரியானவழியில் பயன்படுத்திக்கொள்வதில் தான் இருக்கிறது."
-பீச்சர்-

18. " கோபம் என்னும் அமிலம் பயன்படுத்தப்படும் இடத்தை விட, அதை வைத்துக் கொண்டிருக்கும் கலத்தையே பெரிதும் நாசப்படுத்திவிடும்."
-கிளென்டல்-

19. " அமைதியான உள்ளமே மகிழ்ச்சிக் கடலின் எல்லை."
-பெர்னாட்ஷா-

தொகுப்பு:-திருமதி வி.புஸ்பலதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மற்றவர் மீது காட்டும் அதீதமான விருப்பமே அன்பாகும். அன்பு என்பது எமது பிறப்புரிமையாகும். இது எம் ஒவ்வொருவரிடமும் ஊற்றெடுக்கின்றது. அன்பின் மூல ஊற்றாக இருப்பவர் இறைவனே ஆவார். மனிதத்துவத்தின் அடிப்படையே அன்பாகும். அன்பு அனைத்தையும் விட நித்தியமானதும், உன்னதமானதும், மெய்மையானதுமாகும்.

கிறிஸ்தவ அன்பு தனித்துவம் வாய்ந்ததாகும். அன்பின் சிறப்பு, பண்புகளை திருவிவிலியம் பின்வருமாறு கூறுகிறது. அன்பு பொறுமையுள்ளது, நன்மைகள் செய்யும், பொறாமைபடாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலம் நாடாது. தீங்கு நினையாது, எரிச்சலுக்கு இடங்கொடுக்காது, தீவினையில் மகிழ்வுறாது, உண்மையில் அது மகிழும்.

"அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; எதிர்நோக்கி இருக்கும்; மனஉறுதியாய் இருக்கும்."

ஆகவே, மனிதத்துவத்தை எமது வாழ்வில் கடைப்பிடிக்க அன்பு இன்றியமையாதது, அன்பு இறைவனின் கொடையாகும். அன்பு எம்மை முழுமைப்படுத்துகிறது. எமது அன்பைப் பிறருடன் பகிர்ந்தும், பிறரின் ஆபத்துக்களில் உதவியும், துன்ப துயரங்களில் பங்கெடுத்தும் வாழ்ந்து அன்பின் ஊடாக மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புவோம்.

ஒவ்வொரு உயிரும் இறைவனின் அன்பின் கொடையாகும். தாயின் வயிற்றில் கருவாகும்போதே இவ்வன்பின் பிணைப்பு ஆரம்பமாகிறது. அத்தோடு தந்தையின் பாசமும் சேர்ந்தே கலந்து விடுகிறது. இவ்வாறு உருவாகும் கருவானது, குழந்தையாக இப்பூமியில் தவழும் போது ஏனைய உறவுகளோடு அன்பில் இணைகிறது. அன்பாலேயே இணைந்து, பிணைந்து, பிறந்து குழந்தையானது தனது வாழ்நாளில் பல்வேறு பருவங்களை எட்டிப் பார்த்து வளர்கிறது. இவ்வாறு குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம், கட்டிளமைப்பருவம், முதுமைப்பருவம் எனப் பல பருவங்களைக் கடக்க வேண்டிய மனிதனாக வளர்கிறது.

குழந்தைப்பருவத்தில் பெறக்கூடிய அன்பானது, சுற்றம் சூழ உறவினர்களுடைய அன்பையே பெறுகிறது. அதாவது தாய், தந்தை மற்றும் தாத்தா, பாட்டி, மாமா, மாமி எனத் தனது அன்பின் பகிர்வு தொடர்ந்து கொண்டே செல்லும்.

இக்குழந்தையானது, பிள்ளைப்பருவத்தை எய்தும் போது ஒரு மாணவனாகப் பாடசாலையில் காலடி வைக்கிறான். அங்கு இவனது அன்பானது ஆசிரியர், மாணவர், சகபாடிகள், சமூகம், என நீண்டு செல்கிறது. இப்பிள்ளைப் பருவத்தில் மிகவும் சுதந்திரமாகவும், சந்தோசமாகவும் இவ்வன்பை அனுபவித்துப் பாடித் திரியும் பறவைகளாகப் பறந்து உலாவி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இப்பிள்ளையானது, கட்டிளமைப் பருவத்தை அடையும் போது எதிர்ப்பாலாருடனான கவர்ச ஏற்படுகிறது. இவ்வாறான பருவத்திலுள்ள பிள்ளைகளைப் பெற்றோரானவர்கள் சகோதரத்துவத்துட கூடிய நட்புறவோடு அணுகி, இவர்களை நல்வழிப்படுத்தி சிறந்த அன்பின் பிணைப்புக்குள் கொண வரல் வேண்டும்.

இவ்வாறே, இப்பிள்ளை சிறந்த அன்பின் பிணைப்புக்கு வளர்ந்து வந்து தனது முதுமை பருவத்தையடையும் போது புனிதமான அன்பான இறைக்குடும்பத்தை வழிநடத்தும் ஆளுமையை பெற்று விடுகிறது. முதுமைப் பருவத்தையடையும் ஒவ்வொருவரும் இறைவனுடைய அன்பிலே இணைய ஆசைப்படுகிறார்கள். அதுமட்டுமன்றி, எமது சமூகத்தில் அன்புக்கா ஏங்கித்தவிப்பவர்களுக்கு நாம் அன்பைக் கொடுக்கக் கடமைப்படுள்ளோம்.

அதாவது அநாதைகள், அகதிகள், அங்கவீனர்கள், தாழ்த்தப்பட்டோர், நோயாளிக கைவிடப்பட்டோர், பசியால் வாடுவோர், மரணத்தோடு போராடுவோர், அநீதி இழைக்கபட்டோ வாழ்வில் விரக்தியடைந்தோர், ஆகியோர்களே அன்பை எதிர்பார்ப்பவர்களாக இருக்கிறார்க இறைதந்தை எமக்குத் தந்த அன்பை இவர்களுக்காக நாம் கொடுக்கவேண்டும்.

,இவ்வாறானவர்கள் மட்டுமல்ல, இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் தனது வாழ்நாளி எவ்வாறான அன்பின் பிணைப்பிற்குள் சிக்கி வாழ்ந்தாலும், இறுதியாக இவர்கள் தேடும் அன்பான அதாவது மரணத்தின் போது இறை அன்பாகவே இருக்கிறது.

ஆகவே, அன்பின் ஊற்றாக இறைவனே வியாபித்திருக்கிறார். இறைவன் அளவற்ற அன்பாள அன்போடு வாழவே இறைவன் எம்மை அழைத்துள்ளார். எமது சமூகத்தில் அன்பு மறுக்கப்படு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இடத்திலும் நாம் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம்.

திருமதி எலியாஸ் கரோலினா.
நு/நாவலர் த.ம.வி.
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களே,
நீங்கள்
ஒரு காலத்தின் கண்ணாடி
உங்களில் முகம் பார்த்து
மினுக்கிக் கொண்டவர்கள் உலகில்
எத்தனை கோடி!

வரலாற்றில் நீங்கள்
ஓர் ஏடு
முழு வரலாற்றிற்கும்
நீங்கள் தான்
வெளிச்சக் கூடு.

உங்களது போதனைகள்
மறக்கப்படுவதில்லை
உலகமெனும் மேடை
உங்களால்
அலங்கரிக்கப்படுகிறது

உங்களது பாதச்சுவடுகள்
புழுதியில் மறைவதில்லை
மாறாக விதைக்கப்படுகிறது
அவை
மாணவ விருட்சங்களாக
வளர்ந்து
மலர்ந்து மணம் பரப்புகிறது.

உங்களது ஓசைகள்
காற்றில் கரைந்து விடுவதில்லை,
காற்றுக்கும் அது தான்
சுவாசம்

உங்களது சேவைக் கரங்கள்
கட்டப்படுவதில்லை, அது
எட்டாத பிரபஞ்சத்தையும்
கடந்து கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கள் சிலையாகவும்,
கனவுகள் நனவாகவும்
நிலை பெற
கற்றுக் கொடுப்பவர்கள் நீங்கள்
உங்கள் கரம் பட்டால்
முடமும் நிமிர்ந்து விடும்.

கம்பனும், பாரதியும்,
வள்ளுவனும், வான்மீகியும்
பிளேட்டோவும், சோக்ரடீசும்
காந்தியும், கருணை
தெரேசாவும்
ஜீவக் கலையோடு நிலை பெறுவதும்
உங்களால் தான்.

சிதைவுகளைச் சீர்படுத்தி
வதைகளை வேரறுத்து
புது வழி சமைப்பதும்
நீங்களே,
அணுவுக்குள் அணுவாய்
அறிவுக்குள் அறிவாய்
உயிருக்குள் உயிராய்
இருப்பதுவும்
நீங்களே தான்.

உங்களுக்குக் காவியங்கள்
எழுதப்படாமல் இருக்கலாம்
ஆனால்!
மாணவரின் உள்ளங்களில்
நீங்கள் ஓர்
ஓவியம்

உங்களுக்கு ஆலயங்கள்
எழுப்பப்படாமல் இருக்கலாம்
ஆனால்!
மாணவரின்
மனக்கோயில்களில் நீங்களே
தெய்வங்கள்
கருணைக்குள் கருணையாய்
கடவுளுக்குள் கடவுளாய்
அறிவில் அமுதசுரபியாக
தெளிவில் திறந்த வானமாக
ஒழுக்கத்தில் இமயமாய்
இருக்க வேண்டுமென
உலகம் எதிர்ப்பார்ப்பதுவும்
உங்களையே
நாமும்
எதிர்பார்ப்பதும் அதனையே

ஆசிரியர்களே!
நீங்கள் ஓர் காலத்தின் கண்ணாடி
உங்களில் முகம் பார்த்து
மினுக்கிக் கொண்டவர்கள் உலகில்
எத்தனை கோடி

திருமதி. நிர்மலா பத்மநாதன்
(விரிவுரையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைமட்டக் கணிப்பீட்டின் முக்கியத்துவம என்ன? என்று ஆராய்வதற்கு முன்பு கணிப்பீடு என்றால் என்ன? என்று பார்ப்போம்.

கணிப்பீடு என்பது பாடசாலையில் நடைபெறும் ஒரு செயற்பாடாகும். இது வகுப்பறையில் அல்லது வகுப்பறைக்கு வெளியில் மாணவர் கற்றலில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களின் பலம், பலவீனங்களை இனங்கண்டு பலவீனத்தை நீக்கி அவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதாகும். இந்தக் கணிப்பீடு பாடசாலையில் இரண்டு வகையில் அமையலாம்.

1) தொடர்க் கணிப்பீடு
2) இறுதிக் கணிப்பீடு

தொடர்க் கணிப்பீட்டை எடுத்துக் கொண்டால், இது முறையாகவும் முறைமையில் என இரண்டு வகையில் நடைபெறுகிறது. முறையாக எனும்போது வகுப்பறையில் மாணவர் கற்றலில் ஈடுபட்டிருக்கும் போது கணிப்பீடு செய்வதாகும். இது மாணவருக்குத் நாம் கணிப்பீட்டில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற உணர்வுடன் மேற்கொள்வதாகும். ஆனால், முறைமையில் கணிப்பீடு என்பது மாணவருக்குத் தெரியாமலேயே மாணவரைக் கணிப்பீடு செய்வதாகும். இது கல்வி கற்றலின்போது, சிரமதானத்தின்போது, மன்ற செயற்பாடுகளின்போது மாணவருக்குத் தெரியாமலே நாம் அவர்களைக் கணிப்பது ஆகும். இங்கு தொடர்க் கணிப்பீட்டின் மூலம் மாணவரைத் தொடர்ந்து கணிப்பிட்டுக் கொண்டே போகலாம்.

இறுதிக் கணிப்பீடானது, மாணவரின் அடைவைத் தெரிந்துகொள்வதற்கு வருட இறுதியில் நடாத்தப்படுவதாகும். இது பெரும்பாலும் எழுத்துப் பரீட்சையைக் கருவியாகக் கொண்டே அமைகிறது. முன்னர் காணப்பட்ட கணிப்பீடானது, மாணவரின் அறிவு, திறனை மதிப்பிடுவதாகவே அமைந்தது. ஆனால் இன்றைய கணிப்பீடானது மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு மூன்றையும் கணிப்பிடுவதாகவும், அவற்றை விருத்தியடையச் செய்வதாகவும் காணப்படுகிறது.

கணிப்பீட்டு வகைகள்

1)ஒப்படை

2)செயற்றிட்டம்

3)ஆய்வு

4)புலனாய்வு

5)அவதானிப்பு செயற்பாடு

6)கண்காட்சி முன்வைத்தல்

7)களப்பயணம்

8)குறு எழுத்துச் சோதனை

9)கட்டமைப்புக் கட்டுரை

10)திறந்தநூல் பரீட்சை

11)ஆக்கச்செயற்பாடு

12)கேட்டல் சோதனை

13)பேச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14)சுய ஆக்கத்தொகுப்பு

15)குழுச்செயற்பாடு

16)எண்ணக்கரு விளக்கப்படம்

17)இரட்டைப்பதிவு நாட்குறிப்பேடு

18)சுவரேடு

19)வினாவிடை நிகழ்ச்சிகள்

20)விவாதம்

21)கலந்துரையாடல்

22)செயலமர்வு

23)உடனடி சொற்பொழிவு

24)பங்கேற்று நடித்தல்

25)தவணைப்பரீட்சை

26)வேறு

இவற்றினைக் கொண்டு மாணவரின் முன்னேற்றம் பற்றி ஆசிரியர் அறிந்து கொள்வார். தனது கற்பித்தலைச் சிறப்புடையதாக மாற்றிக்கொள்வார். மாணவர் தன்னைப் பற்றிய ஒரு சுயவிளக்கத்தினைப் பெற்றுக்கொள்வார். தனது கற்றலை உயர்த்துவதற்குத் தன்னால் முடிந்த முழுப்பங்கினையும் எடுத்துக்கொள்வார்.

மாணவரின் தவறான கருத்துக்கள் ஆராயப்பட்டு அதற்கான விளக்கத்தினை அவர்கள் பெற்றுக் கொள்ளவும் இந்தக் கணிப்பீடு உதவுகின்றது. இங்கு மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு மூன்றும் கணிக்கப்படுகிறது. இந்த வகையில் தசை நார்களின் இயங்கும் திறன், கருவிகளைக் கையாளுதல், ஒரு பொருளைப் படைத்தல், இராகத்துடன் பாடுதல், விளக்கமளித்தல், ஒன்றைப் பகுதிகளாக்குதல், (தொகுதி ஒன்றை) பகுதிகளைத் தொகுதியாக்கல் போன்ற பல்வேறு திறன்கள், மாணவரிடம் ஏற்படுவதற்கு இந்தக் கணிப்பீடு இன்றியமையாததாக விளங்குகின்றது. தேர்ச்சி மட்டத்தில் சிறந்து விளங்கும் பிள்ளைகள் அவர்களை ஆசிரியர்கள் கணிப்பீட்டுக்கு உட்படுத்தும் சந்தர்ப்பங்களில் விருப்பத்துடன் செயற்படுவதனை நாம் காணலாம். இவ்வாறு இதில் ஈடுபடும் பிள்ளைகள் இவற்றைத் தமது நாளாந்தக் கருமமொன்றாக நினைத்துச் செயற்படுவர். இதனூடாகப் பிள்ளைகளின் ஆற்றல்களும், திறன்களும் வளர்த்துச் செல்லப்படுகின்றன.

மேலும் கணிப்பீடு அம்சங்களானது, ஆசிரியர் மையக் கல்விக்கு இட்டுச்செல்லாமல், மாணவர் மையக் கல்விக்கு இட்டுச் செல்வதாய் உள்ளது. இதனால் வகுப்பறையானது உயிரோட்டமுடைய வகுப்பறையாகக் காணப்படும். ஆசிரியர் மாணவரிடையே தொடர்பு சிறந்ததாகக் காணப்படும். மாணவர் தயக்கமின்றி, பயமின்றி, ஆர்வமாகக் கற்றலில் ஈடுப்படுவதற்கு உதவும். இதனால் மாணவரிடம் முன்வருதல், தலைமைத்துவம், இன்முகத்துடன் கதைத்தல், மற்றவர்களை மதித்தல், சுற்றாடலைப் பாதகாத்தல் போன்ற சிறந்த பண்புகள் வளர்வதற்கு பாடசாலை மட்டக் கணிப்பீடானது உதவியளிக்கிறது எனலாம்.

S.P.குணசேகரன்
நு/எபட்ஸ்போட் த.வி
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படுவோம்...

புறப்படுவோம் நாமும்
புதுயுகம் படைத்திடவே
கடந்த காலமதைக்
கருத்தில் கொள்ளாமல்
நிகழ் காலமதில்
நிகழ்த்துவோம் புதுமுயற்சி ...!

களம் அமைக்கும் கல்விதனைக்
கருத்துடனே கற்றிட்டால்
காலமெல்லாம் கவலையின்றி
வாழ்ந்திடலாம்
கருத்துடனே
ஏற்றம் பெற்று

காடு களனியெலாம்
கஷ்டப்பட்டு மேலேறி - எம்
பெற்றோர் பட்ட துன்பம்
துடைத்திடலாம் - நீயும்
துன்பங்கள் மறந்து - இன்பமாய்
வாழ்ந்திடலாம்..!

ஆசிரியர் அடிபணிந்து
பெற்றோர் சொல்கேட்டு
இறை பத்தியுடன் - நீ
இறைஞ்சியே வரமும் கேட்டு
இன்புறலாம் இத்தரணியில்- நீயும்
இன்றே புறப்படு - நன்றே
அகிலத்தை மாற்றிடு...!

திருமதி ஜெயந்தி பிரதீபன்
நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலயம்,
நானுஓயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறேன் !

இலங்கை நாட்டின் எங்கள் மலையக சமூகத்திற்கு ஓர் அங்கீகாரம் கிடைத்தமை உண்மையிலே நாங்கள் பெற்ற வரப்பிரசாதம். எங்களது கடந்து வந்த பாதையை நாங்கள் மீள் திரும்பிப் பார்த்தால், அந்த மனவேதனையை வார்த்தைகளால் எழுதி விட முடியாது. அப்படியான கசப்பான காயங்கள் அதிலும் வெற்றி கொண்டு வந்துள்ளமை எங்கள் முன்னோடிகளின் வழிகாட்டலே.

அந்தவகையில் எங்கள் மலையகக் கல்விச் சமூகத்திற்கு வழிவகுத்துக் கொடுத்த. வழிவகுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் நல் உள்ளங்களுக்கு எங்கள் மலையகத் தாயகம் சார்ந்த நன்றிகள்.

நானுஓயா நு/நாவலர் தமிழ் மகா வித்தியாலய ஆசிரிய பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வெளிவருகின்ற "நாதம்" எனும் சஞ்சிகையினை வெளியிட உதவிய தேசியக் கல்வி நிறுவக நிறுவன அபிவிருத்தித் துறை பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்க அவர்களுக்கும், ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளையின் பணிப்பாளர் திரு.எஸ்.முரளிதரன் அவர்களுக்கும் முதற்கண் எமது நன்றிகள்.

மேலும் இம் மலர் சிறப்பான முறையில் வெளிவர ஆசிச் செய்தியினை வழங்கிய மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் கௌரவ (திருமதி) அனுஷியா சிவராஜா அவர்களுக்கு எமது சிரம் தாழ்த்திய நன்றிகள் உரித்தாகும். அத்துடன் இம்மலரை அணிசெய்ய உவப்பானதொரு ஆசிச் செய்தியினை நல்கிய இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூகவிஞ்ஞான துறைத் தலைவா் ஏ.எஸ்.சந்திரபோஸ் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் எங்கள் ஆசிரியப் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் திரு.எம்.விஸ்வநாதன் அவர்களுக்கும் எங்களுடைய மதிப்பிற்குரிய விரிவுரையாளர்கள் மற்றும் எங்கள் ஆசிரிய மாணவர்களுக்கும் விஷேட நன்றிகள் உரித்தாகட்டும்

மேலும் இந்நூல் சிறப்பான முறையில் வெளிவருகின்றதென்றால் அது இந் நிலையம் அமைந்துள்ள இப் பாடசாலையின் கணினி வள நிலையமேயாகும். இச் சந்தர்ப்பத்தில் இந் நிலையத்தின் முகாமையாளர் திரு.G.குமாரவேல் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நேரம் பாராது, சிரமம் பாராது கணினி தட்டச்சு பதிப்பில் ஈடுபட்ட திரு.G.குமாரவேல் ஆசிரியர் அவர்கள், அவர்களுடன் இப்பணியில் ஈடுபட்ட பாடசாலை ஆசிரியர்கள் திரு.C.நிஷாந்தன், திரு.K.சத்தியகுமார், திருமதி.E.கரோலினா, திருமதி.S.ஜெயந்தி, கட்டுறுப் பயில்வு ஆசிரியைகள் செல்வி.D.யோகப்பிரியா, செல்வி.B.கமலேஸ்வரி ஆகியோர்கள் என்றென்றும் எங்கள் நன்றிக்குரியவர்களே.

மற்றும் அவ்வப்போது நிலையத்திற்கு சமூகமளித்து தட்டச்சுப் பதிப்பில் ஈடுபட்ட ஆசிரியர்கள் திரு.S.சதீஸ், திரு.R.அஜித்சிங், திரு.S.ஆம்ஸ்ட்ரோங், திரு.L.விஜயசுந்தரம், திரு.R.செல்வகுமார் ஆகியோர்களுக்கு விசேடமான நன்றிகள் உரித்தாகட்டும்.


மேலும் இம் மலருக்கு சிறப்பானதோர் அட்டைப்படம் தீட்டித் தந்த ஆசிரியர் திரு.A.ரிச்சர்ட் பெர்னாண்டோ அவர்களை இம் மலராக்கக் குழு சார்பாகப் பாராட்டுவதுடன், எம் அனைவர் சார்பான நன்றிகளையும் அவருக்குக் கூறிக் கொள்கின்றோம்.

நிறைவாக இம்மலர் நூலுருவில் வெளிவர நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த (.................. ) எங்களுடைய மன நிறைவான நன்றிகள் உரித்தாகட்டும்.

எஸ் பி. குணசேகரன்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : Jetro Park Road - Nuwara Eliya - 072-8088776